பக்கங்கள்: முப்பத்திரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 24 செவ்வாய்க்கிழமை (07.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 193



14
கூட்டமைப்பு அரசிடம் விலை போகாது



16
இந்தியாவின் கடும்போக்கால் திண்டாடும் மஹிந்த



24
இந்தியா வல்லரசு அல்ல



29
நடால் மீண்டும் சம்பியன்

# வெளிநாடுகளின் தலையீட்டுக்கு அரசியல் தீர்வில் இடமேயில்லை

## கொக்காவிலில் நேற்று ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 7

**"இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும். இதில் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடமளிக்க முடியாது. வடக்கு மற்றும் தென்பகுதி அரசியல் வாதிகள் இணைந்து தீர்க்கவேண்டிய விடயம் இது. அரசியல் தீர்வொன்றை மக்கள் மீது திணிக்க முடியாது"**


- இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

கொக்காவில் தொலைத் தொடர்புக் கோபுரத்தை நேற்றுக் காலை திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் தீர்வொன்றை மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்க முடியாது. மக்களின் மனங்களை இணைப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். எதிர்காலத்தில் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான தேவை இருக்காது. தற்போது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து பெற்றோர் சிந்தித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(31 ஆம் பக்கம் பார்க்க)



கொக்காவில் படைமுகாமில் இறந்த இராணுவத்தினரின் நினைவுத்தூபிக்கு முன்னால் நின்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அஞ்சலி செலுத்துகிறார்.

## உதயனை நம்பாதீர்கள்

### மஹிந்தாவின் ஆலோசனை

கிளிநொச்சி, ஜூன் 7

முன்னாள் போராளிகள் 900 பேரை இலங்கை அரசு நேற்று முன்தினம் விடுவித்ததாகவும் ஆனால் உதயன் பத்திரிகை தவறான செய்தியைப் பிரசுரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"ஊடகங்கள் அரசியல் லாபம் தேடுவதற்காகப் பிழையான தகவல்களைக் கொடுத்து மக்களைப் திசைதிருப்ப முனைகின்றன. புனர்வாழ்வளிக்கப்பட்ட 900 பேரை நாம் விடுதலை செய்துள்ளோம். ஆனால் இன்று (06/06/11) உதயன் பத்திரிகை அது பற்றித் தவறான செய்தியைப் பிரசுரித்துள்ளது" என்று ஜனாதிபதி கூறினார். கிளிநொச்சி, முறிகண்டி மைதானத்தில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, "முன்னாள் போராளிகள் 900 பேர் விடுவிக்கப்படுவார்கள் என்று இளைஞர் விவகாரம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

(31 ஆம் பக்கம் பார்க்க)

## தொழிலாளர் சம்பளம் உயர்வு

கொழும்பு, ஜூன் 7

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் நாளொன்றுக்கு 515 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தோட்டத் தொழிற்

(31 ஆம் பக்கம் பார்க்க)

## சரவணபவன் எம்.பிக்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, ஜூன் 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு தொலைபேசி மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறாவிட்டால் கொலைசெய்யப்படுவார் என்று அநாமதேய அழைப்பில் பேசிய ஒருவர் மிரட்டினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தரர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.25 மணியளவில் இந்த மிரட்டல் அழைப்பு விடுக்கப்பட்டது. தன்னை யார் என்று வெளிப்படுத்திக்கொள்ளாத மர்ம நபர் ஒருவர் தொலை பேசி அழைப்பை ஏற்படுத்தி தகாத வார்த்தைகளில் திட்டினார். "அரசுக்கும், அமைச்சர்களுக்கும் எதிராகக் கருத்து வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும். இரண்டு நாள்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறிவிடவேண்டும் இல்லை யேல் மரணதண்டனை விதிக்கப்படும்" என்றும் மிரட்டியதாக சரவணபவன் தெரிவித்தார்.

இந்தக் கொலை மிரட்டல் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டது. மிரட்டல் விடுத்தவரின் தொலைபேசி எண்ணும் பொலிஸாரிடம் வழங்கப்பட்டது. "உடனடியாக விசாரணை நடத்தி, குற்றவாளியைக் கைதுசெய்வோம்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வலி. வடக்குப் பகுதி மக்களுடன் சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றிவிட்டுத் திரும்பிய பின்னரே

(31 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்ப்போரை ஒடுக்க மஹிந்த அரசு முயற்சி

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 07

தமக்கு எதிரான அரசியல் கருத்துகளைக் கொண்டவர்களைசட்ட நடவடிக்கை மூல மாகவோ அல்லது சட்டத்துக்குப் புறம்பான வகையிலோ அடக்கி, தடுக்க அரசு இப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜயசூரிய விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அறிக்கையில் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தனியார்துறை ஊழியர் மீது பலாத்காரமாகத் திணிக்க முற்பட்ட ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிராக சில தினங்

(31 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தமிழ்ப் பாடசாலையில் புத்தர் சிலையை நிறுவ ஏற்பாடு

வவுனியா, ஜூன் 7

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிதாகப் புத்தர்சிலை ஒன்றை அமைக்க காணி வழங்குமாறு வித்தியாலய அதிபரிடம் கோரப்பட்டுள்ளது.

தனித்தமிழ் பாடசாலையாக இயங்கி வரும் இந்த வித்தியாலயம் 19 ஏக்கர் காணியில் அமைந்துள்ளது.

இந்தக் காணியின் சிறு பகுதி அரச காணியாகும். அந்தக் காணியைத் தருமாறே கோரிக்கை விடுவிக்கப்பட்டது.

தமிழ்ப் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலையில் புத்தர் சிலை வைப்பதா எனப் பாடசாலை பெற்றோர்கள் ஆதங்கத்துடன் கேட்கிறார்கள்.

வவுனியா நகரில் முக்கிய இடங்களில் புத்தர் சிலைகள் நிறுவப் பட்டு வரும் நிலையில் ஆஸ்பத்திரியில் சிலை வைக்கப் பட்டது. இப்போது தமிழ்ப் பாட சாலைக்கும் புத்தர் வரப்போகிறார் இது என்ன நியாயம் என்கின்றனர் வவுனியா நகர மக்கள்.(ஒ-ஐ)

## கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வது குறித்து ஆராய்வு

### நாளைமறுதினம் கொழும்பில் முக்கிய கூட்டம்

கொழும்பு, ஜூன் 7

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வது தொடர்பாக ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம் பெற இருக்கிறது.

கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பாக முன்னர் முயற்சி எடுக்கப்பட்ட

(31 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான காலநிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆனி 06, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7355.43↓
மிலங்கா(MPI) 6839.48↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4.9Bn
பங்குகளின் அளவு(No.) 611.51Mn
வியாபாரம்(No.) 26088
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
பான் ஏசியன் பவர் 8.30
அலுப(f)ப் 138.00
எஸ் எம் பி லீசிங் 0.60
புளுடயமன்ட் 4.90
ஏசியன் அலையன்ஸ் 153.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
செலிங்கோ இன்சுறன்ஸ் 770.00
கொமர்ஸல் சிரெடிட் 35.00
செறன்டிப் லேன்ட் 1500.00
கொன்பிபி ஹொட்டல் 306.00
கொழும்பு பார்மசி 2620.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

அக்கராயன் ஆஸ்பத்திரி ஊழியர் மரணம்

# கைதான டாக்டர், இரு ஊழியரும் நிபந்தனையின் பேரில் பிணையில்

கிளிநொச்சி,ஜூன்7

அக்கராயன் ஆஸ்பத்திரி ஊழியர் மரணமான சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட ஆஸ்பத்திரி டாக்டர் மற்றும் இரு ஊழியர்கள் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆஸ்பத்திரியின் சிற்றூழியர் ஒருவரை கட்டிவைத்த போது மரண்மான சம்பவம் தொடர்பாக அந்த ஆஸ்பத்திரியின் டாக்டர் மற்றும் இரு ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று மீண்டும் குறிப்பிட்ட மூவரும் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிவான் அவர்கள் மூவரையும் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான மூவரின் ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார்.

முறைப்பாட்டாளர்கள், சாட்சிகள் ஆகியோருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்றும் மாதத்தில் கடைசி ஞாயிறன்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-ஐ)

# பாழடைந்த கிணற்றிலிருந்து இளம் பெண் சடலம் மீட்பு

கிளிநொச்சி,ஜூன்7

கிளிநொச்சி நகரில் பரவிப்பாஞ்சான் பகுதியில் பாழடைந்த கிணற்றிலிருந்து இளம் பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் உள்ள மக்கள் வங்கியின் பின்புறமாகவுள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மக்கள் நடமாட்டம் குறைந்த அந்தப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற ஒருவரே குறித்த சடலத்தைக் கண்டுள்ளார். இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.விஜயராணி சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணைகளின் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி நகரில் யுவதி ஒருவர் காணாமற்போனதாக எவ்வித முறைப்பாடுகளும் செய்யப்படவில்லை என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-04-06-15)

# ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவார் மூன்

நியூயோர்க், ஜூன்7

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தனது இரண்டாவது பதவிக் காலத்துக்கு போட்டியிட உள்ளார். இவர் இது குறித்து நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என செய்திகள் வெளியாகி இருந்தன.

ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கு வேறு எவரும் போட்டியிடுவதாக இதுவரை அறிவிக்கவில்லை. 66 வய தான பான் கீ-மூன் தென் கொரியாவின் முன்னாள் வெளி விவகார அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் எதுவும் பான் கீ-மூனுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத நிலையில் அவர் மீண்டும் தெரிவாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. செயலாளரின் பதவிக்காலம் இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

(ஒ-சி)



எதிர்க்கட்சித் தலைவர் விக்கிரமசிங்கவின் தாயார் நாளனி விக்கிரமசிங்கவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 515 நாளாந்த சம்பளம்

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 7

தோட்டத் தொழிலாளரின் நாளாந்தச் சம்பளம் 515 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான கூட்டு ஒப்பந்தத்தில் தொழிற்சங்கங்களும், தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் நேற்று மாலை கைச்சாத்திட்டன என பொருளாதார பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளருக்கு நாளாந்த அடிப்படைச் சம்பளமாக 380 ரூபாவும், 75 சதவீத வேலை நாள்களுக்கு வருகை தருவதற்கான கொடுப்பனவாக நாளாந்தம் 105 ரூபாவாகவும், தேயிலை, றப்பர் விலைக்கான கொடுப்பனவாக நாளாந்தம் 30 ரூபாவுமாக மொத்தம் 515 ரூபா வழங்கப்படும்.

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கடந்த சில வாரங்களாகப் பேச்சுகள் இடம்பெற்று வந்தன. முதலாளிமார் சம்மேளனம் தொழிற்சங்கங்களின் அழுத்தத்துக்கு அடிபணிந்து இத்தொகைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் இதுவரை நாளாந்த சம்பளமாக 405 ரூபாவைப் பெற்று வந்தனர். இதில் அடிப்படைச் சம்பளம் 285 ரூபாவும், 75 சதவீத வருகைக்கான கொடுப்பனவாக 90 ரூபாவும் நிறைக்கான கொடுப்பனவாக நாளாந்தம் 30 ரூபாவும் வழங்கப்பட்டன. (ஒ-சி)

# யாழ். அரச அதிபரின் கருத்து தமிழரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது

மனச்சாட்சி குறித்தும் சிவாஜிலிங்கம் ஆச்சரியம்

கொழும்பு,ஜூன்7

கொழும்பில் நடைபெற்ற போர் அனுபவப் பகிர்வு மாநாட்டில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற போர் அனுபவப் பகிர்வு தொடர்பிலான கலந்துரையாடலில் கலந்து கொண்டு திருமதி இமெல்டா சுகுமார் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்த கருத்துக்கள் தமிழ் மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

மாவட்ட அரச அதிபர் என்பதன் விளக்கம் அரசாங்கத்தின் முகவர் என்பதே. அதனை தெளிவாக நிரூபித்துள்ள இமெல்டா சுகுமார் அரசாங்கத்தின் ஊதுகுழலாகச் செயற்படுவதை இனி மேலாவது நிறுத்தவேண்டும்.

வன்னியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை மனிதாபிமான நடவடிக்கை என வர்ணிக்க அந்த மக்களுடன் நீண்ட காலம் வாழ்ந்த அரசாங்க அதிபருக்கு எப்படி மனம் வந்தது.

வன்னியில் படுகாயமடைந்த 14ஆயிரம் மக்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் மூலம் திருகோணமலைக்கும், புல்மோட்டைக்கும் கொண்டு செல்லப்பட்டதை நியாயப்படுத்த எப்படி மனச்சாட்சி இடம் கொடுத்தது.

இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலில் தான் காயமடைந்ததை சொல்ல மறந்தாரா அல்லது சொல்ல மறுத்தாரா என்பதையும் அவர் தெளிவுபடுத்த வேண்டும். இனப்படுகொலை புரிபவர்களைக் காட்டிலும் அதனை நியாயப்படுத்த முனைபவர்களை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது.

வன்னியில் 70ஆயிரம் மக்கள்தான் சிக்குண்டுள்ளார்கள் என்று அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் மீண்டும் மீண்டும் கூறியபோது; முல்லைத் தீவு மேலதிக அரசாங்க அதிபராகவிருந்த பார்த்தீபன் மட்டும் 70ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3லட்சத்து 30 ஆயிரம் பேர் உள்ளதாக கூறியிருந்தார்.

எனவே அரசின் திட்ட மிட்ட மோசடிக்கு அந்தக் காலத்திலிருந்தே திருமதி இமெல்டா சுகுமார் துணைபோயிருக்கின்றார் என்பதை அக்காலத்தில் அவர் மௌனமாக இருந்ததன் மூலம் அறியமுடிகின்றது.

என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# நிகழ்வுகள்

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

நாடகமும் அரங்கியலும் கலைக்களும் பாடத்திட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆற்றல் விருத்திச் செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே யாழ்.வலயப் பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களை இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜெயபுரம் மகா வித்தியாலய மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான [illegible] தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

## வீரர்கள் கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

89ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு மாகாண மட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டு தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள யாழ். மாவட்ட வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கடற்படைத் தளத்தை சீனா அமைக்க முயற்சிக்கவில்லை

## சீனப் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

இணையச் செய்திகள்

இந்தியாவுக்கு அண்மையாகவுள்ள நாடுகளில் - குறிப்பாக இலங்கையில் - சீனா கடற்படை தளங்களை அமைக்க முயற்சிக்கின்றது என்ற கருத்தை சீனப் பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவான்கிலி மறுத்தார்.

10ஆவது ஆசிய பாதுகாப்பு உச்சி மாநாட்டின் ஒரு கூட்டத்தில் பாகிஸ்தானில் குவாடர் என்னும் இடத்திலும் இலங்கையின் ஒரு துறைமுகத்திலும் கடற்படைத் தளங்களை அமைக்க சீனா முயல்கின்றது என்று பரவலாக தெரிவிக்கப்படும் கருத்தை அவர் மறுத்தார்.

தென்னாசியப் பிராந்தியத்திலும் இந்து சமுத்திரத்திலும் சீனாவின் முக்கிய கவனம் எங்குள்ளது என அவரிடம் இந்திய அரசியல்வாதியொருவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர், அது சீனாவின் இறைமை, ஸ்திரத்தன்மை, அரசாங்க முறைமை என்பவை தொடர்பானவை. எனினும் இலங்கையிலோ, பாகிஸ்தானிலோ கடற்படைத் தளம் அமைக்கும் எண்ணம் சீனாவுக்கு ஒரு போதும் இருந்ததில்லை எனக்கூறினார்.

சீனா இப்போது சோஷலிஸ முறையைப் பின்பற்றுகிறது. இந்தப் பாதையில் தலையிடும் எதுவும் சீனாவின் நலனை பாதிப்பதாகும். சீனாவின் எந்தவொரு பகுதியையும் சீனாவிடமிருந்து பிரிக்கும் முயற்சிக்கு ஆதரவளிப்பதும், சீனாவின் நலனை பாதிப்பதாகும். சீனாவின் பொருளாதார சமூக அபிவிருத்தியில் தலையிடும் எந்தவொரு விடயமும் சீனாவின் இறையாண்மையைப் பாதிக்கும் விடயமாகவே கருதப்படும்.

நாம் பொருளாதார வளர்ச்சியில் பிரதான கவனம் செலுத்துகின்றோம். இராணுவத்தை முன்னேற்றுவதற்கு எமது வளங்களில் சிறிதளவையே பயன்படுத்துகின்றோம் என சீனப் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

(புதினப்பலகை)



கிளிநொச்சிக் கொக்காவில் தொலைத்தொடர்புக் கோபுரத்தை திறந்து வைப்பதற்காக நேற்று வருகைதந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ படையினரின் அணிவகுப்பை பார்வையிட்டபோது... (தமிழ்மிரர்)

### பொலிஸ் அத்தியட்சகரின் உதவியுடன்

# பொத்துவிலில் தமிழர் நிலங்களை அபகரிக்க முயன்றவர்கள் பொலிஸாரிடம் பிடிபட்டனர்

உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் அனுசரணையுடன் பொத்துவில் பிரதேசத்தில் தமிழ்மக்களின் குடியிருப்பு நிலங்களை அத்துமீறி அபகரிக்க முயன்ற பிரபல கட்டட ஒப்பந்தக்கார் அவருக்கு உதவி செய்த முஸ்லிம் ஒருவர் உட்பட 12 பேரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், புல்டோசர், லொறி என்பனவும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாகப் பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசந்தகுமார தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

கோமாரி மணற்சேனைப் பிரதேசத்தில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக 150க்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் 635 ஏக்கர் நிலம் தங்களுடையது என முஸ்லிம் இனத்தவர் ஒருவர் போலி ஆவணத்துடன் உரிமை கோரினார். பின்னர் ஆலையடிவேம்பு பிரதேசத்தை சேர்ந்த பிரபல கட்டட ஒப்பந்தக்காரரான றொபன் என்ற கோடீஸ்வரர் அக்கரைப்பற்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அடியாள்களுடன் சென்று இந்த நிலப்பரப்பில் 40 ஏக்கர் நிலத்தை தான் வாங்கியதாக போலி ஆவணத்தை காட்டி நிலத்தை அபகரிக்க முயன்றார். இந்தப் பகுதியில் அத்துமீறி எல்லை நிர்மாணப் பணிகளில் அவரது குழுவினர் ஈடுபட்டதுடன் பொதுமக்களையும் தாக்கியுள்ளனர்.

குறித்த நபர்கள் அடுத்த நாளும் அந்தப் பகுதிக்கு வந்து, நில அபகரிப்பில் ஈடுபட்ட போது மக்கள் ஒன்று திரண்டு எதிர்த்தனர். அத்துடன் மாவட்ட பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கும் இந்த விடயத்தைக் கொண்டுவந்தனர்.

இதையடுத்து மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்துக்கு, சென்று அத்துமீறி நில அபகரிப்பில் ஈடுபட்ட அனை வரையும் கைது செய்துள்ளதுடன் கைது செய்யப்பட்டவர் களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

(தமிழ்வின்)

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்க ஐரோப்பாவில் தொடர்ப்பட்ட வழக்கு விசாரணைக்கு

விடுதலைப் புலிகளுக்கெதிரான தடையை நீக்கக் கோரி ஐரோப்பிய நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கம் மீது விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று கோரி பிரஸ்தாப வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அம்ஸ்டர்டாமில் இயங்கும் பொஹ்லர் குரூப்பின் சட்டத்தரணி விக்டர் கொப்பே விடுதலைப்புலிகளின் ஐரோப்பிய பிரிவின் சார்பாக கடந்த வியாழக்கிழமை ஐரோப்பிய நீதிமன்றில் குறித்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தமது இலக்குகளை அடைவதற்கு இப்போது இராணுவ வழிமுறைகள் எதையும் பயன்படுத்துவதில்லை. முள்ளிவாய்க்கால் சம்பவத்துக்குப் பின்னர் அவர்கள் அரசியல் மற்றும் வன்முறையற்ற முறைகளைப் பயன்படுத்தியே தமிழர்களுக்கான அதிகாரப்பரவலாக்கலை அடைய முயற்சிக்கின்றார்கள்.

இலங்கை அரசுடன் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரை விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்தவே ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். தற்போது ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்துள்ள நிலையில் சாத்வீக போராட்டங்களின் ஊடாக அதனை அடைந்து கொள்ள விழைகின்றார்கள் என்று சட்டத்தரணி விக்டர் கொப்பே தனது வாதத்தை முன்வைத்துள்ளார்.

இந்த வழக்கு சாத[illegible]மான முடிவைத் தரும்பட்சத்தி[illegible]மிழ் புலம்பெயர்வாளர்கள் [illegible]ந்திரமான சமாதானமான [illegible]னநாயகச் செயற்பாடுகளைத் தாம் வாழும் நாடுகளில் சுதந்திரமாக முன்னெடுக்கக் கூடியதாக இ[illegible]க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(தமிழ்வின்)

# கொழும்பில் பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்கள் கனடாவிலுள்ள புலிகளுக்காகவே அனுப்பப்பட்டவை

### த ஐலண்ட் தகவல்

சென்னையிலிருந்து கனடாவுக்கு அனுப்பப்பட்ட போது கொழும்புத்துறைமுகத்தில் பறிமுதல் செய்யப்பட்ட 1,440 புத்தகங்களும் புலிகளின் தொடர்புகளுக்காகவே அனுப்பப்பட்டதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

மனிதம் இன்ரநஷனல் என்ற அமைப்பால் சென்னையிலிருந்து அனுப்பப்பட்ட கொள்கலன் ஒன்றில் இருந்த புத்தகங்கள் கொழும்புத் துறைமுகத்தில் வைத்துப் பறிமுதல் செய்யப்பட்டன. மனிதம் அமைப்பைச் சேர்ந்த அக்னி சுப்பிரமணியம் என்பவர் இந்தப் புத்தகங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தமிழக முதலவர் ஜெயலலிதாவைத் சந்தித்துள்ளார்.

கனடாவிலுள்ள புலிகளின் வழிகாட்டியாகக் கருதப்படும் முன்னாள் பாதிரியாரான அன்ரன் சின்னராசா என்பவருக்கே இந்தப் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த நபர் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அமைப்பின் தலைவராகவும் இருப்பதுடன் புலிகளின் தொடர்பாடல் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

மட்டுநகர் சிறையுடைப்பின் போது தப்பியவரான மேற்படி நபர் புலிகளின் முக்கியமான குடும்பம் ஒன்றில் திருமணம் செய்துகொண்டவர். நோர்வேயில் அகதியாக இருந்து பின்னர் கனடாவுக்கு வந்தவர்.

இந்தப் புத்தகங்கள் அனுப்பப்பட்ட முகவரி கனேடியப் புலிகளுக்குச் சொந்தமானது என்றும், சி.எச்.ஆர்.வி.டபிள்யூ என்ற நிறுவனமே இந்த முயற்சிக்குப் பாவிக்கப்பட்டதாகவும் இலங்கைப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

இந்த நபர் கனடாவில் ஒரு சமூகசேவை செய்பவராக தன்னை இனங்காட்டியுள்ளார் - என்று த ஐலண்ட் பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தமிழ்வின்)

# ருவாண்டாவில் இனப்படுகொலை செய்த இராணுவத் தளபதிக்கு 30 வருட சிறைத் தண்டனையை வழங்கினார் இலங்கை நீதிபதி

ருவாண்டாவில் இனப்படுகொலைகளை மேற்கொண்ட அந்த நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி அகஸ்டின் பிசிமுங்குவுக்கு ஐ.நாவின் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் 30 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

ருவாண்டாவுக்கான ஐ.நாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அங்கம் வகிக்கும் இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவே இந்தத் தண்டனையை வழங்கியுள்ளார்.

1994ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்காக ருவான்டாவின் முன்னாள் இராணுவத் தளபதி மற்றும் இரண்டு மேஜர் ஜெனரல்கள், பொலிஸ் துணைப்படையின் தலைவர் ஆகியோருக்கு எதிராக 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி இந்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

2009 ஜூன் 9ஆம் திகதி வரை 395 நாள்கள் நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர், இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.


250 சாட்சிகள் இந்த நீதிமன்றத்தின் முன்பாக சாட்சியமளித்தனர். இந்தச் சாட்சியங்களுக்கு மேலதிகமாக 300 தொடக்கம் 400 வரையான ஆவணங்களையும் பரிசீலித்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டதாக தீர்ப்பை வழங்கிய இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா கூறியுள்ளார்.

ருவாண்டாவில் 1994ஆம் ஆண்டு 100 நாள்களில் சுமார் எட்டு இலட்சம் ருட்சி மற்றும் ஹூட்டு இன[illegible]ள் படுகொலை செய்யப்பட்டனர்.

ருவாண்டாவின் முன்னாள் அதிபர் பயணம் செய்த விமானம் தலைநகர் கிகாலியில் சுட்டுவீழ்த்தப்பட்டதை அடுத்தே இந்த இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நேற்றுக்காலை குடமுழுக்கு இடம்பெற்றது. கும்பங்கள் வீதியுலாவாக எடுத்துவரப்படுகின்றன. கோபுரத்துக்கும் குடமுழுக்கு இடம்பெறுகிறது. (ம-250)

# மது விற்ற இலங்கையருக்கு சவூதியில் 430 கசையடிகள்

ஜித்தா, ஜூன் 07

சவூதி அரேபியாவில் மது அருந்திவிட்டு மதுபானம் விற்ற இலங்கையருக்கு 430 கசை அடிகளை வழங்கும்படி அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சவூதி அரேபியாவின் தெற்கு நகரமான டைப் பகுதியில் இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சவூதி பொலிஸார் இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவருக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 430 கசையடிகளும் வழங்கும்படி உத்தரவிட்டது.

குடிபோதையில் இருந்ததற்காக 80 கசையடிகளும், மதுபான விற்பனையில் ஈடுபட்டதற்காக 350 கசையடிகளும் வழங்க உத்தரவிடப்பட்டது. 350 கசையடிகளை 70 கசையடிகள் வீதம் ஐந்து தடவைகள் வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஒ-சி)

# குடும்பிமலைக் காட்டில் வெடி பொருள்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 7

மட்டக்களப்பு-குடும்பிமலை காட்டுப் பிரதேசத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்குப் பயன்படுத்தும் 500 ரவைகள் மற்றும் ரீ 56 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தும் ஆயிரத்து 300 ரவைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்றின் உதிரிப்பாகங்களும் கண்டெடுக்கப்பட் டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தின் ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவிக்கிறது.

இப்பிரதேசத்தில் தேடுதல்களைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-22)

# தனியார்துறை சேமலாப நிதி முதலீடுகள் அரச வங்கிகளிலேயே செய்யப்பட வேண்டும்

கொழும்பு, ஜூன் 7

தனியார்துறை சேமலாப நிதிகளில் 40 வீதமானவை அரச வங்கிகளில் முதலீடு செய்யப்படவேண்டும் என்று அரசு சகல தனியார் துறை சேமலா பநிதித்துறையினருக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

முதலீட்டு ஆபத்துக்களை குறைப்பதற்காகவும் உறுப்பினர்களின் பங்களிப்பை பாதுகாப்பதற்காகவும் இந்த ஏற்பாடு செய்யப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தொழில் துறையினர் மத்தியில் கவலையை தோற்றுவித்திருப்பதாகத் தெரிவிக்கின்றது தொழில் அமைச்சின் தனியார்துறை சேமலாப நிதிய ஆணையாளர் யு.பி.ஆர் சிறிநாக தெரிவிக்கையில் இந்த நிதிகளில் 40 வீதத்தை அரச வங்கிகளில் முதலீடு செய்யவேண்டும் என்ற அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று கூறினார். இதுவரை காலமும் இந்த நிதிகள் திறைசேரி பில்களாகவும் அரச முறிகளாகவும் அரச பாதுகாப்பில் இருப்பு வைக்கப்பட்டு வந்துள்ளன. இதுவரை காலமும் இவை முறையாக பேணப்பட்டு வந்துள்ளன. முறைகேடுகளோ, நிதிகையாடல்களோ நடந்ததாக இதுவரை இல்லை என்று அவர் தெரிவித்தார்.

தற்பொழுது அவ்வாறான 172 நிதிகள் பேணப்பட்டு வருகின்றன. இதன் சொத்துப் பெறுமதி ரூ 210 பில்லியன் என்று கருதப்படுகின்றது. இதில் 150, 000 உறுப்பினர்கள் உள்ளனர்.

தொழில் கொள்வோரால் சேமலாபநிதிகள் சேமிப்பு நிதிகள், ஓய்வூதிய நிதிகள் நம்பிக்கை நிதிகள் மற்றும் ஏனைய எந்த நிதிகளும் தொழில் கொள்வோரின் வருடாந்த சம்பளப் பட்டியலான 25 வீதத்துக்கு அதிகமாக இருக்கலாகாது. மற்றும் இந்த நிதிகளில் இருந்து முதலீடுகள் செய்யப்படும் போது 40 வீதம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் திறை சேரியில் வைப்பிலிடப்பட வேண்டும் என்று அரசு அறிவித்திருந்தது. 20 வீதம் இந்த நிதிகளில் இருந்து ஸ்டொக் மார்க்கட்டில் அல்லது வர்த்தக வங்கிகளில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# கோண்டாவில் நூலகத்துக்கு நூல்கள் கையளிக்கலாம்

நூலக வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கோண்டாவில் பொது நூலகத்துக்கு எழுத்தாளர்கள், நிறுவனங்கள், நலன்விரும்பிகளிடமிருந்து நூல்கள் அன்பளிப்பாகக் கோரப்படுகின்றன.

இந்த நூலகத்தின் உத்தியோகத்தர்கள் தலைமையில் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்றிட்டத்துக்கு தற்போது எழுத்தாளர் க.குணராசா (செங்கைஆழியான்), அராலியூர் சுந்தரம்பிள்ளை உட்பட இந்து சமயக் கலாசார அலுவல்கள் அமைச்சு ஒரு தொகை நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-313)

DANISH DEMINING GROUP

## DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operations in Sri Lanka since 2003. Presently the work force consists of 400 personnel which is expected to increase to 470, including deminers. DDG presently operates in Jaffna, Killinochchi and Vavuniya districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas.

1. Vacancy Announcement - Camp Administrator – Jeyapuram

The position is based in Jeyapuram. As a Camp Administrator in the organization the main responsibilities would be:

**Administration**

a. Be responsible to coordinate all day to day LOG/ ADMIN / HR related activities at the field camp/s in Vavuniya and to report to the Jaffna Office accordingly.
b. Fully responsible and for security of the DDG camp compound and assets and maintenance of the camp and the assets.
c. Maintain and report all field asset data on monthly basis to the Jaffna Operational office.
d. Fully responsible to arrange and allocate the field vehicles with the approval of the Logistics Officer.
e. Be Familiar with DDG policies and procedures in relation to purchase and delivery.
f. Ensure that Attendance sheets are properly marked daily and are in order
g. Receive all new items and keep proper records of it.
h. Issue consumable items & equipment on request and keep proper records of it.
i. Keep proper records of all items requiring repair and co-ordinate with the Logistics Officer re their repair and return. .

**Supply**

a. Fully responsible of the Store / Warehouse in the Camp
b. Day to day management of the field vehicles in the Camp.
c. Ensure storerooms are well organised, clean and secure at all times (includes fire hazards, storage of hazardous materials and response procedures).
d. Assist the Logistics Manager/Logistics Officer to conduct inspections of warehouse/s.
e. Issue and receive items of equipment inspecting every item for cleanliness and serviceability.
f. Maintain the field Store stock cards for all the types of items that have been received, transited, or remain within the storerooms.
g. Assist the Logistics Officer to verify the description of problems relating to items that have been received for repair and send them to Jaffna Office.
h. Assist the Logistics Officer to conduct a weekly 10 item stock check.
i. Provide information on the availability of items from the inventory to the Logistics Officer when requested.
j. Assist the Logistics Officer to conduct an annual, 100% fixed assets and inventory check of all items in the Field.

MINIMUM QUALIFICATIONS AND EXPERIENCE REQUIRED:

- Sri Lankan National
- Completed Secondary School Education.
- HR management, Inventory and stock control skills
- Ability to work proactively and with initiative.
- Team approach.
- Good interpersonal skills.
- Flexible, reliable and trustworthy.
- Good level of English & Tamil (verbal and written) and at least basic level in Sinhala Language.
- 3 years' work experience at a supervisory level, preferably in the field of Administration and/or Logistics.

How to Apply

Applications should accompany a cover note to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non related referees to the following address by 13th June 2011.

Only candidates who meet all the above requirements will be invited for an interview/test.

DANISH DEMINING GROUP

## கிளிநொச்சி நகரில் வீடு வாடகைக்குத் தேவை

1.House wanted (to use as a Guest House) in Kilinochchi area

We are looking for a house for rent with 3 or 4 rooms and within 1 - 3 km from Kilinochchi town with basic facilities.

Please send your offers to the address given below with following supporting documents such as a sketch of the house layout, expected rent per month etc and two contact telephone numbers by 14th June 2011.

DANISH DEMINING GROUP
456. Main Street,
Chundukuli,Jaffna
E-mail: jafofficemgr@ddg.lk

சீட்டிழுப்பு இல. 2402
திகதி 05.06.2011

## மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: C வெற்றி எண்கள்: 5 4 6 9 8 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 5 | 4 | 6 | 9 | 8 | 9 | ரூபா. | 15,729,560/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 5 | 4 | 6 | 9 | 8 | 9 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 4 | 6 | 9 | 8 | 9 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 6 | 9 | 8 | 9 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 80 |
| 4ம் பரிசுகள் | | | | | 9 | 8 | 9 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 782 |
| 5ம் பரிசுகள் | | | | | | 8 | 9 | ரூபா. | 100/= | பரிசுகள் | 7,868 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. | 20/= | பரிசுகள் | 78,130 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 5 | 4 | 6 | 9 | 8 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 5 | 4 | 6 | 9 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 79 |
| 9ம் பரிசுகள் | | 5 | 4 | 6 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 802 |
| 10ம் பரிசுகள் | | 5 | 4 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 7,802 |
| 11ம் பரிசுகள் | C | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 31,185 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 16,027,994.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,994,400.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இருசிறுபான்மை இனங்களிடையே இப்போது தேவை புரிந்துணர்வே

கடந்த ஒன்றேகால் வருடத்தில், இலங்கை மக்களின் வாக்குகளுக்குப் பெரும் பெறுமதியும் மதிப்பும் ஏற்பட்டிருந்தன. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் என்று மூன்று முக்கிய தேர்தல்கள் சில மாத இடைவெளிகளில் நடைபெற்றன.

ஜனாதிபதித் தேர்தல் 2010 ஜனவரியிலும் பொதுத் தேர்தல் அதே ஆண்டு ஏப்ரலிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இவ்வருடம் மார்ச் மாதத்திலும் நடைபெற்றன. அதனால் வாக்காளர்களை, பொது மக்களை அரசியல் வாதிகள் தேடித்திரிந்து கும்பிடு போட்டு வாக்கு வேட்டை நடத்தும் காட்சிகளை அடிக்கடி காணமுடிந்தது. அதன் மிச்ச சொச்சமாக, நீதிமன்ற வழக்கு மற்றும் ஒத்திவைப்புக் காரணமாக வாக்குப் பதிவு நடைபெறாத பத்தொன்பது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் இருபத்துமூன்றாம் திகதி நடைபெறவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 நகரசபைகளுக்கும் 13 பிரதேச சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பிரதேச சபைகளுக்குமாக 19 சபைகளுக்கும், கிழக்கில் அம்பாறை மாவட்டத்திலும் திருகோணமலையிலுமாக 6 பிரதேச சபைகளுக்கும் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இன்னும் ஆறு வாரங்களில் நடைபெறவுள்ள குட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்காளர்களிடம் வாக்குகளை வாங்கிக்கொள்வ தற்கான பிரசாரங்கள் தொடங்கி விட்டன. தெற்கிலும் சரி வடக்கிலும் சரி வாக்காளர்களைத் தமது பக்கம் சாய்ப்பதற்கான தேர்தல் மந்திர தந்திரங்களை அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் உச்சரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த வேளையில் -

ஏனைய சிறுபான்மை முஸ்லிம் அரசியல் கட்சிகளைப் போன்று சொந்தக்காலில் தனித்து நிற்கத் துணிச்சல் இல்லாது, தமது கட்சியில் போட்டியிடத் தைரியம் இல்லாது-

முழுமையாக வெற்றிலைச் சின்னத்தின் பின்னால் மறைந்து கொண்டு வாக்குப்பிச்சை கேட்கவேண்டிய அவசியம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடையாது என்று தனது கட்சிக்குள்ள மக்கள் ஆதரவைப் பிரலாபித்திருக்கிறார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

ஏனைய சிறுபான்மை முஸ்லிம் கட்சியினர் செய்வதைப் போன்று, எதற்கு எடுத்தாலும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் துதி பாடிக் கொண்டு, கூஜா தூக்கிக்கொண்டு, அவரது கால்களில் சாஷ்டாங்கமாக விழவேண்டிய தேவை முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடையாது - என்று தமது கட்சிக்குள்ள வாக்குப் பலத்தை விவரிக்கிறார் அமைச்சர் ஹக்கீம்,

மஹிந்த அரசாங்கத்தில் முக்கியமான அமைச்சர் பதவியை வகித்து வரும் ரவூப் ஹக்கீம் தமது கட்சிக்குள்ள பலத்தை அடித்தளமாக வைத்து மிகத் துணிச்சலுடனும் அர்த்தபுஷ்டியுடனும் இவ்வாறு விவரித்திருக்கிறார். இத்தனைக்கும் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தமது கட்சி ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிராகப் போட்டியிட்டு, சிறுபான்மையினர் செறிந்துவாழும் ஆதரவுத் தளங்களில் அவரதும் அவரது கட்சியினதும் வெற்றியைத் தடுத்து நிறுத்தித் தாம் வெற்றி பெற்றதையும் அவர் ஞாபகப்படுத்துகிறார்.

ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் நிலைமை அவ்வாறில்லை. அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் தமது கட்சிகளின் சின்னங்களை பறிகொடுத்து வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிட நிர்ப்பந் திக்கப்பட்டார்கள். அவ்வாறு இல்லையேல் அவர்கள் அரசியலில் இருந்து ஓரங்கட்டப்படும் நிலைமை தோன்றியிருக்கும். எல்லாம் பதவி ஆசையின் கோலம்!

இதேவேளை-

இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக விளங்குவது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே என்பது உண்மையான சங்கதி. அதனால் தமது கட்சியை, அரசாங்கத்துடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நடத்தும் பேச்சு வார்த்தையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

இதனையடியொற்றி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்த கருத்து இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்:

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்குடன் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தும் பேச்சுக்களில் முஸ்லிம்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது நியாயமான நிலைப்பாடாகும்.

தமிழ் மக்கள் தரப்பில் பேசுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இருப்பது போல முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே உள்ளது.

அரசு முஸ்லிம்களை புறக்கணித்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் புறக்கணிக்காது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே அன்னியோன்யமான உறவும் புரிந்துணர்வும் உள்ளன. இது வெளிப்படையான ஒன்று.

வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகம் என்பது எமது நிலைப்பாடு.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுசெய்துள்ளது போலவே முஸ்லிம் மக்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை தெரிவு செய்துள்ளனர்.

நாங்கள் முஸ்லிம் காங்கிரஸுடன் தொடர்ச்சியான பேச்சுக்களையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகிறோம். வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களை எங்களுடன் இணைந்த சமூ கத்தினராகவே நாம் பார்க்கிறோம். அரசிடம் இருந்து தீர்வைப் பெறும் போது அதில் முஸ்லிம் மக்களும் பங்காளிகளாக இருப்பர் - என்று விளக் கமாக விவரித்திருக்கிறார் கூட்டமைப்பின் பா.அரியநேந்திரன்.

வடக்குக் கிழக்கு வாழ் மக்களின் அரசியல் மற்றும் நிர்வாக உரிமைகள் உரிய அளவில், சரியான வடிவில் கிடைப்பதற்கு இரண்டு சிறுபான்மை இன மக்களிடமும் புரிந்துணர்வும் ஒற்றுமையும் அன்னியோன்யமும் அவசியம் தேவைப்படுகிறது. அதேபோன்று தேவையற்ற முறையில் உருவாக்கப்படும் சந்தேகங்களும் மனக்கசப்புகளும் நீக்கப்பட வேண்டும்.

அந்த வழி செல்வதற்கு, அடுத்த மாதம் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல் வழிசெய்ய இரு தரப்புகளும் மனங்கொண்டு செயற்படுவார்களாக.

## மக்கள் போராட்டங்களின் போது பொலிஸாரின் கடமைகள் என்ன?

### விரைவில் வருகிறது குறிப்பேடு

கொழும்பு, ஜூன் 7

பொது மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களின் போது பொலிஸார் தமது கடமைகள், பொறுப்புக்களை மேற்கொள்ளும் விதம் பற்றிய பணிப்புரைகள் மற்றும் ஆலோசனைகளை உள்ளடக்கும் குறிப்பேடு ஒன்றை வெளியிடுவதற்கு பதில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கைக்கோன் தீர்மானித்துள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் செயற்படவேண்டிய சட்டங்களுக்கு அமைவான மற்றும் ஒழுக்கங்கள், பண்புகள் பேணப்படும் விதங்கள் குறித்து இந்தக் குறிப்பேட்டின் மூலம் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்படவுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் கொழும்பின் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அண்மையில் கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் இடம் பெற்ற சம்பவத்தில் பொலிஸ் தரப்பில் ஏற்பட்ட குறைபாடுகள், சீர்கேடுகள் பற்றி ஆராய்வதற்கு விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனவும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றம் புரிந்துள்ளதாக நிரூபிக்கப்படின் அவர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் இலங்கைக்கோன் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பிரதேசத்தில் தற்போது அமைதி நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-22)

## கல்வித்துறையில் 4,000 நியமனங்கள் நாடளாவிய ரீதியில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 7

நாடளாவிய ரீதியில் கல்வித்துறை சார்ந்த 4 ஆயிரம் நியமனங்கள் இடம்பெறவுள்ளன.

1000 புதிய அதிபர்கள், 1000 தகவல் தொடர்பாடல் ஆசிரியர்கள், 1000 ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் 1000 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமனம் பெறுவர். கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு அறிவித்துள்ளார்.

பிரதேச செயலர் ரீதியாக தெரிவு செய்யப்படும் விவரங்களைக் கொண்டே 2012 இல் இருந்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக நாடளாவிய ரீதியில் 1000 பாடசாலைகள் அபிவிருத்திசெய்ய இனம் காணப்பட்டுள்ளன.

உட்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் முடிவுற்ற பின்னர் ஏனைய நியமனங்கள் படிப்படியாக இடம்பெறும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(த-302)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான 2 ஆம் கட்டப் பயிற்சி 15 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட தலைமைத்துவப் பயிற்சி எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இவ்வாறு அறிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், இராணுவ முகாம்களில் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகள் வெற்றியளித்து வருகின்றன.

இந்த வெற்றியின் மூலம் நாடளாவிய ரீதியில் மேலும் புகுமுக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சி வழங்க ஆள்சேர்ப்பு செய்யவுள்ளோம்.

இவ்வாறு இந்தப்பயிற்சி தொடர்ந்து இடம் பெறும் -என்றார். (த-302)

## தேசிய பெண்கள் ஆணையம் விரைவில் அமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 7

இலங்கையில் பெண்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக ஆண்,பெண் இருபாலாரையும் உள்ளடக்கிய 'தேசிய பெண்கள் ஆணையம்'' ஒன்றை அமைக்கவுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

சட்டம், ஆரோக்கியம், கல்வி, விஞ்ஞானம், சுற்றுச்சூழல், தொழில் உறவு, உளவியல் உட்பட 10 விடயங்களை கவனிப்பதற்காக அமைக்கப்படவிருக்கும் இந்த ஆணைக்குழு 5 பெண்களும், 4 ஆண்களும் என மொத்தம் 9 பேர் அங்கம் வகிக்கத்தக்க வகையில் அமையவுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார துணை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கூறினார்.

ஏற்கனவே பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகப் பெண்களை மட்டும் கொண்ட தேசிய மகளிர் செயலகம், இலங்கை மகளிர் பணியகம் ஆகியன இருக்கின்றபோதிலும் அவற்றில் பெண்கள் மட்டுமே அங்கம் வகிப்பதால் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாகவே உத்தேச ஆணைக்குழு ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கியதாக அமையவிருக்கின்றது என்றும் துணை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள இலங்கை மகளிர் பணியகத்தின் அதிகாரங்களை பறிப்பதாகவோ அல்லது குறைப்பதாகவோ இந்த ஆணைக்குழு அமையமாட்டாது என்றும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் விடயத்தைப் பொறுத்தவரை தனது அமைச்சு இந்த அரசாங்கத்துடன் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த விருப்பதால் உத்தேச ஆணைக்குழுவின் நோக்கத்தில் அது உள்ளடக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் இல்லை என்றும் அவர் கூறினார். (த)

## பழுதடைந்த 22 கிலோ மீன் அழிப்பு

கல்வியங்காடு செங்குந்தா சந்தையில் மனித பாவனைக்குதவாத பழுதடைந்த 22 கிலோ நிறையுடைய மீன் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அழிக்கப்பட்டது.

கடந்த 2 ஆம் திகதி மேற்படி சந்தைக்கு விரைந்த யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அங்கு திடீர்ப் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இந்தத் திடீர்ப் பரிசோதனையின்போது மனித பாவனைக்குதவாத வகையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மீன்களைக் கைப்பற்றினர். அங்கு கைப்பற்றப்பட்ட சுமார் 22 கிலோ நிறையுடைய மீன்வகைகளும் அழிக்கப்பட்டன. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுத்த வெற்றியைக் குறிக்கும் கொடிகள் வழங்கி

# குடாநாட்டு மாணவரிடம் நிதி சேகரிப்பு; பெற்றோர், ஆசிரியர்கள் கடும் அதிருப்தி

யாழ்ப்பாணம்,ஜூன் 7

வன்னி யுத்த வெற்றியைக் குறிக்கும் வகையில் சிங்கள மொழியிலமைந்த கொடிகள் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு நிதி சேகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மே 27 ஆம் திகதி முல்லைத்தீவில் இடம்பெற்ற பாதுகாப்புப் படையினரின் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களையொட்டி இந்தக் கொடிகள் தயாரிக்கப்பட்டதாகவும் வலயக் கல்வித் திணைக்களங்களூடாகக் குடாநாட்டின் பாடசாலைகளுக்கு இவை வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களிடமிருந்து இந்தக் கொடி விற்பனை மூலம் நிதி சேகரிக்கப்பட்டு அந்த நிதி பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.




இந்தச் செயற்பாடு தொடர்பாகப் பெற்றோர், ஆசிரியர்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எமது உறவுகளின் அழிவுக்கு காரணமானவர்களுக்கு நாம் நிதியுதவி செய்ய வேண்டுமா? என வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்தில் வந்து தங்கியுள்ள பெற்றோர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இந்தக் கொடிகளில் தமிழ் மொழியில் ஏதும் குறிப்பிடப்படாததனால் இவை என்ன? எதற்காக விற்கப்படுகிறன? என்ற தெளிவும் இல்லாமல் அதிபர்களும் பாடசாலை மாணவர்களும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இனங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டையும் அரச கரும மொழிகள் பயன்பாட்டையும் கண்காணித்து அவற்றை அமுல்படுத்தும் பொறுப்பு சிரேஷ்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மூத்த அரசியல்வாதியான வாசுதேவ நாணயக்கார ஆரம்பம் முதலே சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர். இந்த நிலையில் இந்த விடயத்தில் அவர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்ற கேள்வி எழுந்துள்ளது. (த-2)

### நம்பிக்கையற்ற மின்சாரம்....




அவசர தேவைக்காக: யாழ்.போதனா வைத்தியசாலையின் பாவனைக்கென மிகப் பெரிய மின்பிறப்பாக்கி ஒன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இந்த மின்பிறப்பாக்கியை வைத்தியசாலை வளாகத்தில் பொருத்தும் பணிகள் நேற்று இடம்பெற்றன. (த-319)

## 'ஹைஏஸ்' வானுக்கு தீ வைப்பு

வண்ணை,ஜூன் 7

குருநகர் கொண்டடி வீதியில் நிறுத்தப்பட்டிருந்த 'ஹைஏஸ்' வானொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் விசமிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தை வதிவிடமாகக் கொண்ட இளவாலை, மாரீசன் கூடலைச் சேர்ந்த அருளானந்தம் என்பவரின் வானே தீயிட்டுக்கொளுத்தப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்பாகவே அந்தப் பகுதி வீடொன்றில் வாடகைக்குக் குடி வந்த அவரது குடும்பம் மேற்படி வானைக் கொண்டே ஜீவனோபாயம் செய்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-160)

# 19 சபைகளுக்கு 229 பேரைத் தெரிவு செய்ய 1,169 வேட்பாளர்கள் யாழ்.தேர்தல் களத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன் 7

யாழ்.தேர்தல் மாவட்டத்திலுள்ள 19 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் 229 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் 1,169 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் உள்ளனர்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் ஜனவரி மாதம் இடம்பெற்றது. இதன் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் அந்த வேட்பு மனுக்கள் தேர்தல் ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

வல்வெட்டித்துறை நகர சபைக்கு 9 பேரைத் தெரிவு செய்வதற்கு 48 வேட்பாளர்களும் பருத்தித்துறை நகர சபைக்கு 9 பேரைத் தெரிவு செய்வதற்கு 60 வேட்பாளர்களும் சாவகச்சேரி நகரசபைக்கு 11 பேரைத் தெரிவு செய்வதற்கு 60 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

காரைநகர் பிரதேச சபைக்கு 5 பேரைத் தெரிவு செய்வதற்கு 28 வேட்பாளர்களும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு 5 பேரைத் தெரிவு செய்வதற்கு 21 வேட்பாளர்களும் நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு 9 பேரைத் தெரிவு செய்வதற்கு 36 வேட்பாளர்களும் வேலணை பிரதேச சபைக்கு 11 பேரைத் தெரிவு செய்வதற்கு 45 வேட்பாளர்களும்,

வலி.மேற்குப் பிரதேச சபைக்கு 14 பேரைத் தெரிவு செய்வதற்கு 57 வேட்பாளர்களும் வலி.வடக்குப் பிரதேச சபைக்கு 21 பேரைத் தெரிவு செய்வதற்கு 81 வேட்பாளர்களும் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு 16 பேரைத் தெரிவு செய்வதற்கு 63 வேட்பாளர்களும் வலி.தெற்குப் பிரதேசசபைக்கு 16 பேரைத் தெரிவு செய்வதற்கு 63 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

வலி.கிழக்கு பிரதேச சபைக்கு 21 பேரைத் தெரிவு செய்வதற்கு 108 வேட்பாளர்களும், வடமராட்சித் தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு 18 பேரைத் தெரிவு செய்வதற்கு 96 வேட்பாளர்களும் பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு 9 பேரைத் தெரிவு செய்வதற்கு 48 வேட்பாளர்களும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு 15 பேரைத் தெரிவு செய்வதற்கு 120 வேட்பாளர்களும்,

நல்லூர் பிரதேச சபைக்கு 12 பேரைத் தெரிவு செய்வதற்கு 48 வேட்பாளர்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 9 பேரைத் தெரிவு செய்வதற்கு 48 வேட்பாளர்களும் கரைச்சி பிரதேச சபைக்கு 19 பேரைத் தெரிவு செய்வதற்கு 100 வேட்பாளர்களும் பூநகரிப் பிரதேச சபைக்கு 10 பேரைத் தெரிவு செய்வதற்கு 39 வேட்பாளர்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். (த-15)

## அரியாலையில் கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும் கமநல சேவைகள் நிலையம்

கொழும்புத்துறை,ஜூன் 7

அரியாலைப் பகுதியில் இடப்பெயர்வை அடுத்து மக்களால் கைவிடப்பட்டு கட்டாக்காலிகளாக அலையும் மாடுகளைப் பிடித்து மக்களிடம் ஒப்படைக்கும் பணிகளை நல்லூர் கமநல சேவைகள் நிலையம் மேற்கொண்டுள்ளது.

கிழக்கு அரியாலை, பூம்புகார், நாவலடிப் பகுதிகளில் உள்ள காடுகளில் உள்ள கட்டாக்காலி மாடுகள் இவ்வாறு பிடிக்கப்பட்டு வருகின்றன.

10 வருடங்களுக்கு முன்னர் இடப்பெயர்வின்போது இந்தப் பகுதியில் வளர்த்து வந்த பட்டி மாடுகளை மக்கள் கைவிட்டு வெளியேறினர். அவை இப்போது பெருகிப் பல நூற்றுக் கணக்கில் அலைந்து திரிகின்றன.

கடந்த ஆண்டு இந்தப் பகுதி விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட போது கட்டாக்காலி மாடுகள் அங்கு செய்கை பண்ணப்பட்ட பயிர்களை அழித்தன.

இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டனர். இதன் காரணமாக இந்த முறை பெரும்போகத்துக்கு முன்னர் இந்தக் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

பிடிக்கப்பட்ட மாடுகள், முன்னர் மாடுகள் வளர்த்து வந்த குடும்பங்களுக்குத் தலா 2 பசு மாடுகள் வீதம் வழங்கப்பட்டு வருகின்றன. கட்டுக்கடங்காத சுமார் 50 காளை மாடுகள் பட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டது. (ம-13)

# மானிப்பாய் கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வுபெற்ற ஊழியர்கள் அந்தரிப்பு

### கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படவில்லை

சண்டிலிப்பாய்,ஜூன் 7

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஓய்வுபெற்ற, விலகிய ஊழியர்களின் வேதனம், பணிக்கொடை, பிணைப்பணம் உட்பட சகல கொடுப்பனவுகளும் பல மாதங்களாகியும் வழங்கப்படவில்லை.

இது குறித்து விசனமும் அதிருப்தியும் தெரிவித்துள்ள ஊழியர்கள் கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக அரச அதிபர், யாழ்.மனித உரிமை ஆணைக்குழு உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியை நாடியுள்ளனர்.

நிதி நிலைமை காரணமாகத் தொடர்ந்து இயங்க முடியாத நிலையிருந்த மேற்படி சங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் முயற்சியால் மட்டுப்படுத்தப்பட்ட கிளைகளுடனும் ஊழியர்களுடனும் தற்பொழுது இயங்கி வருகிறது.

மேற்படி சங்கத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்கள், சங்கத்தின் நிலைமை காரணமாக பதவியிலிருந்து விலகிய ஊழியர்கள் உட்பட 16 ஊழியர்களுக்கான கொடுப்பனவை சங்கம் வழங்காமல் இழுத்தடித்து வருகின்றது. ஊழியர்களின் நான்கு மாத வேதனம், பணிக்கொடை, வாழ்வாதாரப்படி, பிணைப் பணம், ஐக்கிய நாணய சங்கத்தின் சேமம், ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் கொடுப்பனவு உட்பட சகல கொடுப்பனவுகளும் பல மாதங்களாகியும் வழங்கப்படவில்லை.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இந்த நேரத்தில் வருமானமின்றி அல்லற்படும் ஊழியர்களின் கொடுப்பனவுகளைச் சங்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர், யாழ்.மனித உரிமை ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கோரியுள்ளனர். (த-115)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. பஸ்கள் கொக்காவிலுக்கு; பயணிகள் நேற்றுப் படு திண்டாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 7

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் பெரும்பாலானவை நேற்றுப் கொக்காவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டமையால் பயணிகள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாக விசனம் தெரிவிக்கப்பட்டது.

கொக்காவிலில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பிரமாண்டமான தொலைத் தொடர்பு கோபுரத்தைத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்தார்.

இந்த விழாவுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் அரச அதிகாரிகள் பலர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த அதிகாரிகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் ஏற்றிச் சென்றன. இதனால் குடாநாட்டின் அனைத்து வழிப்பாதைகளிலும் நேற்றுக்காலை முதல் மாலை வரை ஓரிரு பஸ்களே சேவையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

இதனால் தமது அலுவல்கள் நிமித்தம் பயணத்தை மேற்கொண்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் , அரச அலுவலர்கள் எனப் பலரும் பஸ்கள் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் பஸ் சேவையில் பயணிகள் நிரம்பி வழிந்ததையும் அவதானிக்க முடிந்தது. பலர் நீண்ட நேரம் பஸ் ஸுக்காகத் தரிப்பிடங்களில் காத்திருந்தனர். நேற்று மாலை வரை பஸ் சேவை சீரற்ற நிலையிலேயே இருந்ததைக் காண முடிந்தது. (த-7-9-26)

# 30 மில்லியன் ரூபா செலவில் சுன்னாகம் நூலகத்துக்கு கட்டடம்

சுன்னாகம், ஜூன் 7

சுன்னாகம் பொது நூலகத்துக்கென 30 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைத்துத் தரப்படும் எனப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்குப் பிரதேச வாசகர் வட்டத்தினால் நூலக அபிவிருத்தி தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

வலி.தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா அண்மையில் நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராக நடாளுமன்ற உறுப்பினர் பங்குபற்றிய போதே அவரிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

நவீன கல்வியூட்டலுக்கான வசதிகளுடன் சகல பிரிவுகளும் கொண்டதாக மூன்று மாடிக் கட்டடத்துடன் நூலகம் அமைக்கப்படவேண்டுமெனவும் நூலகத்துக்குத் தேவையான ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டுமெனவும்,

நூல்கள் , இறுவெட்டுக்கள், கல்வி உபகரணங்களின் கொள்வனவுக்கு விசேட நிதி நன்கொடை [illegible]ங்கப்பட வேண்டுமெனவு[illegible] நூலகத்தில் விசேட பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்கவேண்டுமெனவும் இந்த மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (த-38)

# கோபுரத் திறப்பு விழாவில் யாழ்.அதிகாரிகள் 900 பேர்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கொக்காவிலில் நேற்று நடைபெற்ற தொலைத்தொடர்பு கோபுரத் திறப்புவிழாவுக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து அரச அதிகாரிகள் சுமார் 900 பேர் வரை கலந்து கொண்டனர் எனத் தெரியவருகிறது.

கொக்காவிலில் மிகப் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட தொலைத்தொடர்புக் கோபுரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்தார்.

இதற்கு யாழ்.மாவட்ட அரச அதிபரின் வழிகாட்டலின் கீழ் யாழ்.மாவட்ட அரச அதிகாரிகள் பலரும் அங்கு படையெடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் தலா 60 பேர் வரை அங்கு சென்றிருந்ததாகவும், இதில் கிராம உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் உள்ளடங்குவர் எனவும் தெரிவிக்கப் பட்டது.

இவர்கள் அனைவரையும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் கொக்காவிலுக்கு ஏற்றிச் சென்றதாகவும் கூறப்பட்டது. (த-9)

## கல்விக்கான ஊக்குவிப்பு....



தொடரட்டும்: வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளிகளுக்குப் பிரதேச சபை செயலாளர் சு.சக்தி சிகாமணி தலைமையில் ஒரு தொகுதி பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதில் உள்ளூராட்சிச் சேவை மேம்படுத்தல் திட்டப் பொறியியலாளர் எஸ். சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு முன்பள்ளி ஆசிரியை ஒருவரிடம் பொருள்களை வழங்குகிறார். அருகில் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி ந. நிரஞ்சலா, நிகழ்ச்சித் திட்ட அதிகாரி பே. தீபேஸ்வரன் ஆகியோர் உள்ளனர். (த-302)

போரில் பாதிப்புற்ற மக்களுக்காக ஆரம்பமாகி

# ஐ.நா. அறிக்கைக்கு எதிராக திரும்பிய உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

''போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்க வாருங்கள்'' என்ற பதாகையின் கீழ் ஐ.நா நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முற்றுப்பெற்றது.

கடந்த சனிக்கிழமை முதல் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக 10 கோரிக்கைகளை முன் வைத்துப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் பிரதம செயற்பாட்டாளர் ஜீ.வி. சகாதேவன் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தார்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டு மூன்றாம் நாளான நேற்று யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் பிரதிநிதியான இராணுவ அதிகாரி ஒருவரும் சம்பவ இடத்துக்குச் சென்று சகாதேவனுடன் பேச்சுக்களை நடத்தினார்கள்.

கட்டளைத் தளபதி மேஜர் மஹிந்த ஹத்துருசிங்கவின் வேண்டுகோளின் பேரில்தான் அங்கு வந்ததாகக் குறிப்பிட்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சகாதேவனின் பத்து அம்சக் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதியினதும் பாதுகாப்புச் செயலாளரினதும் படைத் தளபதியினதும் கவனத்துக்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்தார். இதனை ஏற்றுக் கொண்ட சகாதேவன் தனது சாகும் வரையான உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரச அதிபர், சகாதேவனுக்குப் பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

இவர் அமர்ந்திருந்த இடத்தில் ஆரம்பத்தில் 'போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்க வாருங்கள்' என்ற பதாகையே கட்டப்பட்டிருந்தது. எனினும் அவர் உண்ணாவிரதம் ஆரம்பித்த இரண்டாம் நாள் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பதாகையும் காணப்பட்டது.

இதனால் சகாதேவன் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவா? அல்லது ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகவா? உண்ணாவிரதம் மேற்கொண்டார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதன் பின்னணியில் இருந்து செயற்படுத்தியவர்கள் யார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. (த-02-14)

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் 19 ஆம் திகதி வெளியீடு

சண்டிலிப்பாய்,ஜூன் 7

மானிப்பாய் தொகுதியிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இந்த மாதம் 19 ஆம் திகதி ஏழாலை, மானிப்பாய் ஆகிய இடங்களில் வெளியிடப்படவிருக்கின்றது. இதற்கான சகல ஒழுங்குகளையும் மானிப்பாய் தொகுதி தமிழரசுக் கட்சி அமைப்பாளர் க.கௌரிகாந்தன் மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவில் ஏற்பட்ட பெயர் மாற்றம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட யாழ், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை அடுத்து ஜூலை மாதம் 23 ஆம் திகதி நடைபெறுமென அரசு அறிவித்துள்ளது. அரசின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றங் களில் போட்டியிட முன்வந்துள்ள அரசியல் கட்சிகள் தங்களுக்கு ஆதரவு தேடுவதில் ஈடுபட்டுள்ளன.

மானிப்பாய் தொகுதியிலுள்ள வலி.தென் மேற்கு, வலி.தெற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் இந்த மாதம் 19 ஆம் திகதி ஏழாலை, மானிப்பாய் ஆகிய இடங்களில் வெளியிடப்படவிருக்கின்றது.

பிரதேசங்களின் தேவைகளை, அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னிலைப்படுத்தி பிரதேசங்களுக்கு ஏற்றவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வைபவ ரீதியாக வெளியிட்டு வைப்பார். (த-115)

# யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்தும் வேலையில்லாப் பிரச்சினை வலுக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் முழுமூச்சாக இடம்பெற்று வருகிறன. எனினும் வேலையற்றிருக்கும் படித்த இளம் சமூகத்தினர் அந்த அபிவிருத்திதிட்டங்களில் வேலைவாய்ப்புக்களுக்காக இணைத்துக் கொள்ளப்படவில்லை. இது கவலையளிப்பதாக உள்ளது எனத் தெரிவித்தார் யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

செய்தியாளரிடம் கருத்துக் கூறும் போதே அவர் இப்படி கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக

**யாழ்.அரச அதிபர் கவலை**

அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துக் கொண்டே போகிறது. படித்த இளைஞர், யுவதிகள் ஆயிரக் கணக்கில் வேலையின்றி இருக்கின்றனர். இந்தப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பது தொடர்பாக அமைச்சுகள் மட்டத்திலும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி வருகிறேன். புலம் பெயர்ந்தவர்களுடனும் இதுபற்றிப் பேசியுள்ளேன்.

இந்த நிலையில் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகளின் போது எமது மாவட்ட இளம் சமூகத்தினர் வேலை வாய்ப்பைப் பெற முடியாதுள்ளது. இது மன வேதனையளிப்பதாக இருக்கிறது

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கே மாவட்டத்தில் இடம்பெற்று வரும் அபிவிருத்தி திட்டங்களின் போது வேலை[illegible] வழங்கப்படுகிற[illegible]ர். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறையில் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் கண்ணிகள்

## இயங்குநிலையில் அவை அங்கிருந்து மீட்பு

கொழும்புத்துறை, ஜூன் 7

கொழும்புத்துறையில் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இயங்குநிலையில் 6 நிலக்கண்ணி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்புத்துறையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில் பொது மக்கள் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டபோது வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து அந்தப் பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மிதிவெடி அகற்றும் பிரிவினர் மேற்கொண்ட பணிகளில் 6 நிலக்கண்ணி வெடிகள் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் மிதிவெடிகள் அற்ற பகுதிகள் என்று உறுதிப்படுத்தப்பட்டு மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட கொழும்புத்துறை கிழக்கு 4 ஆம் குறுக்கு வீதிக்கும் 5 ஆம் குறுக்கு வீதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே டெனிஸ் மிதிவெடிப் பொருள்கள் அகற்றும் பிரிவினரால் இவை மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியை மக்கள் சுத்தம் செய்த வேளை வெடிபொருள்கள் காணப்பட்டதால் மிதிவெடி அபாயமுள்ள பிரதேசமாக மீண்டும் அடையாளமிடப் பட்டு பணிகள் இடம்பெற்றன.

இந்தப் பகுதி நீண்டகாலமாக உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக இருந்து வந்தது.

இந்த நிலையில் மேலும் பல வெடிபொருள்கள் புதைந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இதேவேளை, மணியந்தோட்டம் முதலாம் குறுக்குப் பகுதியை அண்மித்த பகுதியில் மிதிவெடி அச்சுறுத்தல் பிரதேசமாக அறிவுறுத்தப்பட்ட இடங்களிலும் மிதிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட போதும் இவ்வாறாக வெடிபொருள்கள் காணப்படுகின்றமையால் மக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளால் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் அச்சமின்றில் செல்வதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர். (ம-135)

## புதிய வருகை....




வெளியீடு : சுன்னாகம் புனித சூசையப்பர் தந்தையர் மன்றத்தின் வெள்ளி விழாவை யொட்டி 'சூசையின் வெள்ளி ஓசை' மலர் வெளியிடப் பட்டது. அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்பணி எம்.போல் நட்சத்திரம் மலரை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை சுன்னாகம் பங்குத் தந்தை அருட்பணி எம்.றெக்ஸ் சவுந்தரா பெற்றுக்கொள்கிறார். இதழாசிரியர் திருஞானம் ஞானசீலன், மன்றத்தலைவர் சிறில் சுகந்தரன் ஆகியோரும் உள்ளனர். (ம)

# விபத்துகளில் 8 பேர் காயம்

தென்மராட்சி, ஜூன் 7

தென்மராட்சி பளைப் பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி 3 பெண்கள் உட்பட எட்டுப் பேர் நேற்று காயமடைந்தனர். இவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பளைப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் தம்பலகாமத்தைச் சேர்ந்த சந்திரசேகரம், கோபிதாஸ் (வயது - 25), பளை நகரைச் சேர்ந்த வி. பொன்னுத்துரை (வயது - 58), எஸ். கணேசலிங்கம் (வயது - 40) அல்லாரை தெற்கைச் சேர்ந்த எஸ். யோகம்மா (வயது 44), அவரது மகளான கே. தனுஷா (வயது 22), மறவன்புலோவைச் சேர்ந்த ச. ரங்கா (வயது -12) மட்டுவிலைச் சேர்ந்த வீ. அருள்ஞானசுந்தரம் (வயது - 65), சரசாலையைச் சேர்ந்த என். கணேந்திரன் (வயது -34) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். (ஒ- 207)

# குடிதண்ணீரைப் பெறுவதில் நயினாதீவு மக்கள் நெருக்கடி

யாழ்ப்பாணம், ஜூன் 7

நயினாதீவில் நிலவும் குடிதண்ணீர் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில் நயினாதீவு மக்களின் குடி தண்ணீர் விநியோகத்துக்காக சுவிஸ் நயினாதீவு அபிவிருத்திக்கழகம் நிதியுதவிகளை வழங்கியுள்ளது. இதற்கான நிதி நயினாதீவு உப அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் சாட்டியில் இருந்து பௌசர், படகுகள் மூலம் எடுத்துவரப்படும் குடிதண்ணீர் மக்களுக்கு விநியோகிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை நயினாதீவில் கிணறுகளும் வற்றியுள்ளன. இதனால் கட்டுமான வேலைகள் உட்பட பல்வேறு தேவைகளுக்காகவும் தண்ணீரைப் பெறுவதில் மக்கள் சிரமம் அடைகின்றனர்.

அடுத்து வரும் இரண்டொரு மாதத்தில் தண்ணீருக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். (ம-7)




வடமராட்சி ஜூன் 7

புலோலி கிழக்கு முதல்வி அம்பிகா சமேத முதலீஸ்வரர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.53 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர்வரும் சனிக் கிழமை காலை 6 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். கும்பாபிஷேக கிரியை நிகழ்வுகளை சுன்னாகம் சிவபூதராஜர் பிரம்மஸ்ரீ கணேச சபாபதிக் குருக்கள் நிகழ்த்துவார். (ற-236)

* * *

வடமராட்சி ஜூன் 7

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது தொடர்ந்து தினமும் மாலை 5 மணிக்கு நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நற்கருணை வழிபாடும், மறு நாள் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு அருட்தந்தை எஸ்.ஜே.நீக்கிலஸ் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெறும். தொடர்ந்து திருச் சொரூப பவனி இடம் பெறும். (ற-236)

## வேலை வாய்ப்பு

பனிக்கட்டித் தொழிற்சாலையிலும், பொறியியல் நிறுவனத்திலும் வேலை செய்யக்கூடிய ஆண் தொழிலாளர்கள் (வயது 18-45) தேவை. ஆர்வமுடையவர்கள் 10.06.2011 இற்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பவும்.

நிர்வாக இயக்குநர்,
ஸ்ரார் இன்டஸ்ரியல்ஸ்
சேர்விஸஸ் பிரைவேட் லிமிட்டெட்
15/1, பிள்ளையார் கோயில்வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்,யாழ்ப்பாணம்

## ஓட்டோ விற்பனைக்கு உண்டு

203-1845 எனும் இலக்க முடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு.விலை 1, 10, 000/-
தொடர்பு: 0786171096

## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலாதேவி வேலுப்பிள்ளை



புலோலி கிழக்கு, 1 ஆம் கட்டை, நீண்டியம் பற்றையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி வேலுப்பிள்ளை நேற்றுமுன்தினம் (04.06.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் மருமகளும், மஞ்சுளா (கனடா), சந்திரசேகர் (உப அதிபர், யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், தவராஜன் (கனடா), கல்பனா (சிரேஷ்ட உதவி நூலகர், யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயராணி சிவகுமாரசாமி, காலஞ்சென்றவர்களான சாவித்திரிதேவி- சிவஞான சுந்தரம்பிள்ளை மற்றும் பாலசுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா), வேலும்மயிலும் (ஓய்வுபெற்ற வெளிக்கள அலுவலர்- சுகாதாரப் பகுதி), நவரத்தினராசா ( இலங்கை வங்கி - ஓய்வு பெற்றபதவி நிலை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இராசம்மா சின்னையா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திலக்ஷி, தரணிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 180/4, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியிலுள்ள அவரது மகனின் இல்லத்தில் நாளை (08.06.2011) புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**வே. சந்திரசேகர்**
**(மகன்)**

*180/4, சேர்பொன்*
*இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி.*

(4816)(31)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள JX-தொடர் இலக்கமுடைய MARUTI கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773164549
[தரகர் தேவையில்லை]

## மரண அறிவித்தல்

### *சுப்பிரமணியம் திருநாவுக்கரசு* [பாலா]

வவுனியா பண்டாரிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது இல.1 கரப்பன்காடு, வவுனியா எனும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (பாலா) 05.06.2011 ஞாயிற்றுக் கிழமை காலமானர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.06.2011) செவ்வாய்க் கிழமை கரப்பன்காடு, வவுனியாவில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் நல்லடக்கத்துக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No 1, கரப்பன் காடு,
வவுனியா.

தகவல்:

## மரண அறிவித்தல்

### கந்தையா கனகரட்ணம்

(ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி, இலங்கை இராணுவம்)



ஆவரங்கால், சிவன்கோயில் வீதியைப்பிறப்பிடமாகவும், பொன் கந்தையா வீதி, முருகன் கோயிலடி, நெல்லியடியை வசிப்பிடமாகவும், கொண்ட கந்தையா கனகரட்ணம் நேற்று (06.06.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர் புஸ்பராணியின் (புஸ்பம் ரீச்சர்) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் , யோகாம்பிகை, மீனாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிரோய் (லண்டன்), நிஷாந்தன் (கிராம அலுவலர், பிரதேச செயலகம், பருத்தித்துறை, (முன்னாள் ஆங்கில ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), நிரஞ்சன் (பிரான்ஸ்), நிரோஜினி (பிரான்ஸ்), நிரூபன் (லண்டன்),நிதர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கீதாஞ்சலி, சிவலஷ்சுமி, சுகந்தினி, ஜெசிந்தா, அரவிந்தன், சோபனா ஆகியோரின் மாமனாரும் டானியல், எஸ்தர், எவாஞ்சலின், அபிலாஷினி, அஜேய், அபிசாய்,ரதுஷன்,ஷாம், அகநிலா, அஞ்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரவெட்டி கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**க.நிஷாந்தன் (மகன்)**
**(கிராம அலுவலர்,**
**அல்வாய் வட மேற்கு)**

*பொன் கந்தையா வீதி,*
*முருகன் கோயிலடி,*
*நெல்லியடி.*

(4816)(31-19-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அலுவலர்கள் கிராம மட்டத்தில் நாகரிகமாக நடந்துகொள்வதில்லை

## நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்7


கிராம மட்டத்தில் சேவையாற்றும் அரச அலுவலர்கள் சிலர் மக்களுடன் நாகரிகமாக நடந்து கொள்வதில்லை. இது தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி அவ்வாறான அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகச் செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராம மட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்கள் சிலர் மக்களின் மன நிலையை உணர்ந்து நடந்துகொள்ளத் தவறி விடுகின்றனர். இந்த விடயம் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் எனக்குக் கிடைத்துள்ளன.பத்திரிகைகள் ஊடாகவும் அவ்வாறான செய்திகளை அவதானிக்க முடிகிறது.

மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் குறித்து இதயசுத்தியுடன் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.மாறாக மக்களுடன் எரிந்து விழுவது, அவர்களது மனம்நோகும்படி கண்டிப்பது, தண்டிப்பது என்பவற்றை அரச அலுவலர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அரச அலுவலர்கள் மக்களை எப்படி நடத்துகிறார்கள் என்று தீவிரமாக கண்காணித்து வருகிறேன். அவ்வாறான அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறேன். எனவே குறிப்பாக மக்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டிருக்கும் கிராம அலுவலர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் கொள்ள வேண்டும். - என்று தெரிவித்தார். (த-14)



யாழ்.கில்னர் ஒழுங்கையில் உள்ள ஸ்ரீ மஹாமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழாக் காட்சி.

# காணாமற்போனோரின் உறவுகள் இன்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா ஜூன் 7

கைதாகிக் காணாமற்போனோரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை வெளியிடுமாறு கோரி இன்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. 'நாம் இலங்கையர்' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமற் போனோரின் உடன் பிறப்புக்கள் கலந்துகொள்வர். இந்த அமைப்பினர் திருகோணமலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இத்தகைய போராட்டங்களை ஏற்கனவே நடத்தியுள்ளனர்.

# கோப்பாய் வாசிக்கு ரூபா 90 ஆயிரம் அபராதம்

கோடா மற்றும் வடிசாராய உற்பத்திக்கான உபகரணங்களை வைத்திருந்த கோப்பாய் வாசிக்கு யாழ்.நீதிமன்றம் 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கோப்பாய் வடக்கில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது கோடா, மற்றும் வடிசாராய உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் வைத்திருந்த நபரை மடக்கிப்பிடித்து யாழ் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினர்.

வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் அ.பிரேம் சங்கர் கோடா வைத்திருந்த குற்றத்துக்காக 68ஆயிரம் ரூபாவும், வடிசாராய உபகரணங்களை வைத்திருந்த குற்றத்துக்காக 22 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்தார்.

மேற்குறிப்பிட்ட அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 48 மாத சாதாரண சிறைத் தண்டணையை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (ம-9)

## ஆறு நிறுவனங்களால் தருவித்த

# விவசாய இரசாயனங்களுக்கு சுங்கத் திணைக்களத்தால் தடை

கொழும்பு,ஜூன்7

விவசாய இரசாயனங்களை இறக்குமதி செய்யும் ஆறு நிறுவனங்கள் தருவித்துள்ள இரசாயனங்களைச் சந்தையில் விற்பனைக்கு விடுவதற்கு இலங்கை சுங்க அதிகாரசபை தடைவிதித்துள்ளது.

அவை வைக்கப்பட்டுள்ள களஞ்சியசாலைகளையும் முத்திரையிட்டு மூடியுள்ளது.

தற்போது நாட்டில் பாவனையில் உள்ள விவசாய இரசாயனங்களில் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகளவு நஞ்சு கலந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பிரதி சுங்க பணிப்பாளர் சமந்த குணசேகர தெரிவித்தார்.

இந்த ஆறு நிறுவனங்களில் ஐந்து சர்வதேச நிறுவனங்கள் எனவும், ஒன்று உள்நாட்டு நிறுவனம் எனவும் அவர் கூறினார்.

இப்போது பாவனையில் உள்ள 400 வகை இரசாயனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவற்றில் பெரும்பாலானவை நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகளவு நஞ்சைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிறுவனங்கள் தருவித்த மேலும் ஆறு கொள்கலன்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். (ம-5)

# வவுனியாவில் கள்ள நோட்டு; மேலும் இருவர் கைதாகினர்

## பொலிஸாரால் கணினிகளும் மீட்பு

கொழும்பு ஜூன்7

வவுனியாவில் மீட்கப்பட்ட கள்ளநாணயத் தாள்களுடன் தொடர்புடைய மேலும் இருவர் வவுனியாவில் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களுள் ஒருவர் முல்லைத்தீவு பிரதேசத்தில் மென்பானக் கடையொன்றின் உரிமையாளர் எனவும், மற்றவர் வவுனியாவில் வசிக்கும் தொழில்நுட்பக் கலைஞர் எனவும் தெரியவந்துள்ளது.

ஐயாயிரம் ரூபா பெறுமதியான நூற்றி ஐம்பது கள்ள நாணயத்தாள்களுடன் சில தினங்களுக்கு முன்பு மூன்று முறிப்புப் பிரதேசத்தில் கைதான ஐவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்பே இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை மொத்தமாக 200 கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அவை அனைத்திலும் ஒரே தொடர் இலக்கம் உள்ளதாகவும் கூறப்பட்டது.

உண்மையான தாள்களைப் போலவே மிக நேர்த்தியாக அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட ஐவரில் ஒருவரே இதன் பிரதான சூத்திரதாரியெனத் தெரிவித்த பொலிஸார் அவரிடமிருந்து கணினிகளையும் இதர உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர். (ம-5)

# தென்னாபிரிக்கத் தலைவர்களிடமிருந்து இலங்கை நிறையக் கற்றுக்கொள்ளவேண்டும்

## மீள் இணக்கம் தொடர்பில் 'மிரர்' பத்திரிகைத் தலையங்கம்

கொழும்பு,ஜூன்7

நாட்டில் நிரந்தரமான மீள் இணக்கம் ஏற்பட வேண்டுமானால் அது உண்மையை ஒப்புக்கொள்வதன் மூலமன்றி வேறுவகையில் ஏற்பட முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளது கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெய்லிமிரர்' ஆங்கிலப் பத்திரிகை, அதன் ஜூன் 4 ஆம் திகதிய ஆசிரியர் தலையங்கத்தில்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவொன்று 'இலங்கைக்குத் தேவை' என்ற தலைப்பிலான அத்தலையங்கத்தில் மேலும் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

இலங்கையின் பொறுப்புக்கூறல் பிரச்சினைகள் குறித்து ஐ.நா செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைத்துக்கொண்ட நிபுணர் குழுவினர் அறிக்கைக்கு என்னதான் நடந்தேறினாலும் ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ அதற்குப் பதிலளிக்கிறார்களோ இல்லையோ 2009ஆம் ஆண்டு மே மாதம் நமது வரலாற்றின் ஒருபகுதியாக இன்று அமைந்துவிட்டமை மறுக்க முடியாத ஒன்று. எதுவானாலும் எதிர்த்தரப்பு விமர்சகர்களும் சுயேச்சையான பகுப்பாய்வாளர்களும் உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி அவர்கள் அன்றிலிருந்து கேட்கும் கேள்வி என்னவென்றால் சிறுபான்மை மக்களுடன் இணைந்து உண்மையான இணக்கப்பாட்டுக்கான முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளதா, முப்பது வருடகால இரத்தக் களரிக்கு வித்திட்ட போருக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து தீர்த்து வைக்க முயன்றுள்ளதா என்பதே.

உள்நாட்டு அமைப்புகளினாலும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களினாலும் கொடுக்கப்பட்ட அழுத்தங்களையடுத்து பொறுப்புக்கூறல் மற்றும் மீள் இணக்கம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையைச் சமர்ப்பிக்கவென கற்றுக் கொண்ட பாடங்களும் மீள் இணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழுவொன்றை இலங்கை நிறுவியது. ஆனால், இவ்வாறான உயர்நிலை மற்றும் மிகுந்த பிரசாரத்துக்குட்பட்டதுமான குழுக்களின் வரலாறுகளை கவனிக்கையில் அவை மிக மோசமாக இருப்பது மட்டுமல்ல இந்த ஆணைக் குழுவின் அறிக்கையும் அதே விதமான ஆவணக் காப்பகத்தில் போடப்பட்டுவிடுமோ என்று நியாயமான காரணங்களோடு அவர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

### நிலைமை இன்னும் மோசமாகி விடலாம்

மிரர் தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

தந்தை செல்வா நினைவுப் பேருரை நிகழ்த்தியபோது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கை எதனையுமே எடுக்கவில்லையென்று குற்றஞ்சாட்டியிருந்தார். இவை தவிர 2009 ஆம் ஆண்டு மே மாதம் கிடைத்த வெற்றியும் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணமும், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைத்துவத்தின் அழிவும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ போன்றவர்கள் பிரகடனம் செய்வதையும் கேட்கின்றோம். அரசதரப்பு ஊடகங்களைக் கவனித்தால் அமைச்சர் வீரவன்ஸ மட்டுமல்ல ஏனைய அரசத் தலைவர்களும் மற்றும் அரச ஆதரவாளர்களும். 2009ஆம் ஆண்டு மே மாத வெற்றியானது சிறுபான்மையோர் பிரச்சினையைத் தீர்த்து விட்டதாகவே நம்புவதாகத் தெரிகிறது. ஆனால், பெரும்பாலான சுயேச்சை பகுப்பாய்வாளர்களைப் பொறுத்தவரை நாம் இப்போது போருக்கு பிந்திய காலப்பகுதியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மோதல்களுக்குப் பிந்திய காலத்தில் அல்ல என்ற கருத்தைக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.

மோதலுக்கான காரணத்தை அவசரமாகத் தீர்த்து வைக்காது போனால், அதற்கான நடவடிக்கை எடுக்காது போனால் இலங்கையானது மீண்டும் ஒரு மிகப்பெரிய இரத்தக்களரிக்குள் சிக்குப்பட வேண்டி ஏற்பட்டுவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா மற்றும் டெஸ்மன் டூட்டூ போன்றவர்களிடமிருந்து இலங்கை பாடம் படித்துக் கொள்ள வேண்டும். உண்மையை ஏற்றுக்கொள்ளாமல் நிலையான இணக்கப்பாட்டை காண்பது முடியாத காரியம். நிலையான அமைதிக்கு நீதி இருக்க வேண்டும். இதற்கெல்லாம் மன்னிக்கும் மனப்பான்மை இருப்பது அவசியம். இவ்வாறு அத்தலையங்கம் கூறுகின்றது.(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் கொள்ளையர் அட்டகாசம் அச்சத்துடன் பொழுதைக் கழிக்கும் மக்கள்

முல்லைத்தீவு,ஜூன் 7

முல்லை மாவட்டத்தில் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சமடைந்த நிலையிலுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசம், புளியங்குளம் பகுதியில் நள்ளிரவு வேளையில் பொல்லுகள், வாள், கத்தி சகிதம் சிறி என்பவரின் வீட்டில் புகுந்த கொள்ளையர்கள் நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். மேலும் இரண்டு வீடுகளில் கொள்ளையடித்துப் பின்னர் இன்னொருவர் வீட்டுக்குச் சென்றபோது அந்த வீட்டிலிருந்தவர்கள் விளக்குகளை எரியவிட்டதும் கொள்ளையர்கள் தப்பி ஓட்டம் பிடித்துள்ளனர். அத்துடன் கற்சிலைமடுப் பகுதியில் உள்ள ஆண் துணையில்லாத இராசேஸ்வரி என்பவரது வீட்டில் புகுந்து 20 ஆயிரம் ரூபா பணம், நகைகள் சமைத்து வைக்கப்பட்ட பன்றி இறைச்சி, பருப்பு, மரக்கறி வகைகள், தேங்காய் என்பனவற்றைக் கத்தி முனையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதற்கு முன்னர் முள்ளியவளைப் பகுதியில் இரு வீடுகளில் சிலர் புகுந்து நகை, பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். தொடர்ந்து நள்ளிரவு வேளைகளில் திருடர்கள் வீடுகளில் புகுந்து திருட்டுத் தொழிலில் ஈடுபடுவதால் மக்கள் அச்ச உணர்வுடன் செய்வதறியாது திகைத்த நிலையில் உள்ளனர்.

இதேவேளை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து அந்த இடங்களைச் சுற்றி வளைத்துத் தேடுதல் மேற்கொண்டபோதிலும் எவரும் பிடிபடவில்லை.

இதனால் ஒட்டுசுட்டான் பிரதேச இராணுவ அதிகாரி மேஜர் அகமட் இராணுவத்தினரை இரவு வேளைகளில் ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளார். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அசம்பாவிதங்கள் ஏற்படுமிடத்து உடனடியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கென தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

முற்றுமுழுதாக இராணுவத்தினரை நம்பி இருக்கும் மக்களைக் காப்பாற்றுவது இராணுவத்தினரின் கடமையாகுமென மக்கள் கூறுகின்றனர்.

இடம்பெயர்ந்து அல்லற்பட்டு முகாம் வாழ்க்கை வாழ்ந்து இறுதியாகத் தமது சொந்த இடங்களுக்கு வந்து மீள்குடியமர்ந்து தமது வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் மக்களை அச்சம் அடையச் செய்து எஞ்சிய அற்ப சொற்ப நகை, பணம் என்பனவற்றைக் கூட அபகரித்துச் செல்லும் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துச் செல்கின்றது. இதனால் தமக்கு உயிராபத்துக் கூட ஏற்படலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்.

மீள்குடியமர்ந்த மக்கள் தற்போது நிம்மதியற்ற வாழ்வு வாழுகின்றனர். இரவு வந்ததும் பயத்துடன் காலத்தைக் கடத்துகின்றனர். அரசை நம்பி இருக்கும் மக்களாகிய எமக்கும் எமது அற்ப சொற்ப உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பது பாதுகாப்புத் தரப்பினரின் தலையாய கடமையாகும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# நானாட்டான் கலை விழாவில் கலைஞர்கள் கௌரவிப்பு



மன்னார்,ஜூன் 7

மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைவிழாவின்போது சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தக் கலைவிழா கடந்த சனிக்கிழமை இரவு பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆபேல் ரெவல் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் தலைவர்கள், உபதலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கலைஞர்கள் இந்த விழாவில் கௌரவிக்கப்பட்டனர். (க-601)

VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

# ஒட்டுசுட்டானில் அமைக்கப்பட்டுவரும் விவசாயப் பயிற்சி நிலையம்

முல்லைத்தீவு,ஜூன் 7

ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையம் வடக்கின் வசந்தம் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பெரும் பொருள் செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையம் கடந்த யுத்தத்தின் போது சேதமடைந்தது. தற்போதுதான் புதிதாக அமைக்கப்படுகின்றது.

யுத்த சூழ்நிலைக்கு முன்னர் இந்தப் பயிற்சி நிலையத்தால் விவசாயப் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் நல்லின விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன.

இதனால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மட்டுமல்லாது ஏனைய பிரதேசங்களிலுள்ள விவசாயிகளும் நன்மையடைந்து வந்தனர்.

தற்போது பெரும் தொகையான செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் இந்த விவசாயப் பயிற்சி நிலையம் எதிர்காலத்தில் தமக்குப் பேருதவியாக இருக்குமென விவசாயிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். (க-500)

# மயானத்தில் சிரமதானப் பணி

மன்னார்,ஜூன் 7

மன்னார் நகரசபையின் ஏற்பாட்டில் மன்னார் பொது மயானத்தில் சிரமதானப் பணிகள் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை காலை இடம்பெற்றன.

இதன்போது நகர சபைத் தலைவர், உபதலைவர், நகர சபையின் செயலாளர், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

குறித்த சிரமதானப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் மற்றும் மன்னார் வர்த்தக சங்கத்தினர் உணவுகளை வழங்கியதாக மன்னார் நகரசபையின் உறுப்பினர் குமரேஸ் தெரிவித்தார். (க-601)

கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgவுக்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய NO.1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 08.06.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ஜெனிஸ் பாம், பருத்தித்துறை. (0773541771)
- துர்க்கா பாம், சுன்னாகம்.
- P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

தொ.பே:- 021 222 2867, 0776090926.

முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை அஞ்சலி

அன்னையின் மடியில்
13.01.1983

ஆழியின் பிடியில்
19.05.2010



திதி: பூர்வபட்ஷ சஷ்டி

கடலில் காவியமான
செல்வன்
நிர்மலானந்தன் நிராஜ்

19.05.2010 புதன்கிழமை தொண்டமானாறு மயிலியதனை கடலில் நண்பர்களுடன் நீந்தி விளையாடச் சென்ற எமது செல்வம் திரும்பிவராமல் எம்மை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி அவ்வுலகம் சென்றிருப்பார் எனும் பரிதாப நிலைக்குவர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இந்து சமய விழுமியங்களுக்கு இணங்க இன்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு ஆத்ம சாந்திக் கிரியைகள் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். செல்வனின் துன்பியல் நிகழ்வையிட்டு நேரில் சமுகம் தந்தவர்கள் மற்றும் பல வகையிலும் எம்துயர் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றி யறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மயிலியதனை,
தொண்டமானாறு.

நிர்மலானந்தன் (தந்தை)
T.P:0213215261, 07722[illegible]

கன்ரர் விற்பனை

நல்ல நிலையிலுள்ள TOYOTA 226-XXXX தொடரிலக்கமுடைய 250 கன்ரர் 10½ அடி நீளம் Singleweel Half Body வெள்ளைக்கலர், லீசிங்குடன் விற்பனைக்குண்டு. (DIMO பட்டா) வாகனத்துக்கும் மாற்றம் செய்யலாம்.

தொடர்புகளுக்கு:
0775001452, 0783255661

இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது 420/=
[illegible]

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
1944 - 05 - 27

விண்ணில்
2011 - 05 - 08



குமாரசாமி குலசேகரம்பிள்ளை

பலகோடி இன்பங்கள் இருந்தென்ன
பலநூறு உறவுகள் இருந்தென்ன
தெய்வம் நீங்கள் பிரிந்த இடைவெளியை
யார்தான் நிரப்புவரோ!
பிரிந்தும் பிரியாமல் எம்மோடு இருக்கும் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

14/6, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.
(4946)19-21-43

மகன், பேறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மருந்தகங்களும் பதிவு செய்யப்பட்டு உத்தரவுப் பத்திரங்களைப் பெறவேண்டும்

## வவுனியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து

வவுனியா,ஜூன் 7

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மருந்தகங்களும் பதிவு செய்யப்பட்டு உத்தரவுப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மு.மகேந்திரன். வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் அநேகமான மருந்தகங்கள் பதிவுசெய்யப்பட்டு உரிமத்தைப் பெற்றே இயங்குகின்றன. ஆனால் பதிவில்லாமல் காணப்படும் மருந்தகங்கள் தொடர்பாகத் தமது கவனத்துக்குக் கொண்டு வருமாறு சகல பொது சுகாதாரப் பரிசோதகர்களையும் அவர் கேட்டுக் கொண்டார். அத்துடன் உரிய அனுமதிப் பத்திரமின்றி இயங்கும் மருந்தகங்கள் 5 இலட்சம் ரூபா வரையில் அபராதம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் இவை தொடர்பில் கூடிய கவனம் எடுக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். அதேவேளையில் இந்தப் பிரதேசங்களில் இயங்கும் தனியார் வைத்திய நிலையங்கள் மற்றும் சிகிச்சை நிலயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் எடுத்தல் வேண்டும்.

அத்துடன் சகல வியாபார நிலையங்களையும் சீராகப் பரிசோதனை செய்வதற்கு வசதியாக கால அட்டவணை இடப்படல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் கடமைபுரியும் பொது சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நலசேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அணிவகுப்பு மரியாதை

மன்னார்,ஜூன் 7

மன்னார் மாவட்டத்தில் கடமையில் ஈடுபட்டுவரும் பொலிஸாரின் வருடாந்த அணிவகுப்பு மரியாதை நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொலிஸ் நாய்களும் கலந்து கொண்டமை சிறப்பாக அமைந்திருந்தது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடித்துவக்கு கலந்து கொண்டதுடன் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக் கொண்டார். (க-601)

# மீண்டும் பறக்கும் விமானங்கள் முல்லைத்தீவு மக்கள் அச்சம்

முல்லைத்தீவு,ஜூன் 7


முல்லைத்தீவு மாவட்டத்தில் அடிக்கடி விமானங்கள் பறந்து திரிவதால் மக்கள் அச்சமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிபிர் விமானங்களும் ஏனைய விமானங்களும் தாழப்பறந்து திரிவதன் காரணமாகவே இந்த நிலை தோன்றியுள்ளது.

யுத்தத்தின்போது பயங்கரமான அனுபவங்களை எதிர்கொண்ட சிறார்கள் விமானங்களின் ஓசையைக் கேட்டவுடன் அலறியடித்துக் கொண்டு வீட்டுக்குள் புகுந்து அடங்கி ஒடுங்கிக்கிடப்பதைக் காண முடிகின்றது. அத்துடன்முன்னைய அனுபவங்களின் அடிப்படையில் ஷெல்வந்து வெடிக்குமா? நாம் வேறு இடத்துக்குச் செல்ல வேண்டி வருமா? எனப் பயத்துடன் தமது பெற்றோரிடம் கேள்வியும் எழுப்புகின்றனர்.

விமானங்கள் தொடர்ந்து பேரிரைச்சலுடன் பறந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க- 500)

## காலத்தின் தேவை...



நிறைவான பயிற்சி: ஒட்டுசுட்டானில் நடைபெற்ற கணினிப் பயிற்சி நிறைவு விழாவின்போது சிவன் ஆலய பிரதமகுரு கீர்த்திவாசன் மாணவர் ஒருவருக்குச் சான்றுப் பத்திரம் வழங்குகின்றார். (500)

# விதைகளின் விலையுயர்வால் விவசாயச் செய்கையில் வீழ்ச்சி

முல்லைத்தீவு,ஜூன் 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் விதை வெங்காயம், நிலக்கடலை விதை என்பவற்றின் விலை அதிகரிப்பால் விவசாயச் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வெங்காயம் கிலோ ஒன்று 180 ரூபாவாகவும் நிலக்கடலை 200 ரூபாவாகவும் விலை உயர்ந்துள்ளன. இதனால் விவசாயிகள் செய்கை பண்ணப்படும் நிலத்தின் அளவைக் குறைத்துள்ளனர்.

வெளிமாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் இந்த மாவட்டத்துக்கு வருகை தந்து தமது விவசாயப் பொருள்களை அதிக விலைக்குக் கொள்வனவு செய்வார்களென்ற எதிர்பார்ப்பிலிருந்த விவசாயிகள் விதைகளின் விலை உயர்வால் ஏமாற்றமடைந்துள்ளனர். (க-500)

# நெல்லுடன் இரும்பு எடுத்துச் சென்றவர்கள் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதி

கிளிநொச்சி,ஜூன் 7

பூநகரிப்பகுதியில் பார ஊர்திகளில் நெல்லுடன் இரும்புப் பொருள்களை மறைத்து எடுத்துச் சென்றவர்கள் ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் நெல் கொள்வனவு செய்வதாகக் கூறி பழைய இரும்புப் பொருள்களை நெல்லுடன் மறைத்து எடுத்துச் சென்ற இரு பார ஊர்திகள் பூநகரிப் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். குறித்த இரு பார ஊர்தி உரிமையாளர்களும் தலா ஒரு இலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-6)

# போதையில் வீதியில் கலாட்டா; ஆசாமிக்கு விளக்க மறியல்

கிளிநொச்சி,ஜூன் 7

கிளிநொச்சி ஜெயந்தி நகர்ப் பகுதியில் மதுபோதையில் வீதியால் பயணித்தவர்களுடன் தகாத வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளதுடன் பொது இடத்தில் சிறுநீர்கழித்ததாகவும் கூறிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டவரைப் பதினான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி ஜெயந்தி நகர்ப் பகுதியில் மதுபோதையில் நின்ற ஒருவர் வீதியால் பயணித்தவர்களுக்கு இடையூறு விளைவித்ததுடன் பாடசாலை மாணவர்கள், மாணவிகள் சென்ற வேளையில் பொது இடத்தில் சிறுநீர் கழித்ததாகவும் கூறி கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில்முன்னிலைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க-6)

# படையினர் அனுமதியில் திடீர் மாற்றம் செய்ததால் வற்றாப்பளை செல்வோர் ஏமாற்றத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் வாகனங்களில் செல்லும் பக்தர்கள் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை பரந்தன், புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு ஊடாக பயணம் செய்ய முடியும் என அறிவித்த பாதுகாப்புப் படையினர் தற்போது அதில் மாற்றம் செய்துள்ளனர்.

எதிர்வரும் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் மட்டுமே இந்துப் பகுதிகளூடாகப் பயணம் செய்யமுடியும் எனப் பாதுகாப்புப் படையினர் தற்போது அறிவித்துள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகளினூடாக வற்றாப்பளைக்குச் செல்ல முற்பட்ட பலர் பாதுகாப்புப் படையினரால் அனுமதி வழங்கப்படாததனால் மாங்குளம் ஊடாகவே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாக முறைப்பாடு செய்துள்ளனர். இதுபற்றி ஆலய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது பற்றி அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கூட்டமொன்று ஆலய மண்டபத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

அதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பக்தர்கள் பரந்தன், புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு ஊடாக வற்றாப்பளைக்குச் சென்று வருவதற்கு கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை தனியார் பேருந்துகள் மற்றும் தனியார் வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களுக்கும் அனுமதி வழங்கப்படும் எனப் படைத்தரப்பினர் அறிவித்தனர்.

இந்த நிலையில் அவர்களால் அனுமதி மறுக்கப்பட்டு எதிர்வரும் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் மட்டுமே குறித்த பகுதிகள் ஊடாகச் சென்று வருவதற்கு அனுமதி வழங் கப்படுமென தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளினூடாகப் பயணம் செய்வதற்கு அரச பேருந்துகளுக்கு மட்டும் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க - 4)

# மோசமான நிலையிலுள்ள பாலம்

வவுனியா, ஜூன் 7

வவுனியா உமாமகேஸ்வரன் வீதியில் அமைந்துள்ள பாலம் மோசமான நிலையில் உள்ளதால் மழைகாலத்தில் மக்கள் மாற்றுப் பாதையை உபயோகிக்க வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

இந்தப்பாலம் வவுனியா [illegible] துள்ளது. வவுனியாவிலிருந்து இறம்பைக்குளம் வீதியூடாக சென்று உமாமகேஸ்வரன் வீதியூடாக சிதம்பரபுரம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியிலேயே இந்தப் பாலம் அமைந்துள்ளது.

மழை காலத்தில் இந்தப் பாலம் அமைந்திருக்கும் பாதையில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டே காணப்படும். இதனால் வவுனியாவுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ செல்பவர்கள் மயிலங்குளம் ஊடாகவே பயணம் செய்ய வேண்டிய அவல நிலையிலுள்ளனர்.

மிக நீண்ட காலமாகப் புனரமைப்பு வேலைகள் எதுவும் இடம்பெறாத இந்தப் பாலத்தை இனியும் காலதாமதம் செய்யாது புனர[illegible] வேண்டுமென இந்[illegible]கள் கோரிக்கை விடு[illegible]ர். (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
07 ஜூன் 2011 செவ்வாய்க்கிழமை

# தொழிற்சங்கங்களுக்கு ஆள்சேர்ப்பதால் சம்பள உயர்வுப் பேச்சு இழுத்தடிப்பு

## கிருஷ்ணசாமி

கொழும்பு, ஜூன் 7

தொழிற்சங்கங்களுக்கு ஜூன் மாதம் அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளும் காலப்பகுதி என்பதாலே தொழிற்சங்கங்களுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையில் இடம்பெற்று வரும் பேச்சுக் காலம் தாழ்த்தி இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

ஜூலை மாதத்துக்குப் பின்னரே கூட்டொப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்பதை ஒட்டு மொத்த தோட்டத் தொழிலாளர்களும் புரிந்து கொள்ளவேண்டும். பிரதான மூன்று தொழிற் சங்கங்களும் பேச்சுகளில் முன் வைக்கப்படும் தொகையை தொழிலாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆர்.எம்.கிருஷ்ணசாமி தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சம்பள விடயத்தைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேட ஒரு சிலர் முனைந்து வருகின்றனர். தொழிலாளர்களின் ஒற்றுமையைப் பிரித்தும் பலவீனமாக்கியும் அதில் அரசியல் இலாபம் தேடுவதற்கு இன்னொரு சாரார் முனைந்து வருகின்றனர்.

தொழிற்சங்கங்கள் கூட்டொப்பந்தத்தின் பேச்சுகளைப் பயன்படுத்தி தொழிலாளர்களை தூண்டிவிட்டு போராட்டங்களை ஆரம்பித்து தொழிலாளர்களுடைய ஒற்றுமையைச் சிதைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பள அதிகரிப்புக் குறித்து ஜனாதிபதி மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோரை கடந்த வாரம் சந்தித்து அவர்களின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன். இதைவிட பதுளை மாவட்டத்தில் தொழிற்சங்க அரசியல் வேறுபாடின்றி தொழிலாளர்களிடம் கையொப்பம் பெற்று ஜனாதிபதியிடம் கையளிக்கும் நடவடிக்கையிலும் வி.தோ.தொ.காங்கிரஸின் தூதுக் குழு ஈடுபட்டு வருகின்றது.

கூட்டொப்பந்தப் பேச்சுகள் மேலும் காலம் தாழ்த்தி இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருமானால் பதுளை மாவட்டத்தில் பதுளை, ஹாலிஎல, பண்டாரவளை, அப்புத்தளை, பசறை ஆகிய பிரதேசங்களில் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி கூட்டொப்பந்தம் குறித்தும், சம்பள விவகாரத்தின் உண்மை நிலைமை குறித்தும் தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்துவோம்- என்றார். (ச)

# புதிய பாடத்திட்ட நூல்களுக்கு வாசிகசாலையில் பற்றாக்குறை

## துறைநீலாவணை மாணவர்கள் விசனம்

நாவிதன்வெளி, ஜூன் 7

துறைநீலாவணை பொது நூலகத்தில் தங்களுக்கான புதிய பாடத்திட்டத்துக்கு ஏற்ப போதிய நூல்கள் இல்லை என மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பொதுநூலகம் வளப் பற்றாக்குறையுடன் இயங்கி வருகிறது. துறைநீலாவணையில் உள்ள மகாவித்தியாலயம், விபுலானந்த வித்தியாலயம், மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்த நூலகத்தையே பயன்படுத்துகின்றனர். ஆனால், புதிய பாட மாற்றத்துக்கு அமைவான புத்தகங்கள் இங்கு போதிய அளவில் இல்லை என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதிய பாடத்திட்ட மாற்றத்துடனான புத்தகமொன்றை நூலகத்தில் பெறமுடியாதுள்ளது. இந்தநிலையில், அதைப் பணங்கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் மாணவர்கள் உள்ளனர். ஆனால், ஏழை மாணவர்களால் இந்தப் புத்தகத்தை வாங்க முடியாதுள்ளது என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் துறைநீலாவணை பொது நூலகத்துக்கு புதிய பாடத்திட்ட மாற்றத்துடனான நூல்களைக் கொள்வனவு செய்து தரவேண்டும் என மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# கேகாலை பொலிஸ் நிலையத்தில் தமிழில் முறையிடுவதில் சிக்கல்

கேகாலை,ஜூன்7

கேகாலை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யச் செல்லும் தமிழ்பேசும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பொலிஸாரால் சிங்களமொழி தெரிந்த ஒருவரைக் கூட்டிவருமாறு கூறப்படுவதுடன், முறைப்பாடுகள் மீதான நடவடிக்கைகள் காலம் கடந்தே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் விசனிக்கப்படுகின்றது.

மேலும் பதியப்படும் முறைப்பாடுகளை வாசித்துக் காட்டுவதற்கு பொலிஸார் மறுப்பு தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்பேசுவோர் வாழ்கின்றனர். தமிழ்பேசும் பொலிஸாரை நியமிக்குமாறு மாவட்டத்தில் உள்ள ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்விடுத்தால் அது தட்டிக் கழிக்கப்பட்டு வருகின்றது என்று பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ச)

# தொழிற்சாலையைத் திறக்க ஏற்பாடு

டிக்கோயா பகுதியில் சுமார் 26 வருடங்களாக மூடப்பட்டிருந்த தேயிலைத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொயிஸ்டன், அயரபி, நியூட்டன் போற்றி ஆகிய தோட்டங்களுக்கு உரித்தான நான்கு மாடிகளைக் கொண்ட இந்தத் தொழிற்சாலை தோட்டத் தொழிலாளர்களின் முயற்சியினால் புனரமைக்கப்பட்டு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ச)

# தேயிலையை வாகனங்களில் ஏற்ற தோட்டத் தொழிலாளர்கள் மறுப்பு

கொழும்பு, ஜூன் 7

சம்பள உயர்வு கோரிவரும் தோட்டத் தொழிலாளர்கள் சில தோட்டங்களில் தேயிலையை வாகனங்களில் ஏற்றுவற்கு மறுத்து வருகின்றனர் என அகில இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் ராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வை வலியுறுத்தி, தேயிலையை வாகனங்களில் ஏற்றுவதற்கு தொழிலாளர்கள் மறுத்து வருகின்றனர். தொழிற்சங்கங்களின் தூண்டுதலின்றி அவர்கள் சுயமாகவே இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றனர் என்று அவர் கூறினார். (ச)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவில்லும்



## திருமதி நாகரெத்தினம் நடராசா

தோற்றம்
27.03.1924

மறைவு
08.05.2011



கடந்த 08.05.2011 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் தெய்வத்திருமகள் பிரிந்த செய்தி அறிந்து உடன்வந்து எமக்கு சகல உதவிகளையும் வழங்கி ஆறுதல் கூறி அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் உள்ளூர், வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் வெளிநாடுகளில் எமது இல்லங்கள் வந்தும், தொலைபேசியிலும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் கிரியைகளின்போதும் நேரில் கலந்து கொண்டு அனுதாபங்கள் தெரிவித்து பல்வேறு வழிகளில் துணை நின்றவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து மலர்தூவி, மலர் மாலைகள் அணிவித்து மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10. மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

இல.104/5, அத்தியடி,
குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:- மருமகன்- ஞானசேகரம் (ஞானம்) C.T.B.
Tel: 0212225926.

(49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு இதுவரை வீடுகள் இல்லை

## அரச நியமனங்களிலும் தமிழர் புறக்கணிப்பு



அம்பாறை, ஜூன் 7

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றனர் என அரசு சார்ந்த அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் பறைசாற்றுகின்றனர். ஆனால், ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இன்னும் வீடுகள் வழங்கப்படாத அகதிகள் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவில் உள்ளனர் என மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றவிசேட கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

மக்கள் துன்பப்படும்போதும், நம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படும்போதும் அவற்றுக்காக நெஞ்சு நிமிர்த்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றே குரல் கொடுத்து வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசின் ஆதரவாளர்களாகவே உள்ளனர். இவர்கள் அரசின் தவறுக்ளை முன்னிலைப்படுத்த மாட்டார்கள். அதிலும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளைத் தட்டிக் கேட்கக் கூட முடியாதவர்களாகவே உள்ளனர்.

அண்மையில் தமிழ் பிரதேசங்களில் வழங்கப்பட்ட சிற்றூழியர் நியமனத்தில் கூட பெரும்பான்மை இனத்தவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு தமிழ் மகன் கூட இந்த நியமனத்தில் இடம்பெறவில்லை. இந்தப் புறக்கணிப்பைக்கூட தட்டிக் கேட்காத நம்மவர்கள் அமைச்சுக் கதிரைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய அமைச்சுப் பதவி தேவை தானா?

இதேவேளை, ஐ.நா. அறிக்கையை முற்றுமுழுதாக ஆதரிக்கும் கட்சியாக நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழ்கின்றது. வேறு எந்த தமிழ்க் கட்சியும் ஆதரிக்கவில்லை என்பது எமது மக்களுக்குத் தெரியும் - என்றார். (ச-30)

## ஆர்ப்பாட்டம்.......



தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 500 ரூபா வழங்க வேண்டும் என கோரியும் கூட்டொப்பந்தப் பேச்சில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படை சம்பளத் தொகையை வெளிப்படுத்தக் கோரியும் கொட்டகலை நகரில் தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

## திருமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் நியமனம்

திருகோணமலை, ஜூன்7

திருகோணமலை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளராக கே. குகவதனி பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜெயசுந்தர வழங்கியுள்ளார்.

இலங்கை திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைச் சேர்ந்த கே.குகவதனி பரமேஸ்வரன் ஏற்கனவே கிண்ணியா மற்றும் தம்பலகாமம் போன்ற பிரதேச செயலகங்களில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள முதலாவது பெண் திட்டமிடல் பணிப்பாளர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## இன்னும் இரண்டு தினங்களில் ரூ.500 இற்கு குறையாத சம்பளம்

நுவரெலியா,ஜூன் 7

போராட்டம் நடத்தாமல் பேச்சு மூலம் எதிர்வரும் இரு தினங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபாவுக்கும் அதிகமான சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என இ.தொ.கா.பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நுவரெலியா கிறேன் ஹோட்டலில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த புதன்கிழமை முதலாளிமார் சம்மேளனத்துடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் பின் நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்து தொழிலாளர்களின் நிலைமைகளை தெளிவுபடுத்தினோம்.

அதன்பின் ஜனாதிபதி தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என முதலாளிமார் சம்மேளனத்துக்கும் கம்பனிகளுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளார்.

மறைந்த அமைச்சர் தொண்டமான் காலத்திலிருந்து இ.தொ. கா., இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டித் தலைமைகளே கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்துள்ளன.

தொழிற்சங்கங்கள் எம்மை விமர்சித்துப் போராட்டங்கள் நடத்துவதால் எந்தப் பயனும் இல்லை. அவர்களால் பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது. இ.தொ.கா. மூலமே தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரான் பிரதேச காணிப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கை

### கிழக்கு இராணுவத் தளபதி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 7

கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் ஏற்பட்டுள்ள காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்று கிழக்கு மாகாண இராணுவக்கட்டளைத் தளபதி பொனிபெஸ் பெரேரா தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஊத்துச்சேனை, கள்ளிச்சை, ஆற்றுச்சேனை, வாகனேரி, முள்ளிவட்டுவான், முறுத்தானை ஆகிய பகுதிகளில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பில் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி தெரிவித்ததாவது, இந்தப் பகுதிகளில் அரச காணிகள் அபகரிக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும். இதற்கு அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படவேண்டும். காணிகளுக்குரிய உறுதிப்பத்திரங்களை வைத்திருப்போர் தமது காணிகளுக்குச் செல்ல எந்தவித தடையும் இல்லை. ஏனையவர்களுக்கு இலங்கை காணிச் சட்டத்தின் கீழ் முடிவுகள் எடுக்கப்படும்- என்றார். இந்தக் கலந்துரையாடலில் பிரச்சினைகளுக்குரிய காணிகளின் உரிமையாளர்கள் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளைத் தெரிவித்தனர். (ச)

## திருமலைக் கடலில் உல்லாசப் பயணிகள் திமிங்கிலங்களைப் பார்வையிட வாய்ப்பு

திருகோணமலை,ஜூன் 7

திருகோணமலைக் கடற் பிராந்தியத்தில் திமிங்கிலங்களைப் பார்வையிடும் வாய்ப்பு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை திருகோணமலை கடற்பிரதேசத்துக்கு நகருவதன் மூலம் திருகோணமலை கரையோரத்துக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலைக்கு வருகைதரும் உல்லாசப் பிரயாணிகளுக்கென இலங்கை கடற்படை, பிரயாணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான முதலாவது சேவை டொக்கியாட் கடற்படைத்தள இறங்கு துறையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.இந்தச் சேவைக்காக 'யு 543' என்ற கப்பல் பயன்படுத்தப்படவுள்ளது.

திருகோணமலை கடற்பரப்பில் பெரிய மீன்கள் அதிகளவில் காணப்படுவதால் இதனைப் பார்வையிட வரும் உல்லாசப் பிரயாணிகளின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இலவச சட்ட உதவி செயலமர்வு

மட்டக்களப்பு, ஜூன் 7

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களிலும் கடமைபுரியும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இலவச சட்ட உதவி செயலமர்வை கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு டேபா மண்டபத்தில் நடத்தியது.

மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் வினோபா இந்திரன் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், கிழக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் விஜயவர்த்தன, கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கலாநிதி பிரதிபா மகான மகேவா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட விசாரணை அதிகாரி ஏ.சீ.ஏ.அஸீஸ் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரை நிகழ்த்தினர். இந்தச் செயலமர்வில் மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த பொறுப்பதிகாரிகளும் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (ச-21)

## தொழிலாளர்களின் சம்பள உயர்வுகோரி தொழிற்சங்க ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை உடனடியாக அதிகரிக்கக் கோரி தேசிய பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த 10 தொழிற்சங்கங்களின் ஆதரவாளர்கள் இருவேறு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

ஹற்றன் பஸ் நிலையத்துக்கு முன்புறகவும், கொட்டகலை நகரிலும் நேற்றுமுன்தினம் பகல் இந்த இரண்டு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 500 ரூபாவாக உயர்த்தக் கோரியும், கூட்டு ஒப்பந்த பேச்சு தொடர்பான உண்மை நிலவரங்களை வெளியிடுமாறும் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆர்பாட்டத்தை தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் விடுதலை முன்னணி, மலையக தேசிய தோட்ட தொழிலாளர்கள் சங்கம், அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர் ஒத்துழைப்பு சங்கம் ஆகிய பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்துள்ளன. (ச)

உதயன்
07 ஜூன் 2011 செவ்வாய்க்கிழமை

# அரசின் தோல்விப் பயணம் ஆரம்பம் பொய் பேசியே தேர்தலில் வெற்றி

## அரசு மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 7

அரசின் தோல்விப் பயணம் ஆரம்ப மாகிவிட்டது. தனியார் ஓய்வூதியத்திட்ட விடயத்தில் லஞ்சம் வழங்கி நாடாளுமன்றத்தில் பெற்ற மூன்றில் இரண்டு பலத்தை மக்கள் சக்தி தோற்கடித்துவிட்டது.

- இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை பத்தரமுல்ல பெலவத்தையில் உள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து கூறியதாவது,

அரசு தனியார் ஓய்வூதிய சட்டமூலத்தை வாபஸ் பெற்றுவிட்டது. உண்மையிலேயே அது ஓய்வூதிய சட்டமூல மல்ல. அரசின் பொருளாதார நெருக்கடிக்குப் பதிலாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் படியே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஜே.வி. பி. உழைக்கும் தொழிலாளர் வர்க்கத் துக்கு இந்த ஓய்வூதியச் சட்டமூலத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தர்க்க ரீதியான கருத்துகளை முன்வைத்தது. மே தினத்தில் உரையாற்றிய ஜனாதிபதி யார் எதிர்த்தாலும் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவோம் என சூளுரைத்தார். ஆனால் இப்போது அந்தச் சட்டமூலத்தை வாபஸ்பெறவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இது உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் பெற்ற பெருவெற்றியா கும்.

இதன்மூலம் அரசுக்கு உண்மையான பலம் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது. தேர்தல்களில் பெற்ற வெற்றிகள் உண்மையான வெற்றிகள் இல்லை. பொய் உரைத்து பெற்ற வெற்றி. அதே போல், லஞ்சம் கொடுத்து நாடாளுமன்றத்தில் ஏற்படுத்திக் கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உண்மையான மக்கள் சக்தி அல்ல. இதை விட அதீத சக்தியும் பலமும் மக்களிடம் உள்ளன என்பது இப்போது தெளிவாகி உள்ளது.

எந்தவொரு மோசமான முடிவுகளையும் தோற்கடிக்க மக்கள் சக்தியால் முடியும் என்பதை இந்த நாட்டுக்கு எடுத்துக் காட்டியுள்ளது. இந்தப் போராட்டத் துக்குப் பல்வேறு நபர்களும், குழுக்களும் பல் வேறு வழிகளில் தொடர்புகொண்டனர்- என்றார். (சி)

# தடைப்பட்டிருந்த நிவாரணத்தை இவ்வாரத்தில் வழங்க ஏற்பாடு

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கை

மன்னார், ஜூன் 7

மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளம், பாலாவி, நாகவில் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கான தடைப்பட்டிருந்த கடந்த வருடத்தின் சில மாதங்களுக்கான உலர் உணவு நிவாரணம் நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ்வாரம் வழங்கப்படவுள்ளது.

இந்த உலர் உணவு நிவாரணம் கடந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்காக சுமார் ஆயிரத்து ஐநூறு குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அவற்றின் பெறுமதி சுமார் 35 லட்சம் ரூபாவாகும். எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எல்.எம். மில்ஹான் விடுத்த வேண்டுகோளை ஏற்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், மீள்குடியேற்ற அமைச்சர் எம்.எச்.குணரத்ன வீரகோனிடம் தொடர்புகொண்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த ஏனைய மக்களுக்கு இந்த உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மன்னார், எருக்கலம்பிட்டியிலிருந்து வந்து குடியேறியோருக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இரவு நேர உணவகங்களில் திடீர் சோதனை

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இரவுநேர உணவகங்களில் திடீர் சோதனையிடும் திட்டமொன்றை கொழும்பு மாநகரசபை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு 20 இரவுநேர உணவகங்களை ஏற்கனவே திடீர் சோதனைக்கு உட்படுத்தியுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம பொது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார். இவ்வாறு சோதனையிடப்பட்ட உணவகங்களில் அதிகமான உணவகங்கள் தரமற்ற முறையில் நடத்திச் செல்லப்படுகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து தரமான முறையில் இந்த இரவுநேர உணவகங்களை நடத்திச் செல்வது குறித்து ஆலோசனைகளை வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

சந்திப்பு......



இலங்கை வந்துள்ள சந்தைப்படுத்தலின் தந்தை என அழைக்கப்படும் பிலிப் கொட்லர் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.

# அனுமதியின்றி துப்பாக்கி எடுத்துச் சென்ற இரு கான்ஸ்டபிள்கள் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன்7

கண்டி பொலிஸ் நிலையத்திலிருந்து அனுமதியின்றி துப்பாக்கி ஒன்றை எடுத்துச்சென்ற சம்பவம் தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் இருவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ரி. 56ரக துப்பாக்கி ஒன்றை அனுமதியின்றி வீட்டுக்கு எடுத்துச்சென்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்களே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கூட்டமைப்பு கொள்கை ரீதியான அமைப்பு அரசிடம் ஒருபோதும் விலை போகாது

## அரியநேத்திரன் எம்.பி.கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 7


தமிழ்த் தேசியக்கூட்டமைப்புகொள்கை ரீதியான ஓர் அமைப்பு. இல்லாவிட்டால், ஆறு சுற்றுப் பேச்சுகளின்போது அரசிடம் விலை போய் இருக்கும். எமது அரசியல் நிலைப்பாடு என்ன என்பதை வாக்களித்த மக்கள் நன்கு அறிவார்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் பா. அரியநேத்திரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அற்ப சொற்ப சலுகை களுக்காக தமிழ் இனத்தை காட் டிக்கொடுக்கமாட்டார்கள். அமைச் சுப் பதவிக்கு ஆசைப்பட்டு விலை போவது கூட்டமைப்பின் அர சியல் நிலைப்பாடு அல்ல. கூட்டமைப்பு கொள்கை ரீதியான ஓர் அமைப்பு. நாம் மக்களின் தேவை அறிந்து அதற்கேற்ப மக் களுக்கு விசுவாசமாகச் செயற்படக்கூடியவர்கள். அதனால் எமது நிலைப்பாடு என்ன என் பது வாக்களித்த மக்களுக்கு நன்கு தெரியும்.

இல்லையேல், அரசுடனான 6 சுற்றுப் பேச்சுகளின்போது கூட்டமைப்பு



விலை போயிருக்கும். அரசுக்கு அரசியல் தீர்வு வழங்குவதை விட அமைச்சுப் பதவி வழங்குவது இலகுவானதாகும்.

எனவே, எம்மை நம்பி வாக்களித்த மக் களுக்கு ஒருபோதும் நாம் துரோகம் இழைக்க மாட் டோம். தமிழ் மக்க ளுக்கு நன்மை அளிக்கக் கூடிய விடயங்களானால் இணைந் தும், தீமையான விடயம் என்றால் எதிராகவும் கூட்டமைப்பு செயற்படும்.

அதுமட்டுமின்றி, நடைபெற வுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் நம் பிக்கைக்குரியவர்கள் யார் என் பதை மக்கள் நிரூபிப்பர் - என்றார்.

# போக்குவரத்துத் தொடர்பில் 17,309 முறைப்பாடுகள்

தனியார் பஸ் போக்குவரத்து தொடர்பாக இதுவரை சுமார் 17,309 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று போக்குவரத்து முறைப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. மேலதிக கட்டணம் அறவிடல், பயணிகளுடன் தவறான விதத்தில் உரையாடல் மற்றும் பயணச்சீட்டு வழங்காமை என்பன உள்ளடங்கலாக பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை - கொழும்பு மற்றும் கொழும்பு - அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களுக்கு இடையிலான தனியார் பஸ் போக்குவரத்தின் மீதே அதிக முறைப்பாடுகள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி நிர்வாகசேவைப் பரீட்சைக்குத் தோற்ற 50 வயது கடந்தோருக்கு அனுமதியில்லை

## 1,500 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 7

ஐம்பது வயதைத் தாண்டியவர்கள் கல்வி நிர்வாகசேவைப் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய கிடைத்துள்ள விண்ணப்பங்களில் உள்ள 1,500 பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி நிர்வாகசேவைப் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வயதெல்லை 50 என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர்கள் சங்கம், இந்த விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் திணைக்களத்துக்கு தலா ஆயிரம் ரூபாவைக் கட்டணமாகச் செலுத்தியே விண்ணப்பம் செய்தனர். அதற்குப்பின் வயதெல்லையைக் காரணம் காட்டி அவர்களை நிராகரிப்பது மனித உரிமை மீறல் எனவும் கண்டனம் செய்துள்ளது.

இலங்கை கல்வி நிர்வாகசேவைப் பரீட்சைக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த 48 வயதெல்லை நீக்கப்பட்டுள்ளது எனவும், வயது வித்தியாசம் இன்றி எவரும் விண்ணப்பிக்கலாம் எனவும் கல்வி அமைச்சர் அண்மையில் ஊடகங்கள் மூலமாகத் தெரிவித்திருந்தார். அவரது உறுதிமொழியை நம்பி விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தியவர்கள் இப்போது அவல நிலையில் உள்ளனர் - என இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பரீட்சை கடந்த சனிக்கிழமை நாடெங்குமுள்ள 251 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத் திருவிழா 16 வருடங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருச்சொரூப பவனி இடம்பெறுகின்றது. (135)



# இளைய சமுதாயத்திடம் சமய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது கட்டாய தேவை

## இந்தியத் துணைத்தூதரக அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 7

இளைய சமுதாயத்தினரிடம் சமய விழிப்புணர்வு கட்டாய தேவையாக உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக சிவதொண்டர் மாநாடு நிகழ்வை ஏற்பாடு செய்தமை பாராட்டுக்குரியது.

சமயம் பற்றிய விழிப்புணர்வு இருத்தல் இளைய சமுதாயம் தவறான வழிகளில் செல்வதை ஓரளவேனும் கட்டுப்படுத்த முடியும் .

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரி வி.மகாலிங்கம்.

நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிவதொண்டர் மாநாடு நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

இன்றைய மனித சமுதாயம் எதையும் சாதிக்க முடியும் எனும் மமதையில் சமயம் சார்ந்த விழுமியங்களைக் கருத்தில் கொள்ளாமல் பல்வேறு சமூக சீர்கேடுச் களில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றது.

இதனால் இளைய சமுதாயத்தை வழிப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இந்து ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி பெறும் சைவ வித்தகர்கள் சமயத்துக்கும் மக்களுக்கும் சேவைபுரிய கடமைப்பட்டவர்கள்.

இவர்களின் வழிகாட்டல்கள் ஓரளவேனும் சமுதாயத்தை நல்வழிப்படுத்தக்கூடியதாக அமைய வேண்டும்.

சிவதொண்டர் மாநாடு போன்ற சமயம் சார்ந்த நிகழ்வுகளை நடத்துவதன்மூலம் தான் மதம் சார்ந்த தகவல்களை வெளிக் கொணர்வதற்கும், அவற்றுக்குச் சேவை புரிந்தவர்களை இனங்காட்டுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

இது போன்ற சமய நிகழ்வுகளை நடத்த அனைவரும் முன் வந்தால் நேரிய சமுதாயத்தை உருவாக்க வசதியாக அமையும். - என்றார். (ம-313)

# கலாசார விழுமியங்களையும் பண்பாடுகளையும் பின்பற்றினால் எப்போதும் சந்தோசமாக வழலாம்

## பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய

யாழ்ப்பாணம், ஜூன் 7

கலாசார விழுமியங்களையும் பண்பாடுகளையும் பின்பற்றி நடப்போமானால் எமது வாழ்க்கை எப்பொழுதும் சந்தோசமாக அமையும்.

இவற்றில் இருந்து நாம் விலகித் தவறான வழிகளில் வாழ்க்கையைக் கழிப்பதால் துன்பங்களைத்தான் எதிர்கொள்ள நேரிடும்.

இவ்வாறு தெரிவித்தார். யாழ். சின்மயாமிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த துறவி பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் அண்மையில் ' விழுமியப் பண்பாடுகள் எனும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

மனிதனுடைய வாழ்க்கையின் நோக்கம் எப்பொழுதும் சந்தோசமாக இருக்கவேண்டும் என்பது தான். இது அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தக் கூடியது.

இதனைப்போல் பாடசாலையில் மாணவர்கள் கற்கும் போதும் ஒவ்வொரு இலட்சியங்களையும் மனதில் வைத்துக் கொண்டு கற்கவேண்டும்.

இத்தகைய சிந்தனைகள் வரவேற்கக்கூடியன. சிந்தித்தல் மட்டும் போதாது அதனை நடைமுறைப்படுத்த பல விடயங்களைத் தேடிக் கற்க வேண்டும்.

மனிதர்கள் நாம் நிம்மதி எங்கே இருக்கிறது எனத் தேடித் திரிவதில் எந்தப் பயனும் கிடையாது. அதற்கான வழிகளைத் தான் பின்பற்ற முயற்சிக்க வேண்டும்.

இதற்கான நமது விழுமியப் பண்பாடுகளை மறந்து தவறான வழிகளில் செல்லக்கூடாது. நல்லதைப் பற்றிச் சிந்தித்தால் கிடைக்கும் பலன்கள் ஏராளம்.

இதனை மாணவப் பருவதில் இருந்து பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக உண்மை பேசுதல், பிறருக்கு உதவிசெய்தல், நன்றாகப் படித்தல், பெற்றோரைப் பெரியோரை மதித்தல் போன்றவற்றைக் கல்வியோடு சேர்த்துக் கற்றல் வேண்டும்.

மாணவர் சமுதாயம் மாபெரும் சக்தி வாய்ந்தது சிறந்த எதிர்காலம் இவர்கள் கைகளில் தான் உள்ளது. எனவே ஆசிரியர்கள், பெரியோர்கள் கூறும் அறிவுரைகளைச் சிறிதளவேனும் செவிசாய்த்து அதன்படி நடக்க முயற்சிக்கவேண்டும்.

நற்பழக்க வழக்கங்கள் சிறந்த கல்வியைப் பெறுவதற்கு தானாகவே வாய்ப்பளிக்கும்.- என்றார். (ம-313)

# நல்லூர் பிரதேச மட்ட கலாசாரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

நல்லூர் பிரதேச மட்ட கலாசாரப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**கட்டுரைப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

உமாமகேஸ்வரி புவனேந்திரன் ( செங்குந்தா இந்துக்கல்லூரி) டிலக்ஷினி ரவீந்திரன்( கலட்டி மெ.மி.தக. பாடசாலை), விதுஷா முருகானந்தன்( கனகரத்தினம் மகாவித்தியாலயம்), ரசிந்தா உதயகுமார் (கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு**

சிவஸ்காந்தன் குயென்( இந்துக்கல்லூரி), ரவீந்திரராசா வித்தியாசங்கர்( இந்துக் கல்லூரி), மீரா புவனேந்திரன் ( செங்குந்தா இந்துக் கல்லூரி) ரஜினி ரட்ணகுமார் (செங்குந்தா இந்துக் கல்லூரி).

**கவிதைப்போட்டிகள்**

**கனிஷ்ட பிரிவு**

யோத நிலாஞ்சினி பாலசுப்பிரமணியம் (நல்லூர் இ.த.பெ. பாடசாலை), கார்த்திகா மகேந்திரன் ( இளையதம்பி இந்து வித்தியாலயம்), யோகலிங்கம் விமல்ராஜ் (ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு**

சஜிதா பாலசுப்பிரமணியம் (கனகரத்தினம் மகாவித்தியாலயம்), ருஷிகா தபாநந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), அகிலா சோதிலிங்கம் (கொக்குவில் இந்துக் கல்லூரி), நிலக்ஷி ஸ்ரீ (கொக்குவில் இந்துக் கல்லூரி

**சிறுகதை ஆக்கப்போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

கயல்விழி சந்தனகுமார் (நல்லூர் இ.த.பெ.பாடசாலை), வாமதேவன் பிரதீபன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்).

**கையெழுத்துப் போட்டி**

**கனிஷ்டபிரிவு**

செந்தூரி ஜெகநாதன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்), சுகன்யா இன்பராசா( அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), ரசிகா மோகன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்).

**பாட்டு நயத்தல் போட்டி**

**சிரேஷ்ட பிரிவு**

தர்சிகா இராமகிருஷ்ணன் (செங்குந்தா இந்துகல்லூரி), மேகலா பாலசிங்கம் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), பாலசிங்கம் கோகுலன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்).

**பாடலாக்கப்போட்டி**

**திறந்த பரிசு**

முத்துக்குமார் பாலசுப்பிரமணியம் (ஜே/106), பத்மலோசனி சற்குணமூர்த்தி (ஜே/107), சிவநாமம் சிவதாசன் (ஜே/95).

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

**திறந்த பிரிவு**

சிவநாமம் சிவதாசன் (ஜே/95), பாலசுப்பரமணியம் சங்கீதரன் (ஜே/106), தியாகராசா திலீபன் (ஜே/119).

**விமர்சனம்**

**திறந்த பிரிவு**

சிவநாமம் சிவதாசன் (ஜே/95), ரதி சந்திரநாதன் (ஜே/124),

**சிறந்த பிரிவு ஆங்கில மொழிமூலம்**

எம்.துளசிவந்தனா (ஜே/106),

**சிறுகதையாக்கம்**

**திறந்த பிரிவு**

ஆரணி முகுந்தன் (ஜே/104), முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் (ஜே/106), கணேஸ்வரி தனமூர்த்தி (ஜே/94). (ம-7)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 7

நயினாதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதான அபிவிருத்திக்கென வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

நயினாதீவு கல்வி பொருளாதார அபிவிருத்திக் கழகம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாக கழகத் தலைவர் மு.பரமலிங்கம் தெரிவித்தார். (ம-7)

# இடமாற்றம்

நவாலி, ஜூன் 7

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் அதிபராகப் பணியாற்றிய ரூ.சிவகடாட்சம் இந்த மாதம் முதல் மானிப்பாய் மொமோறியல் ஆங்கில பாடசாலையின் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

# குருநகர் சிப்பாய் மரணம் தொடர்பில் சகா கைதானார்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வெடிவிபத்தில் மரணமடைந்ததாகக் கூறப்பட்ட குருநகர் படைமுகாமைச் சேர்ந்த சிப்பாயின் மரணத்துக்குக் காரணமானவர் எனச் சந்தேகிக்கப்படும் அதேமுகாமைச் சேர்ந்த பிறிதொரு சிப்பாயை யாழ். குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

பதுளையைச் சேர்ந்த விஜயசிங்க என்ற சிப்பாயே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த வெடி விபத்தில் இரத்தினபுரியைச் சேர்ந்த தர்மகுலசேகர (வயது-22) என்ற இராணுவச் சிப்பாய் மரணமடைந்தார். அவரது நெஞ்சில் இரண்டு ரவைகளும், கையில் ஒரு ரவையும் இருப்பது விசாரணையில் தெரிய வந்தது. அதைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் குறித்த சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-4)

# கணினித் திருட்டு சந்தேகநபர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

சிவன் பண்ணை வீதியில் உள்ள கணிணி நிறுவனம் ஒன்றில் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் தொடர்ந்து எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளை யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் நேற்று மேற்கொண்டார்.

விசாரணைகளின் பின்னர் இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எதிர்பார்த்த முக்கிய தகவல்கள் வந்து சேரும். பண விவகாரங்களில் மற்றவர்களை நம்புவது நல்லதல்ல. தாய் வழி உறவுகள் வழியில், செலவுகள் ஏற்படலாம். சிறிய விடயத்திற்காக அலட்டிக் கொள்ளும் சிலரைப் பார்த்து, எரிச்சல் அடைவீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தண்டச் செலவு நேரும்.

**இடபம்:**
பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை, குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். மற்றவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையுடன் பேசுவீர்கள். பெண்கள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும். நல்லது நடக்கும் நாள்.

**மிதுனம்:**
சிலரை நம்பி காரியத்தில் இறங்கி விட்டு, பின்னர், அதற்காக மனவருத்தம் அடைவீர்கள். தெரியாத விடயங்களில் மூக்கை நுழைத்து சிக்கலில் மாட்டிக் கொள்வீர்கள். ஒருவரிடம் வாக்குக் கொடுத்து விட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

**கடகம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பழைய பொருள் ஒன்றை மாற்றி, புதிய பொருள்கள் வாங்கலாம். சக ஊழியர்கள் சிலருடன் கோபதாபங்கள் ஏற்படலாம். மற்றவர்களைப் பார்த்து உங்களை மாற்றிக் கொள்ள நினைப்பீர்கள்.

**சிங்கம்:**
நண்பர்களுக்காக தாராளமாகச் செலவு செய்யலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடிவரலாம். பிள்ளைகள் விடயங்களில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். வீட்டுக்கு வரும் சிலரை உபசரிக் கக் கூட நேரமில்லாமல் அவசரமாக செயற்படலாம். கூடுதல் வேலை நெருக்கடிகளால் பதற்றம் உண்டாகும். கனவுத் தொல்லையுண்டு.

**கன்னி:**
எதற்காகவும் அலட்டிக் கொள்ளாமல் எந்த விடயத்தையும் நிதானமாகச் செய்வீர்கள். கடனாகக் கேட்ட பணம் கிடைக்கும். உறவுப் பெரியவர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். நண்பர்கள் சிலரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். பிரியமானவர்களுடன் உல்லாசமாகப் பொழுது போக்கலாம். சுகமான அனுபவம் பெறலாம்.

**துலாம்:**
மாமன், மைத்துனர்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். எந்த வேலையையும் சுணக்கமின்றி, சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் பெரிய மனிதர் ஒருவரைச் சந்திக்கலாம். சில விடயங்களில் தனிமையில் இனிமை காண முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:**
நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். உங்களின் சில வேலைகளால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். உங்களின் யோசனைகளை மற்றவர்கள் ஏற்க வேண்டும் என நிர்பந்தம் செய்வீர்கள். வெளியூர் பயணம் செல்லலாம்.

**தனுசு:**
புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்களுக்காக நீங்கள் உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளை செய்ய முடியாமல் வேறு வேலைகளைச் செய்யலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடக்கலாம்.

**மகரம்:**
எடுத்த காரியங்களை சிறப்பாகச் செய்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு உண்டு. சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:**
வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். தொழில் ரீதியாக புதிய யோசனை ஒன்று தோன்றி, அதை செயற்படுத்த முற்படுவீர்கள். மனதில் உற்சாகம் குடிகொள்வ தால், எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:**
எதிலும் முன் யோசனையுடன் செயற்பட வேண்டிய நாள். சிலரின் போட்டி, பொறாமை களுக்கு ஆளாகலாம். சேமித்த பணம் ஒன்றை திடீரென செலவு செய்யலாம். ஒவ்வாத உணவு வகைகளைச் சாப்பிட்டு, வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆளாகலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது உறவினர் அல்லது நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம்.

# இந்தியாவி
# கடும் போக்க
# திண்டாடும் ர

ஈழத்தமிழர் விவகாரத்தை ஒட்டி இந்தியா எடுத்திருக்கும் புதிய நிலைப்பாட்டால்- கொழும்பு எதிர்பாராத பேரதிர்ச்சிக்குள் ஆழ்ந்திருக்கிறது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரீஸ் கடந்த மாதம் மூன்றாம் வாரம் புதுடில்லி சென்றிருந்தார். பிரதமர் மன்மோகன் சிங்கில் தொடங்கி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் என்று புதுடில்லியின் வெளிவிவகார அதிகார பீடத்தின் அனைத்துப் பிரமுகர்களுடனும் வரிசையாகப் பேசும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

மூன்று நாள்கள் நீடித்த இந்த பேச்சுவார்த்தையில், இந்தியா சொன்ன தகவல்களைக் கேட்டு மயக்கம் போடாத குறையாக, பீரிஸ் அதிர்ச்சியடைந்து போனார். அந்த அளவுக்கு இந்திய அதிகார வர்க்கம் கொழும்புக்கு எதிராகக் கடும் அழுத்தத்தைப் போட்டுத் தள்ளியிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில், இலங்கை அரசு தனது பிரதான எதிரியாகக் கருதிய தமிழீழ விடுதலைப் புலிகளை அடியோடு அழிப்பதற்கு அனைத்து உதவிகளையும் சத்தம் சந்தடியின்றி இந்தியா இலங்கைக்கு வழங்கி வந்தது என்பது வெளிப்படையானது. இப்போது காரியம் ஆனதும் இந்தியாவை உதாசீனப்படுத்தி கொழும்பு நடக்கின்றது என்ற கோபம் புதுடில்லிக்கு அதிகமாகவே இருக்கிறது.

புலிகளின் கதை முடிந்துவிட்டது. அதனால், இனிப் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயம் செய்ய விரைந்து நடவடிக்கை எடுங்கள். ஈழத்தமிழர் தாயகத்தை சிங்களமயப்படுத்தும் ஆதிக்கப் போக்கைக் கைவிட்டு, ஈழத்தமிழர்களுக்கு அவர்களது நியாயமான வாழ்க்கையை நிறைவு செய்யும் அதிகாரப் பகிர்வை விரைந்து அளியுங்கள்!- என்றெல்லாம் புதுடில்லி இப்போது கடும் அழுத்தம் தருவதால் எரிச்சலில் இருக்கிறது கொழும்பு.

### இலங்கை அரசின் ஆட்சிபீடம் தடுமாற்றம்

அதனால் இந்தியாவுக்குத் தண்ணி காட்டக்கூடிய சீனாவைத் தனது கைக்குள் போட்டுக் கொண்டு, இந்திய அழுத்தத்தை முறியடிக்கலாம் என முன்னர் வியூகம் வகுத்தது கொழும்பு. ஆனால், அந்தத் திட்டம் தான் இப்போது நீர்த்துப் போய் இலங்கை அரசின் ஆட்சிப் பீடத்தைத் தடுமாற வைத்திருக்கின்றது.

இறுதிப்போர் தீவிரமடைந்த காலகட்டத்தில் இலங்கை அரசின் வழிகாட்டுதல்களுடன் இலங்கைப் படைகள் புரிந்த மிகக் கொடூரமான யுத்தக் குற்றங்களை ஐ.நா செயலாளர் நாயகத்தின் நிபுணத்துவ ஆலோசனைக் குழு புட்டுப் புட்டு வைத்து அம்பலப் படுத்தியிருக்கின்றது.

ஐ.நா.வின் அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது குடும்பத்துக்கும், அவரது ஆட்சிப் பீடத்துக்கும் எதிராகத் தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. அது எப்போது வேண்டுமானாலும், பேராபத்து நிலைமை.

குட்டித்தீவான இலங்கைக்கு அருகில் இருக்கும் பிரதான வல்லாதிக்க சக்தி இந்தியா. அதன் நேரடி ஆதரவும், பக்கபலமும் எப்போதும் வெளிப்படையாக இலங்கைக்குத் தேவை. அதிலும் இந்த நெருக்கடியான நேரத்தில் இந்தியா தன் ஆதரவைக் கைவிட்டால் ராஜபக்ஷ தர்பார் மீளவே முடியாது என்பதுதான் உண்மை நிலைமை.

இதைப் புரிந்துகொண்டுதான் இப்போது இலங்கையை நிர்ப்பந்தப்படுத்துகிறது இந்தியா. இதைத்தான் புதுடில்லிக்கு வருகை தந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு விலாவாரியாக எடுத்துரைத்து விளக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

### வாங்கிக் கட்டினார் அமைச்சர் பீரிஸ்

புலிகளைத் தோற்கடித்து யுத்தத்தை வென்று விட்டீர்கள். அந்த யுத்த வெற்றியைப் பலமாக வைத்து உங்கள் ஆட்சி பீடத்துக்குத் தேவையான சகல அரசியல் விவகாரங்களையும் கனகச்சிதமாகவும், நேர்த்தியாகவும் நிறைவேற்றியும் விட்டீர்கள். ஆனால், பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு நீங்கள் நீதி, நியாயம் செய்யவேயில்லை. அவர்களுக்குரிய அதிகாரப் பகிர்வை வழங்கி, அவர்களது வாழ்வை வளம்படுத்த நீங்கள் எதுவுமே செய்யவில்லை. இனிமேலும் இந்தச் சிங்கள மேலாதிக்கப் போக்கை எம்மால் பார்த்து, சகித்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாது! என வெளிப்படையாகவும் காட்டமாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, தனது இலங்கைச் சகபாடிக்கு செமடோஸ் கொடுத்தார் எனத் தகவல்.

இந்தியாவை சமாளித்து தாஜா பண்ணுவதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் எடுத்த எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. இந்தியாவின் சீற்றம், இலங்கை வெளிவிவகார அமைச்சரின் இந்திய விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட இருநாடுகளின் கூட்டறிக்கையில் ஒவ்வொரு வார்த்தைகள் மற்றும் வசனங்களுக்கு



இடையில் பிரதிபலித்ததையும் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

### உண்மையான நல்லிணக்கம் மட்டுமே தேவை

யுத்தத்தின் பின்னர் தமிழர் தரப்புடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என இச்சந்திப்பின் போது அமைச்சர் பீரிஸ் அதிகம் பெருமையடித்திருக்கிறார். ஆனால், அவர் அளந்த கதைகளில் எடுபடாத இந்திய வெளிவிவகார அமைச்சர் நாங்கள் எதிர்பார்ப்பது உண்மையான நல்லிணக்கம் மட்டுமே என்று அமைச்சர் பீரிஸுக்கு பதிலடி தந்ததுகூட கூட்டறிக்கையில் பிரதிபலித்திருக்கின்றது. கடைசியாகப் பீரிஸ் புதுடில்லியை விட்டுப் புறப்படும் முன்னரும்,

ஈழத்தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அதிகாரத்தைப் பரவலாக்கி, அவர்களுக்கு நீதி செய்து, நியாயத்தை நிலைநாட்ட ஆறே ஆறு மாத காலக்கெடு வழங்குகின்றோம். இந்த ஆறு மாதங்களுக்குள் எல்லாம் பூர்த்தியடைய வேண்டும். அதற்கு மேலும் காத்திருக்கவும், கொழும்பின் மாயாஜால பசப்புரைகளைக் கேட்டு வாளாவிருக்கவும் புதுடில்லி தயாரில்லை என்பதை உங்கள் ஜனாதிபதிக்குத் தெரிவியுங்கள்! என்று இறுக்கமாகவும், காட்டமாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

புதுடில்லியின் இந்தக் காட்டத்தால் கொழும்பு கதிகலங்கிப்போயிருக்கிறது. ஈழத்தமிழர்களுக்காகக் குரல் எழுப்பும் புதுடில்லியின் இந்தப் போக்கை எதிர்த்துப் போராட்டங்களை நடத்த முயற்சி செய்து வருகின்றன பௌத்த, சிங்கள பேரினவாத சக்திகள். ஆனால், நிலைமையின் விபரீதத்தை உணர்ந்துள்ள கொழும்பு ஆட்சிப் பீடம் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதாகத் தெரிகின்றது. அதனால் அந்தச் சக்திகள் வெறும் கண்டன அறிக்கைகளோடு இப்போதைக்கு அடங்கிப் போயிருக்கின்றன.

ஆனால், புதுடில்லியுடனான உறவில் இலங்கை சறுக்கி வருவது மிகமோசமான விளைவை ஏற்படுத்தும் என்பதை ராஜபக்ஷவின் அரசியல் ஆலோசகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வின்
# க்கால்
# ம் ராஜபக்ஷ

**இலங்கை விவகாரத்தில் அடங்கிப் போயிருக்கும் புதுடில்லியின் சீற்றம் என்ற எரிமலை எந்தச் சமயத்திலும் பகிரங்கமாக வெடித்துத் தனது கொதி குழம்பை பகிரங்கமாக வாரியிறைக்கலாம் என்பதே நிலைமை.**

**ஈழத்தமிழர்களுக்கு விரைந்து நீதி செய்ய வேண்டிய நியாயத்தை புதுடில்லி உணர்ந்துள்ளது. அதை உறுதியாகவும் கொழும்புக்கு அது உணர்த்தியுமுள்ளது. இதில் கொழும்பு இனிமேலும் மௌனம் காட்டுமானால், அது கொழும்பு ஆட்சிபீடத்துக்குப் பெரும் சாவுமணியாகும் என்பதே இன்றைய புறநிலை.**



வெளிப்படையாகவே அரசுக்கு எடுத்துரைக்கத் தொடங்கியுள்ளனர்.

### ரொஹான் குணரட்ண எச்சரிக்கை

இலங்கையின் யுத்த விவகாரத்தில் நெளிவு சுழிவுகளை நன்கு அறிந்த புத்திஜீவி என வர்ணிக்கப்படுகின்ற பேராசிரியர் ரொஹான் குணரட்ண கொழும்பு அரசை இவ்விவகாரத்தில் பகிரங்கமாக எச்சரித்துள்ளார். இலங்கையை மீண்டும் ஒரு தடவை தண்டிக்கவும் இந்தியா தயங்காது - என அவர் வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

2009 ஆம் ஆண்டில் முடிவடைந்த 30 ஆண்டு காலப் போரின் தொடக்கத்தில் தமிழ்ப் பிரிவினை வாதிகளுக்கு இந்தியா ஆதரவு கொடுத்தது. அது மீண்டும் இடம்பெற அனுமதிக்கக் கூடாது. அப்படி இடம்பெற்றால் அதனால் நாம் (இலங்கை) மிகவும் பாதிக்கப்படுவோம்.

அதே போல, சீனாவுடன் அதிகப்படியான நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதும் இந்தியாவுடன் விரோதத்தை வளர்க்கும்.

சீனாவின் ஆதரவு நமக்கு வேண்டும். அதற்காக இந்தியாவைப் பகைக்கக் கூடாது. இந்தியப் புலனாய்வுச் சேவைகளுடன் இலங்கை விரோதமாக நடந்து கொள்வதாக இந்தியா உணர்ந்து கொண்டால், 1980 களில் தமிழ்ப் பிரிவினை வாதிகளுக்கு பயிற்சிகளை அளித்தது போன்று மீண்டும் ஒரு முறை இலங்கையில் குழப்பத்தை ஏற்படுத்த இந்தியா பயிற்சிகளை வழங்கும்.

இனப்போரின் தொடக்கத்தில் தென்னிந்தியாவில் தளம் அமைத்திருந்த தமிழ்ப் பிரிவினைவாதிகள் படகுகளில் வந்தே தாக்குதல்களை நடத்தினர். அப்போது இலங்கையின் அரசியல் தலைவர்கள் பலரும் மேற்கு நாடுகளின் பக்கம் சார்ந்து நின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் மேற்குலக சக்திகள் போரை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தபோது இலங்கைக்கு இந்தியா கொடுத்த ஆதரவு மிகவும் முக்கியமானது. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தக் கூடிய வல்லமை பெற்ற ஒரே நாடாக இந்தியாவே இருந்தது.

இந்தியாவுடன் இலங்கை அரசு கொண்டிருந்த நெருக்கமான உறவு காரணமாக, போரை நிறுத்தும் முயற்சிகள் சாத்தியப்படவில்லை. அதனால், வேறெந்த நாட்டின் ஆதரவையும் விட நமக்கு இந்தியாவின் ஆதரவு முக்கியமானது.

நாம் இந்தியாவைப் பகைத்துக் கொண்டால், இந்தியா ஏனைய பல நாடுகளுடன் சேர்ந்து நம்மைத் தண்டிக்கும். - என்கிறார் அவர்.

இலங்கையின் சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாக பல்வேறு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் வரைந்துள்ள ரொஹான் குணரட்ண கூறுகின்ற இந்தத் தகவல், இலங்கை இந்திய உறவு இன்றைய காலகட்டத்தில் நீறுபூத்த நெருப்பாக இருப்பதையே உறுதிப்படுத்துகின்றது.

### புதுடில்லியின் சீற்றம்

இலங்கை விவகாரத்தில் அடங்கிப் போயிருக்கும் புதுடில்லியின் சீற்றம் என்ற எரிமலை எந்தச் சமயத்திலும் பகிரங்கமாக வெடித்துத் தனது கொதி குழம்பை பகிரங்கமாக வாரியிறைக்கலாம் என்பதே நிலைமை.

ஈழத்தமிழர்களுக்கு விரைந்து நீதி செய்ய வேண்டிய நியாயத்தை புதுடில்லி உணர்ந்துள்ளது. அதை உறுதியாகவும் கொழும்புக்கு அது உணர்த்தியுமுள்ளது. இதில் கொழும்பு இனிமேலும் மௌனம் காட்டுமானால், அது கொழும்பு ஆட்சி பீடத்துக்குப் பெரும் சாவுமணியாகும் என்பதே இன்றைய புறநிலை.

மஹிந்தவின் ஆட்சிப் பீடத்துக்கு இது நன்கு புரிந்துள்ளது. இந்தியாவின் இந்தச் சீற்றத்தை எப்படிச் சமாளிப்பது என்று ஜனாதிபதி மஹிந்த மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கின்றார் என்கின்றன அவருக்கு நெருக்கமான தரப்புக்கள்.

இந்தியாவைத் தாஜா பண்ணிக் கையில் போட்டுக் கொள்வதன் மூலமே இப்போது யுத்தக் குற்ற விவகாரத்தில் தனக்கு எதிராகத் திரும்பி நிற்கும் சர்வதேசத்தை சமாளிக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ, அதற்கான காய் நகர்த்தல்களை ஏற்கனவே ஆரம்பித்து விட்டார் என்றும் கூட அந்தத் தரப்புகள் கூறுகின்றன.

அவரது சாணக்கிய முயற்சிகள் வெற்றி பெறுமா, அவரது தந்திரோபாய வலையில் புதுடில்லி திரும்பவும் வீழ்ந்து, அதனால் தொடர்ந்து மௌனம் காத்து கொழும்பைக் காப்பாற்றிக் காபந்து பண்ணுமா என்பவற்றையெல்லாம் நாம் பொறுத் திருந்துதான் பார்க்கவேண்டும்.

நன்றி: சூரியக்கதிர்

## காவிரிக் கரையில் கடல் நிறக் கடவுள்



அவர் ஒரு கடன்காரர். அவரைக் ''கொடாக் கண்டர்'' என்று கூறுவர். கடன் கொடுத்தவரோ விடாக் கண்டர். கொடுத்த கடனை வாங்குவதற்காக வீட்டுக்கே வந்து நின்று விட்டார் விடாக் கண்டர்.

கடன் வாங்கியவர் கலங்கவில்லை. ''வீட்டில் அப்பா இல்லை'' என்று பொய் சொல்லும்படி புத்திரனை அனுப்பினார். ''அப்பா இல்லை என்று சொல்லச் சொன்னார்'' என்று அசடு வழிந்தான் கொடாக் கண்டரின் அருமை மகன். ''அதனால் என்ன? வருகிறவரை இருந்து பார்க்கிறேன்'' என்று திண்ணையில் தூசுதட்டி உட்கார்ந்து விட்டார் விடாக் கண்டர். எவ்வளவு நேரம் இப்படி உட்காரமுடியும்? எப்படியும் எழுந்து போகத்தானே போகிறார் என்று கொடாக் கண்டர் வீட்டுக்குள்ளேயே ஒளிந்து கொண் டார்.

கடன் கொடுத்தவரோ என்ன நேரம் ஆனாலும் பரவாயில்லை. கொஞ்ச நாளானாலும் இருந்து கடனை வாங்கும் முடிவில் துண்டை விரித்துத் திண்ணையில் படுத்துவிட்டார். ஒரேயடியாகத் தூங்கினால் கடன்காரன் தப்பிவிடுவானோ என்று கையைத் தூக்கித் தலைக்கு வைத்தபடி ஒருக்களித்துப் பாதிக் கண்களை மூடியபடி கிடந்தார். உண்மையில் தூங்காமல் தூங்குவது போலக் கிடந்தால் வெளியே வருகிறபோது கடன்காரனை அமுக்கிப் பிடித்துவிடும் நினைப்பிலேயே படுத்திருந்தார். இப்போது கடன்காரர் யார் என்று புரிகிறதா? நாம்தான் கடன்காரர். திருவரங்கத்தில் பாதி விழி திறந்து படுத்துக்கிடக்கும் பரம்பொருளுக்கு நிறையவே கடன்பட்டுவிட்டோம். பல ஜென்மத்துப் பாவ புண்ணியக் கடன் கணக்கில் இருந்து நழுவியோடும் எமது கடன்களை வாங்க வந்த விடாக் கண்டரே திருவரங்கத்துத் திருமால்.

இராமனுக்குப் 'பெருமாள்' என்று பெயர். அந்தப் பெருமாளே பூஜித்து வந்ததால் 'பெரிய பெருமாள் ' எனப் பெயர் பெற்றவர் ஸ்ரீ ரங்கநாதர். விபீடணன் விரும்பிய காரணத்தால் இலங்கைக்கு எடுத்துப்போக இந்த அரங்கநாதனைத் தானம் தந்தார் இராமபிரான். ஆனால் வழியில் இந்த அரங்க மண்ணில் சிறிதுநேரம் வைத்து இளைப்பாறி வழிபாடு செய்துவிட்டு இலங்கைக்கு எடுத்துப்போக விபீடணன் விரும்பியபோது நகர மறுத்தார் நாராயணர். கடல் கடந்து சிலைகள் போவது கடவுளுக்கே இஷ்டம் இல்லை போலும்.

ஒரு சமயம் கங்கைக்கும் காவிரிக்கும் கடும் கருத்து மோதல்; யார் புனிதர் என்று. எப்போதோ உலகளந்த திருவடியை கங்கையில் நனைத்ததால் கங்கை புனிதம் என்று எல்லோரும் தீர்ப்பளித்தனர். இதற்காகக் காவிரி கடுந்தவம் புரிந்தாள். எப்போதும் திருவடியை நனைக்கும் பேறுபெற்று - அரங்கநாதராம் திருமாலின் திருமுடி முதல் திருவடி வரை ஒரு நீர் மாலையாகிக் கிடக்கும் பேறு பெற்றாள். திருமாலைச் சுற்றி ஒரு திருமாலையாகக் காவிரி கிடக்கும் காரணம் பற்றித் தமது திருமாலை என்ற பாசுரத்தில் ''கங்கையிற் புனிதமாய் காவிரி நடுவுபட்டு'' என்று தொண்டரடிப் பொடியாழ்வார் கொண்டாடி மகிழ்ந்தார்.

அரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கும் அழகே தனி. தென் திசைக்குத் திருமுகம். வட திசைக்கு முதுகு. மேற்கே தலை. கிழக்கே பாதம் என்று படுத்திருக்கிறார். விபீடணன் வேண்டியதால் தென்திசை இலங்கை நோக்கிப் படுத்தார் என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் ஆழ்வாரில் ஆழ்ந்த உரையாசிரியர்களோ தென் திசை கண்டார்கள். முரட்டு சமஸ்கிருதம் வழங்கும் வட திசைக்கு முதுகுகாட்டி ஆழ்வார்களின் தமிழ் நடை போடும் தென் திசைக்கு முகம் காட்டினார்கள் என்று அனுபவித்தார்கள். முதுகு காட்டுவதை விட முகம் காட்டுவதே மரியாதை என்பதால் தமிழருக்குத் தலை வணங்கும் பெருமாளாக இதனை உணர்ந்தனர். கடல் நிறக் கடவுள் எந்தை காவிரிக் கரையில் தலை வைத்துப் படுத்தது இந்தக் தமிழ்த் தாகம் தணிவதற்குத்தான்.

அரங்கம் என்பது ஆற்றிடைக் குறையே என்றபடி காவரி கொள்ளிட நதிகளின் இடையே துருத்திய பகுதியே திருவரங்கம். ஏழு உலகங்களும் உடையவன் திருமால் என்பதற்காக ஏழு பிரகாரங்களையுடையது அரங்கம். ஏழு மதில்களும் அவ னது ஆடைகள் என்று சொல்வது வழக்கம். அத்தகைய கடல்நிறக் கடவுளாகிய அரங்கநாதரின் அருளாட்சி காவிரிக் கரையில் என்றும் நடை பெறுகிறது.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ்களிடமிருந்து எவ்வாறு கணினியைப் பாதுகாக்கலாம்



கணினியை நிலைகுலையச் செய்யும் வைரஸ்கள், மால்வேர்கள் போன்றவற்றைத் தடுப்பதற்காக நாம் அண்டிவைரஸ் மென்பொருள்களைப் பயன்படுத்தி வருகிறோம். சில கணினிகளில் மால்வேர்கள், ஸ்பைவேர்களின் காரணமாகக் கணினி மெதுவாக இயங்கும். இவற்றை ஒருசில நேரங்களில் அன்ரி வைரஸ் மென்பொருள்களால் கண்டறிய முடிவதில்லை.

அன்ரி வைரஸில் இல்லாத சில வசதிகளைக் கருத்தில் கொண்டு கணினியின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்க உருவாக்கப்பட்ட மென்பொருள் தான் IoBit Malware Fighter.

Iobit நிறுவனத்தின் மற்ற தயாரிப்புகளான Advanced System care மற்றும் GameBooster போன்றவையும் மிகுந்த பிரபலமான மென்பொருள்களாகும். இந்த மென்பொருளின் நோக்கத்தை அவர்கள் Extra Protection for your PC Sequrity" என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மென்பொருள் என்னென்ன பாதுகாப்பை வழங்குகிறது?

1. அன்ரி வைரஸ்களால் செய்ய முடியாத மால்வேர்கள் மற்றும் ஸ்பைவேர்களை (Malwares, spywares) எங்கிருந்தாலும் கண்டுபிடித்து அழிக்கிறது. புதியதாக வராமல் தடுத்துப் பரவாமல் பார்த்துக் கொள்கிறது. மால்வேர்கள் மற்றும் ஸ்பைவேர்களும் வைரஸைப் போன்று கணினியைப் பாதிக்கச் செய்யக்கூடியவை.

2. இவை மட்டுமின்றி பலவகையான ஸ்பைவேர்கள், ஆட்வேர்கள்(Adwares), மோசமான ட்ரோஜன் வைரஸ்கள்(Trojans), Keyloggers, bots, worms, hijackers போன்றவற்றிலிருந்து கணினியைப் பாதுகாக்கிறது.


3. இதன் DualCore நிரல் எஞ்சின் சிக்கலான மால்வேர்கள், ஒளிந்திருக்கும் ஸ்பைவேர்களை விரைவான நேரத்தில் கண்டறிந்து அழிக்கின்றது.

4. இதில் பலவகையான பாதுகாப்பு அம்சங்கள் தரப்பட்டுள்ளன. Startup guard, கrocess guard, Network guard, File guard, Cookie guard, Browser guard, இற்கு Bguard, Malicious Action guard. இதுபோன்று கணினிக்கு எங்கிருந்தெல்லாம் வைரஸ்கள், மால்வேர்கள் போன்றவை உள்ளே வரும் இடங்கள், பரவும் இடங்களில் உட்கார்ந்து கொண்டு அவற்றைக் கவனித்து அழிக்கின்றன.

5. இந்த மென்பொருள் கணினியின் டிரைவர் கோப்புகளையும் சரியாகச் சோதித்துப் பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறது. சோதிக்க மூன்று வசதிகள் தரப்பட்டுள்ளன. Smart Scan, Full Scan, Custom Scan.

அன்ரி வைரஸ் கணினியில் நிறுவப்பட்டிருந்தாலும் இந்த மென்பொருளைப் பயன்படுத்தலாம். இது ஏற்கனவே இருக்கும் அன்ரி வைரஸ் மென்பொருளோடு இணைந்து செயற்படக்கூடியது.

# விண்டோஸ் ஒபரேடிங் சிஸ்டத்தை லொக் செய்வதற்கு



கணினிப் பயன்பாட்டுத் தேவைக்கு வெளியிடப்படும் மென்பொருள்கள் அனைத்தும் விண்டோஸ் ஒபரேட்டிங் சிஸ்டத்தைச் சார்ந்தே உள்ளன. இதற்குக் காரணம் கணினிப் பயனாளர்கள் பெருமளவில் விண்டோஸ் ஒபரேட்டிங் சிஸ்டத்தைப் பயன்படுத்துவதே காரணம் ஆகும்.

இவ்வாறு அதிகளவில் பயன்படுத்தப்படும் ஒபரேட்டிங் சிஸ்டத்தில் பெருமளவு குறைபாடுகள் உள்ளன. இதில் முக்கியமான குறை என்னவெனில் விண்டோஸ் ஒபரேட்டிங் சிஸ்டத்தை லொக் செய்யும் வசதி இல்லை. பொதுவாகப் பயனர் கணக்கு தொடங்கி கடவுச்சொல் இட்டு பயன்படுத்தி வருவோம். இதுபோன்று பயன்படுத்தினால் பிரச்சினை இல்லை. ஆனால் கடவுச்சொல் உருவாக்காமல் இருந்தால் என்ன ஆகும்.

அந்தக் கணினியை யார் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும். அந்தக் கணினிக்கு எந்த ஒரு பாதுகாப்பும் இல்லை. அவ்வாறு உள்ள கணினிகளில் கோப்புகள், கோளன்களை மறைத்து வைத்துப் பயன்படுத்தி வருவோம். சில நேரங்களில் ஒபரேட்டிங் சிஸ்டத்தையே பிறர் பயன்படுத்தாதவாறு செய்ய நினைப்போம். அதுபோன்று ஒபரேட்டிங் சிஸ்டத்தை லொக் செய்ய சில மென்பொருள்கள் உதவி செய்கின்றன. அந்த வகையில் எமக்கு உதவி செய்யும் மென்பொருள்தான் WinLockr.

மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து மென்பொருளை open செய்யவும். இந்த WinLockr அப்ளிகேஷனானது போர்டபிள் அப்ளிகேஷன் ஆகும். பின் விருப்பமான கடவுச்சொல்லை உள்ளிடவும்.

கடவுச்சொல்லை உள்ளிட்டு பின் எந்த போர்மட்டில் இயங்குதளத்தை லொக் செய்ய வேண்டும் என்பதை தேர்வு செய்யவும். கடவுச்சொல் மற்றும் USB என்ற இரு வேறுபட்ட முறைகளில் லொக் செய்ய முடியும். அடுத்து Lock windows என்னும் பொத்தானை அழுத்தவும். அவ்வளவுதான் விண்டோஸ் இயங்குதளமானது லொக் செய்யப்படும். நீங்கள் கடவுச்சொல் இட்டு இயங்குதளத்தை லொக் செய்தால் கடவுச்சொல் இட்டதை மட்டுமே open செய்ய முடியும். USB மூலமாக லொக் செய்தால் USBயை அகற்றினால் மட்டுமே இயங்குதளத்தை பயன்படுத்த முடியும்.

இவ்வாறு விண்டோஸ் ஒபரேட்டிங் சிஸ்டத்தை லாக் செய்வதன் மூலமாக பிறர் எமது கணினியைத் திருட்டுதனமாக அணுகுவதைத் தடுக்க முடியும். இதில் முக்கியமான விடயம் என்னவெனில் USB ட்ரைவினைப் பயன்படுத்தினால் மட்டுமே லொக் செய்ய முடியும்.

# கணினியை முழுவதுமாக தமிழில் மாற்றுவதற்கு




உங்கள் கணினியை முற்று முழுதாகவே தமிழில் மாற்ற பலருக்கு ஆசை இருக்கலாம். ஆனால் எவ்வாறு மாற்றுவது? அதற்கு எவ்வாறான மென்பொருள்கள் தேவை? இது இலவசமாகக் கிடைக்குமா? என்பது பலரின் எதிர்பார்ப்பு.

உங்களிடம் BitLocker குறியாக்கம் செயற்படுத்தப்பட்டிருந்தால் LIPI நிறுவுவதற்கு முன் அதை இடைநிறுத்தி வைக்கவும். Control Panell திறந்து System and Security என்பதைத் தேர்ந்தெடுத்த பின், BitLocker Drive Encryption என்பதைத் தேர்ந்தெடுக்கவும். Suspend Protection என்பதைக் கிளிக் செய்யவும்.

Windows 7 LIP இன் 32 பட் மற்றும் 64 பட் பதிப்புகளின் பதிவிறக்கங்கள் தனித் தனியே கிடைப்பதால் பதிவிறக்கத்தைத் தொடங்குவதற்கு முன் Windows 7 இன் எந்தப் பதிப்பை நிறுவியுள்ளீர்கள் என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

Windows 7இன் எந்தப் பதிப்பை நிறுவியுள்ளீர்கள் என்பதை பின்வருமாறு தீர்மானிக்கலாம்: Start பொத்தானைக் கிளிக் செய்தபின் கணினி என்பதில் வலது கிளிக் செய்து Properties என்பதைத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் கணினி குறித்த அடிப்படைத் தகவலை இது காண்பிக்கும்.

அமைப்பு வகைக்கு, அமைப்பு என்ற பிரிவைப் பார்க்கவும். உங்கள் Windows 7 இயக்க முறைமை, 32 பட் இயக்க முறைமையா அல்லது அது 64 பட் இயக்க முறைமையா என்பதை இது காட்டும். 32 பட் பதிப்பை நிறுவ நீங்கள் இவற்றைச் செய்யலாம்:

குறிப்பிட்ட இணையத்தளத்துக்குச் சென்று தரவிறக்கம் என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும், பின்னர் LIP &I நிறுவ Open என்பதைக் கிளிக் செய்யவும் அல்லது தகவலிறக்கம் என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும். கோப்பை உங்கள் கணினிக்கு நகலெடுக்க Save என்பதைக் கிளிக் செய்யவும். LIPI நிறுவ பதிவிறக்கிய கோப்பிற்கு சென்று அதை இரு முறை கிளிக் செய்யவும். 64 பட் பதிப்பை நிறுவ மேலே உள்ள இரண்டாவது விருப்பத்தையே நீங்கள் பயன்படுத்த வேண்டும்.


# சீடிக்களைத் தயாரிப்பதற்கு

இறுவட்டு மற்றும் டிவிடிக்களைத் தயாரிப்பதற்கான மென்பொருள் அப்ளிகேஷன்கள் இலவசமாக இணையத்தில் கிடைக்கின்றன.

பல்வேறு அம்சங்களுடன் கூடிய சீடி பர்னர் பதிப்பு(ver. 4.3.8) இணையத்தில் இலவசமாகக் கிடைக்கிறது. இதனை தரவிறக்கம் செய்து நேரடியாக உங்கள் கணினியில் நிறுவச் செய்திடலாம். மற்ற இறுவட்டு பர்னர்களைக் காட்டிலும் இது நவீன வசதிகளைக் கொண்டுள்ளது. இதில் எந்த விதமான விளம்பர புரோகிராம்கள் அல்லது கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களோ இணைந்து வருவதில்லை.

கணினியில் இதனை நிறுவச் செய்து இயக்கியவுடன் தொடக்க திரையில் ஐந்து பட்டன்கள் உள்ளன. அவை Data Disc, Audi Disc, Burn ISO image, Copy Disc and Erase Disc. இவைகள் தேர்ந்தெடுக்க தரப்பட்டிருக்கும் இன்டர்பேஸ் ஆகும். இதில் எது உங்கள் வேலைக்குச் சரியான பட்டனோ அதனைக் கிளிக் செய்திடவும். எடுத்துக் காட்டாக நீங்கள் தகவல் கோப்புக்களைக் கொண்டு இறுவட்டு உருவாக்கப்போகிறீர்கள் என்றால் இதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உடன் கிடைக்கும் விண்டோவில் மேலும் இரு பட்டன்கள் உள்ள ஒப்ஷன் திரை கிடைக்கும்.

பின் அதன் வழியே சென்றால் எளிதாக இறுவட்டு பர்ன் செய்யலாம். இந்த புரோகிராமை விண்டோஸ் 2000ல் தொடங்கி இன்றைய விஸ்டா ஒபரேட்டிங் சிஸ்டங்கள் வரையில் இயக்கலாம். இதனை இன்ஸ்டோல் செய்திடும் முன் உங் கள் சிஸ்டத்தில் .net framework இருப்பதனை உறுதி செய்திடுங்கள். இது இல்லை என்றால் இந்த புரோகிராம் சரியாகச் செயற்படமாட்டாது.



# Speed Fan - கணினியின் வெப்பநிலையை சீராக வைப்பதற்கு

உங்கள் கணினி சீராக இயங்க வேண்டுமென்றால் உங்களுடைய கணினிக்குச் சமச்சீரான தட்பவெப்ப நிலை இருக்க வேண்டும். நீங்கள் கணினியை அதிக நேரம் பயன்படுத்தி வந்தால் உங்களுடைய கணினியில் உள்ள Hardisk, Processor மற்றும் Motherboardகள் விரைவில் வெப்பமாகிவிடும். இதனால் உங்களுடைய கணினியின் ஆயுள்காலமும் வெகுவாக குறைகின்றது. உதாரணமாக 5 வருடம் வரை இயங்கும் தன்மையுள்ள வன்பொருள்கள் 4 ஆண்டுகள் வரையே இயங்கும். இதை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. இந்த வெப்பத்தைக் குறைக்க நம் கணினியில் Processor/Motherboard Cooling Fan பொருத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இதில் முழு பயனை நாம் அடைவதில்லை. Speed Fan என்கிற இந்த சிறிய இலவச மென்பொருளைக் கொண்டு உங்களுடைய கணினியின் வெப்பநிலையை அறிந்து கொள்ளலாம். இதனால் உங்களுடைய கணினி இருக்கும் [illegible] குறைக்க நீங்கள் வழி வகுக்கலாம். அது மட்டுமின்றி இந்த மென்பொருளில் நேரடியாக உங்களுடைய கணினியைக் கையாளும் திறன் உள்ளதால் உங்களுடைய கணினியை இது கண்காணித்து உங்களுக்கு தெரிவிக்கிறது. பல மணி நேரம் கணினியைப் பயன்படுத்துபவர்களுக்குத் தேவையான ஒரு அவசிய மென்பொருள் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் யுத்தகாலங்களிலும் அன்னதானம்

(சென்றவாரத் தொடர்ச்சி)



செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அரசம்மா மடத்தில் 1988 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதல் இயங்கி வந்த சந்திதியான் ஆச்சிரமம் இந்திய அமைதிப் படையினரின் தாக்குதல், அதனைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு முதல் இலங்கை இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் சந்நிதியில் இருந்து கொண்டு அன்னதானப் பணிகளைக் குறைக்காமல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் செல்வச்சந்நிதி கோயிலில் ஒரு நேரப் பூஜை மட்டுமே இடம் பெற்றது. பூஜைகள் முடிவுற்றதும் பக்தர்கள் இல்லாத நிலையிலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அதன் நிர்வாகியும் ஒரு சில பணியாளர்களும், சந்நிதி முருகனே தஞ்சம் எனத் தமது இறுதிக் காலத்தில் தஞ்சமடைந்திருந்த சுமார் 25 வயோதிபர்களும் சந்நிதியான் ஆச்சிரமத்திலேயே வருவது வரட்டும்; நடப்பது நடக்கட்டும்; ஆற்றங்கரையானே துணை என அங்கேயே தங்கியிருந்தனர்.

சந்நிதியில் தஞ்சம் புகுந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த 25 வயோதிபர்களுக்கும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மூன்று நேர உணவு குறையாமல் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரின் தாக்குதல் உத்வேகம் அடைந்ததைத் தொடர்ந்து வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மக்கள் குறிப்பாக மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் வடமராட்சிக்கு இடம்பெயர்ந்தனர். இவர்களுக்கு நிலையான முகாம் ஒன்று கிடைக்கும்வரை இவர்களுக்கான உணவைச் சந்நிதியான் ஆச்சிரமமே வழங்கி வந்தது. இதேபோல் வடமராட்சிப் பகுதியிலிருந்து இடத்துக்கு இடம் இடம்பெயரும் மக்களுக்கும் அவ்வப்போது உணவுப் பொதிகளை சந்நிதியான் ஆச்சிரமமே வழங்கியது.

நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் தங்குதடையின்றி அன்னதானத்தையும், பாதிக்கப்பட்டோருக்கு உணவு வழங்கவும் சந்நிதியான் ஆச்சி ரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகளும், சமூகசேவையாளரும் மூத்த ஆயுர்வேத வைத்தியருமான கு.சிவசம்புவும் மண்ணெண்ணையில் ஓடும் மோட்டார் சைக்கிளில் அலைந்து திரிந்து அரிசி, மரக்கறிகளை மாலை நேரத்தில் தினமும் பெற்றுவந்தனர். இதன் மூலம் தமது பணியைத் தங்கு தடையின்றித் தாராளமாக மேற்கொண்டு வந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினமும் அன்னதானப் பணிகள் நடைபெறத் தொடங்கியதால் 1990 ஆம் ஆண்டு முதல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நித்திய அன்னப் பணி நிரந்தரமானது.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் மிகச் சிறப்பாக நித்திய அன்னப் பணி முன்னெடுக்கப்பட்டன. ஆச்சிரமம் பொருளாதார நிலையில் அல்லலாடிக் கொண்டிருந்த அந்த வேளையில் வடமராட்சி உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பரோபகாரிகளும், அன்னப் பணிகளின் தாற்பரியத்தை உணர்ந்தோரும் தாமாகவே முன்வந்து உதவிகளை வழங்கி வந்தனர்.

பிரதி வெள்ளிக்கிழமைகள் மற்றும் சந்நிதிமுருகன் உற்சவ தினங்கள், விசேட தினங்கள் ஆகிய நாள்களில் மாத்திரம் அன்னப் பணிகளை நடத்தி வந்த சந்நிதியான் ஆச்சிரமம், பெரியோர்களின் ஆசிகள், ஆலோசனைகளின் பயனாக ஆச்சிரமம் ஆரம்பித்து இரண்டாவது வருடத்தில் 1990 ஆம் ஆண்டு அதுவும் போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில் நித்திய அன்னப்பணியை ஆரம்பித்தது. தினம் தினம் சந்நிதி முருகனை நாடிவருவோர்களுக்கும் உணவியின்றித் தத்தளித்த வயோதிபர்க ளுக்கும் நித்திய அன்னப்பணி பெரும் ஆறுதல் அளித்தது.

அன்னப்பணி ஆற்றிவரும் நிறுவனம் ஒன்று நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சிறப்பான சேவை ஆற்றி வருவதைக் கண்ட கல்விமான்களும், அறிஞர்களும், சமூக சேவையாளர்களுமான அமரர்களான பேராசிரியர் அ.துரைராசா, பண்டிதர் க.முத்துவேல், சமூகசேவையாளரும் மூத்த ஆயுர்வேத வைத்தியருமான கு.சிவசம்பு மற்றும் தற்போது கனடாவில் வசித்துவரும் இளைப்பாறிய கோட்டக்கல்வி அதிகாரியுமான ந.அரிய

**மாயவன்**


ரத்தினம் ஆகியோரின் வழிகாட்டலில் அன்னதானப் பணிகளுடன் ஆன்மீகப் பணிகளை மேற்கொள்வதற்காக சந்நிதியான் ஆச்சிரமத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை என்ற அமைப்பு ஒன்றை 1993 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

இந்தப் பேரவை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சந்நிதிமுருகனுக்கு முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் பூசையைத் தொடர்ந்து 10.30 மணிக்கு ஆன்மிக நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

(தொடரும்)

# நெஞ்சில் ஓர் ஆலயம்!

(சென்றவாரத் தொடர்ச்சி)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பேணப்படும் விதத்தைப் பார்த்தால் எவரும் முகம் சுழிக்காமல் வந்து எனது சொந்த வீடு போல தங்கிப் போகலாம். அந்த வகையில் பணியாளர்களின் நடவடிக்கைகள் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றன.இரண்டு கைகளிலும் இரண்டு ஊன்றுகோல்களை கால்களாகத் தாங்கியபடி சற்றும் சளைக்காமல் தற்போது பத்வியேற்றுத் தனது பணிகளைச் செய்யும் வைத்திய கலாநிதி கே.நந்தகுமாரனைக் காணும் போதெல்லாம் தேகம் மயிர் கூடச் செறிகிறது.

இந்த உலகில் மனிதராகப் பிறந்தவரெல்லோரும் இத்தகைய கருணைக் கடல்களைக் காணக் கொடுத்து வைத்தவர்கள். மற்றவர்களென்றால் தமது அலுவலகத்தையே தரை மாடிக்கு மாற்றி இருப்பார்கள். இவர் எப்படி மாடிப் படியேறித் தனது அலுவலகத்தை அடைகிறார் என வியந்தேன்.

வைத்திய கலாநிதி கே. நந்தகுமாரன் வைத்திய அதிகாரியாக மந்திகைக்கு இடம்மாறி வந்தபோது அவர்களது அலுவலகத்தைத் தரைமாடிக்கு மாற்ற உத்தியோகத்தர்கள் பலரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அதற்கெல்லாம் அவர் இடம்தரவில்லை.

என்னால் இயலாது என்று வலுவிழந்தவர்களாகத் தம்மை தாமே நினைப்பவர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக அவர் திகழ்கிறார் என்றால் சாதாரண மனிதர்களால் ஏன் அவரைப் போல் சுமுகமாக இயங்க இயலவில்லை, மாடிப்படி ஏற முடியவில்லை என்பதே கேள்வி.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விருது விழா மேடைக்கு கோலூன்றி ஏறிவந்து தனது கைகளில் விருதைப் பெற்றுக் கொள்ளும் பெருமையான கணத்தில் கரகோஷம் வானைப் பிளக்க அவரும் அவரது அணியினரும் வானளாவ உயர்ந்து காட்சி தருகின்றனர். இவர்களது கைகளில் விருதை வழங்க அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

வைத்திய அதிகாரி நந்தகுமாரன் ஐயாவிடம் பேச்சுக் கொடுத்தேன். அவரைப் பரிதாபமாக அணுகிய எனக்கு கிடைத்தது வெறும் ஏமாற்றம்தான். அவர் தன்னை அடுத்த கட்ட தடை தாண்டலுக்காக தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவரது உற்சாகமும் ஊக்கமும் இயலாமையை பின் தள்ளி முன்னேற வைக்கின்றன. ஒரு விசேட வைத்திய நிபுணராகத் தன்னை ஆக்கிக்கொள்ள சாதாரண மனிதர்களுக்கே இயலாமல் இருக்கும் போது கடினமான இலக்குகளை நோக்கி அவர் நடை பயில்கிறார்.

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் சுறுசுறுப்பாக இயங்கும் பல்வேறு தளங்களிலும் பல பயிற்சிகளை அவர் பெறவேண்டி இருக்கும். மன உறுதியே அத்திபாரமாக ஊன்றுகோல்கள் துணையாக எடுக்கப்படும் அவரது முயற்சிகள் நிச்சயம் வெற்றி பெறும்!

> பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சிறந்த சேவைக்காக வெள்ளி விருது கிடைத்தமையை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

எமது மண் அதன் பயன்களை ஒருநாள் நுகரும்.

ஒரு வைத்தியசாலை [illegible] அந்தப் பாராட்டுவிழா நிகழ்ச்சி இடம்பெற்ற உணர்வு எவருக்கும் எழவில்லை. நிகழ்ச்சி முடிந்து வெளியேறும்போது ஒரு சாதனைக் களத்தில் இருந்து புறப்படுகின்ற உணர்வுதான் உண்டானது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு இரண்டாம் இடம் கிடைத்ததோடு நின்றுவிடாமல் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடமாக வெண்கல விருது கிடைத்திருந்தது. இது வேறும் ஏதோ பின்னணியில் இருப்பதைக் கோடி காட்டியது.

யாழ்ப்பாணத்தில் இருந்து போய் வெள்ளியும் வெண்கலமுமாக இரண்டு தர நிர்ணய விருதுகளை இவர்கள் தட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் இது வெறும் பத்திரிகைச் செய்தியாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல. விழா வைத்து, மாலை போட்டு பாராட்டுவிழா கொண்டாடிவிட்டு ஓய்ந்தால் போதாது! இது ஓர் ஆராய்ச்சிக்கு [illegible]

ஆராயப் புகுந்தால் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்தான் அப்போது முதலில் மனக்கண்முன் வந்தார். இரண்டு விருதுகளிலும் அவரது முகம் நிழலாடுவதை நான் கண்டேன்.

''உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து''

என்ற திருக்குறளின் அர்த்தத்தை

**மு.சிவநேசன்**

அவரிடத்தில் நான் கண்டேன்.

தர நிர்ணய விருது பெறுவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் ஆகாது. பல கடினமான படிமுறைகளைத் தாண்டி வந்திருக்க வேண்டும். சரியான வழிகாட்டல்களும் நெறிப்படுத்தல்களும் தேவைப்பட்டிருக்கும். தீர்க்க தரிசனமான தலைமை இருந் திருக்க வேண்டும். நாடளாவிய ரீதியில் போட்டிச் சூழலுக்கு முகம் கொடுத்திருக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கத்தினருக்கான

# சேவை நலன் பாராட்டு விழாவும்

## வெள்ளிவிழா சேவையாளர்களுக்கான

# விருது வழங்கிக் கௌரவித்தல் நிகழ்வும்

**இடம்: கைலாசபதி கலையரங்கம்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**காலம்: இன்று (07.06.2011)**
**செவ்வாய்க்கிழமை, பி.ப. 2.00 மணி**

**தலைவர்:**
*திரு.சி. தங்கராஜா*
தலைவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**பிரதம விருந்தினர்:**
*பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்*
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
*பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர்*
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை -2010
### சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள்

01. செல்வன் உதயராஜ் கார்த்திகன்
02. செல்வி குகதாஸ் கஜனி
03. செல்வி சிவனேஸ்வரன் காயத்திரி
04. செல்வன் ஜெகதீஸ்வரன் வேணுஜன்
05. செல்வன் தயாபரன் நிசான்
06. செல்வி நீதிராசா பிரணவி
07. செல்வன் கபிலன் பிரபன்
08. செல்வி சிவகுமார் லக்சிகா
09. செல்வி சதீசன் ஷகானா
10. செல்வன் கிரிதரா யதுஷிகன்
11. செல்வன் அரியரத்தினம் பவித்திரன்
12. செல்வி விக்னேஸ்வரன் பிரியங்கா
13. செல்வி பிரணவன் காயத்திரி
14. செல்வன் இந்திரகுமார் அரன்

**மலர் ஆக்கம்:**
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

### துணைவேந்தரின் உள்ளத்திலிருந்து...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தம்முடன் பணியாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களையும், 25 வருடங்கள் சேவையாற்றிய ஊழியர்களையும் கௌரவிக்கும் முகமாக நடத்தும் இவ்விழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். பல இடர்களுக்கு மத்தியில் தமது பணியை ஆற்றிய இந்த ஊழியர்கள் பல்கலைக்கழக செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளமை பாராட்டுக்குரியது. அவர்கள் தமது ஓய்வு காலத்தில் மகிழ்ச்சியாகவும், சுகதேகியாகவும் வாழ வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு அவர்கள் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றிய சேவையை பல்கலைக்கழகம் என்றும் நினைவுகூரும் எனத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்,**
**துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### ஊழியர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது இன்று ஓய்வு பெற்ற எங்கள் அங்கத்தவர்களின் கௌரவிப்பு நிகழ்வை வெகுவிமரிசையாக நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றது. அத்துடன் பல்கலைக்கழக சேவையில் வெள்ளிவிழா காணும் எமது ஊழியர்களுக்கான அவர்களது பெறுமதிமிக்க சேவையைப் பாராட்டும் நிகழ்வும் இன்று இடம்பெறுகின்றது. அத்துடன் கடந்த வருடம் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற எமது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான பரிசில் வழங்கலும் கௌரவிப்பும், ஊழியர்களுக்கிடையில் இடம்பெற்ற விளையாட்டு போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த நிதி உதவி வழங்கும் வைபவமும் இன்று இடம் பெறுகின்றன.

மிகவும் உணர்வுபூர்வமான இந்த வேளையில் பல்கலைக் கழகப் பணியினின்று ஓய்வுபெற்றுள்ள எமது ஊழியர்களின் ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும் அமைதியானதாகவும் திகழ பிரார்த்திப்பதோடு வெள்ளிவிழா சேவையாளர்களையும் இன்னும் பல உயர்வுகளைப் பெற்று பல்கலைக்குச் சேவையாற்ற வேண்டுமென்று பாராட்டி, புலமைப்பரிசில் சித்திபெற்ற எமது உறவுகளின் குழந்தைகளும், உதவி பெறும் மாணவர்களும் மேன்மேலும் சிகரங்களை தொடவேண்டும் என்று வேண்டி, பரிசில் பெறும் ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**சி.தங்கராஜா, தலைவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கம்.**

### நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. அகவணக்கம்
3. வரவேற்புரை: க.நாகஜெயகுமாரன் (இணைச்செயலாளர்)
4. தலைமையுரை
5. வாழ்த்துரை: திரு.சி.கலாராஜ் (பத்திராதிபர்)
6. சிறப்பு விருந்தினர் உரை வி.காண்டீபன் (பதிவாளர்)
7. பிரதம விருந்தினர் உரை
8. ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தல்
9. 25 வருட சேவையாளர்களுக்கு பதக்கம் அணிவித்துக் கௌரவித்தல்
10. 2010 தரம் - 5 புலமைப் பரிசில் வெற்றியாளர்களான ஊழியர் பிள்ளைகளை பதக்கம் அணிவித்தும் பணப்பரிசில் வழங்கியும் கௌரவித்தல்
11. பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த நிதியுதவி வைப்புப் புத்தகத்தை வழங்கல்
12. ஊழியர் குழுக்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசு வழங்கல்.
13. நன்றியுரை பொ.தை.ய.யசோதன்(இணைச் செயலாளர்)

## பல்கலைக் கழக சேவையில் ஓய்வுபெற்றோர் (2010/2011)

*கணிதம்*
**திரு.ந.தர்மகுலசிங்கம்**



23.07.1974இல் பராமரிப்புக் கிளையில் அமைய தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். 15.10.1979இல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட இவர் பின்னர் 02.04.1979இல் தாவரவியல், 21.04.1998இல் கணிதம் ஆகிய துறைகளுக்கு மாற்றம் பெற்று, பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 14.02.2010 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*பாதுகாப்பு*
**திரு.சி.கியோமர் மரியநாஸ்**



05.12.1984இல் பாதுகாப்புத் துறையில் பாதுகாப்புச் சேவகராக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 16.02.2010 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*இரசாயனவியல்*
**திரு.ஐ.நவரத்தினராஜா**



07.07.1980இல் பராமரிப்புக் கிளையில் அமையத்தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். 01.01.1981இல் நிரந்தரமாக்கப்பட்ட இவர் 16.01.1987இல் இரசாயனவியல் துறையில் ஆய்வுகூட உதவியாளராக நியமனம் பெற்று, பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 03.05.2010 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*விடுதி*
**அமரர்.யே.சகாயநாயகி**



24.03.1996இல் அமைய சுகாதார சேவைகள் தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். பின்னர் 01.08.1999இல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு ஆனந்த குமாரசாமி விடுதியில் நற்சேவையாற்றி 03.05.2010 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*பாதுகாப்பு*
**திரு.மு.சிவபாலன்**



01.01.1981இல் பாதுகாப்புத் துறையில் பாதுகாப்புச் சேவகராக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 09.09.2010 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*நூலகம்*
**திரு.சு.குணரத்தினம்**



01.07.1982இல் நூலகத்தில் தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 03.02.2011 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*நூலகம்*
**திரு.இ.தெய்வேந்திரம்பிள்ளை**



02.06.1972இல் பரமேஸ்வராக் கல்லூரியில் தொழிலாளியாக நியமனம் பெற்ற இவர் அச்சேவையுடன் பல்கலைக் கழகத்துக்குள் உள்ளீர்க்கப்பட்டார். 19.08.1975வரை பராமரிப்புக் கிளையில் அமைய தொழிலாளியாக கடமையாற்றி 20.08.1975இல் நூலகத்தில் நூலக கவனிப்பாளராக நியமனம் பெற்று, பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 28.03.2011 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*இரசாயனவியல்*
**திரு.அ.அருள்செல்வரட்ணம்**



02.06.1977இல் பராமரிப்புக் கிளையில் தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். பின்னர் 15.12.1978இல் இரசாயனவியல் துறையில் ஆய்வுகூட உதவியாளராக நியமனம் பெற்று, பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 22.03.2010 இல் சுயவிருப்பில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

*பாதுகாப்பு*
**திரு.சி.ரவீந்திரநாதன்**



20.08.1980இல் பாதுகாப்புத் துறையில் பாதுகாப்புப் பரிசோதகராக பல்கலைக்கழக சேவையில் இணைந்து பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 14.04.2010 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வுபெறுகையில் பதில் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றினார்

*பாதுகாப்பு*
**அமரர்.அ.பாலச்சந்திரன்**



20.06.1977இல் மாணவ ஆலோசகர் அலுவலகத்தில் தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். பின்னர் 02.04.1979இல் இரசாயனவியலில் ஆய்வுகூட கவனிப்பாளராகவும், 01.06.1979 இல் பாதுகாப்புத் துறையில் பாதுகாப்பு சேவகராகவும் நியமனம் பெற்று பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 04.07.2010 இல் சேவையிலிருந்தபோதே அமரரானார்

*விவசாயபீடம்*
**அமரர்.ஐ.பாலச்சந்திரன்**



06.04.1998இல் அமைய தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். 01.08.1999இல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு, விவசாயபீடத்தில் நற்சேவையாற்றி 21.07.2010 இல் சேவையிலிருந்தபோதே அமரரானார்.

*சுகாதார நிலையம்*
**அமரர்.மா.இலங்கராஜா**



01.09.1978இல் பராமரிப்புக் கிளையில் அமையத்தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். பின்னர் 01.03.1979இல் நிரந்தர நியமனம் பெற்று சுகாதார நிலையத்திற்கு மாற்றலாகி பின் 04.05.1981இல் சுகாதார கவனிப்பாளராக நியமனம் பெற்று, பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 01.03.2011 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*நூலகம்*
**திரு.கை.சந்திரகுலசிங்கம்**



29.10.1986இல் பராமரிப்புக் கிளையில் அமையத் தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்துகொண்ட இவர் 01.03.1988இல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டார். 04.09.1989இல் நூலகத்தில் நூலக கவனிப்பாளராக நியமனம் பெற்ற இவர், 05.03.2011 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*நூலகம்*
**திரு.க.சண்முகநாதன்**



02.08.1976இல் விளையாட்டு விஞ்ஞான அலகில் தொழிலாளியாக பல்கலைக்கழக சேவையில் இணைந்த இவர் 02.03.1983இல் நூலகத்திற்கு இடமாற்றம் பெற்று பின்னர் 09.11.1993இல் நூலகக் கவனிப்பாளராக பதவி உயர்வு பெற்று பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 03.05.2011 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

*பாதுகாப்பு*
**திரு.க.அருளானந்தம்**



14.08.1977இல் பாதுகாப்புத் துறையில் அமைய பாதுகாப்புச் சேவகராக பல்கலைக்கழக சேவையில் இணைந்தார். 03.03.1976இல் நிரந்தரமாக்கப்பட்ட இவர் பல்கலைக்கழகத்தில் நற்சேவையாற்றி 09.04.2011 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

## பல்கலைக்கழக சேவையில் வெள்ளி விழா காண்போர் (2010/2011)

**நிர்வாகப்பகுதி**
01. மா.இலக்கணகுமார்
02. வி.சந்திரசேகரம்
03. சி.மகாராஜா
04. க.தர்மராஜா
05. கி.சந்திரசேகரம்

**நூலகம்**
06. ம.தங்கநாதன்
07. தி.சிறிதரன்
08. திருமதி வி.வேலுதாசன்

**விஞ்ஞானபீடம்**
09. கு.கனகலிங்கம்
10. க.சிறிபண்டாகரன்
11. ச.ரவிக்குமார்
12. பொ.உதயகுமார்
13. அ.தனீஸ்வரன்
14. இ.செல்வரட்ணம்
15. சி.தங்கராஜா
16. இ.செ.தயாபரன்
17. நெ.சபானந்தர்
18. [illegible]
19. ந.விஜயரட்ணம்

**மருத்துவபீடம்**
20. திருமதி.இ.இந்திரகுமார்
21. வே.ஜெயபாலசுந்தரம்
22. சீ.ஞானசேகரம்
23. சி.குலேஸ்வரராஜன்
24. நா.தவராஜா
25. செ.குணராஜா
26. யோ.சிவஞானச்செல்வன்
27. பொ.தேவபாதம்
28. சி.கலாராஜ்

**சுகாதாரப்பகுதி**
29. செ.செல்வரட்ணம்

**கலைப்பீடம்**
30. சி.உமாகரன்
31. ஐ.ஆனந்தராஜா
32. செல்வி அ.பாலசிங்கம்
33. க.இரகுநாதன்
34. சீ.மகாலிங்கம்
35. து.யோகேஸ்வரன்
36. க.செல்வரட்ணம்

**சித்தமருத்துவம்**
37. சி.ஜெயக்குமார்

**நுண்கலைப்பீடம்**
38. கி.நீதிராஜா

**விவசாய பீடம்**
39. ச.காயரோகணன்
40. க.ஜெயந்திரன்

**பராமரிப்புக்கிளை**
41. மா.விஜயகுமார்
42. கி.நந்தகுமார்
43. த.மோகன்ராஜ்
44. மா.உதயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு என்ன சாபக்கேடா பேருந்துகளிலும் கூட அவஸ்தை

ஏ- 9 வீதியில் பேருந்துகளில் ஏறி பயணம் செய்யும் சனம் நாளாந்தம் படும் பாட்டை வார்த்தைகளால் சொல்ல முடியாது. இந்தப் பேருந்துகளில் இடையில் ஏறி இடையில் இறங்கும் சனம் படும்பாட்டைக் கேட்டால் கொடுமையாக இருக்குதையா. மரியாதையுடன் பயணிகளை ஏற்றும் பேருந்தின் நடத்துநர்கள் பயணிகள் ஏறியதும் தரக்குறைவான வார்த்தைகளால் பேசுவதை காணக்கூடியதாக இருக்கிறது. 'ஏய் பின்னுக்கு போ', 'காது கேட்கவில்லையோ மற்றவர்கள் ஏற வேண்டாமா' என்று பயணிகளை பேருந்தின் உள்ளே நெருக்கி அடுக்கிக்கொண்டு அவர்கள் இறங்கும் இடம் தாண்டிச் சென்று இறக்கி விடுவதும் நாளாந்தம் நடக்கிறது.

ஓர் ஓட்டத்தில் எவ்வளவு பணத்தைச் சேர்க்க முடியுமோ அவ்வளவையும் சேர்த்துவிட வேண்டும் என்ற அவாவில், பயணிகள் என்ன பாடுபட்டாலும் பரவாயில்லை என்ற நோக்குடன் செயற்படுகின்றனர்.

பயணிகளைக் கூடுதலாக ஏற்றுவதற்காக ஆறுதலாக பஸ்ஸைச் செலுத்துவது, நேரம் போய்விட்டால் வேகமாக ஓடுவது என அவர்களின் செயற்பாட்டால் நாளாந்தம் பல விபத்துக்களும் நடைபெறுகின்றன. பயணிகள் பேருந்து மட்டும் ஓடும் வீதி இது தான் என்ற நினைப்பில் அவர்கள் கண் மண் தெரியாமல் ஒடுகிறார்கள்.

கடந்த மே மாதம் 27ஆம் திகதி அன்று காலை 8.15 மணியளவில் கிளிநொச்சி செல்வதற்காக யாழ். பேருந்து தரிப்பிடத்துக்குச் சென்றேன். கண்டிக்குப் போறத்துக்கு ஆயத்தமாக நின்ற பயணிகள் பேருந்தில் ஏறி அமர்ந்து கொண்டேன். அந்தப் பேருந்தின் சாரதியும், நடத்துநரும் சிங்களவர்கள்.

கிளிநொச்சி என்று சொல்லி..., அதற்கு அப்பால் எனக்கும் நடத்துநருக்கும் பேச முடியாமல் உள்ளதால் 'ரிக்கெட்'டை வாங்கிக் கொண்டேன். அந்தப் பேருந்தில் இருந்த முக்காவாசிப் பேருக்கு சிங்களம் தெரியாது. பேருந்தின் சாரதிக்கும் நடத்துநருக்கும் தமிழ் தெரியாது. இவ்வளவு நாளாகத் தமிழ்ச் சனத்தையும் ஏற்றிக் கொண்டு ஓடுறாங்களோ தெரியாது. பஸ் வெளிக்கிடத் தொடங்கியது வலு சிலோவாக நகரத் தொடங்கியது. ஆரம்பத்தில் இப்படித் தான் சனத்தை மேலும் ஏற்றி அடைவதற்காக அக்கம் பக்கம் பார்த்து சனம் வருதோ என்று பார்த்துக் கொண்டு பேருந்து உருண்டு சென்றது.

யாழ்.பேருந்து தரிப்பிடத்தில் இருந்து ஏ-9 வீதியூடாகத் தனது வேகத்தை பையபைய கூட்டிக் கொண்டு சென்றது. பயணிகள் தாங்கள் போகிற இடத்துக்கு எவ்வளவு ரிக்கெட் என்று தெரியாமல் நடத்துநர் கேட்கிற பணத்தைக் கொடுத்து விட்டு பயணிக்கிறார்கள். மாம்பழச் சந்தியில் ஒரு பெண் நிற்பதைப் பார்த்து பேருந்தின் வேகத்தைக் குறைத்து நிற்பாட்டினார் சாரதி. அந்தப் பெண்ணும் பேருந்தில் ஏறி அக்கம் பக்கம் பார்த்தார் சீற் இல்லாததால் நின்று கொண்டிருந்தார் மீண்டும் பேருந்து புறப்பட்டது. அந்தப் பெண் நிற்கும் பக்கம் வந்த நடத்துநர் பணத்தைக் கேட்டார். அந்தப் பெண்ணும் பரந்தன் என்று சொல்லி விட்டு 100 ரூபாவை எடுத்து கொடுத்துவிட்டு மிகுதி காசுக்காக நடத்துநரைப் பார்த்துக் கொண்டு நின்றார். நடத்துநர் 35 ரூபாவை மிகுதியாகக் கொடுத்தார். மிகுதிப் பணம் எவ்வளவு எனப் பார்த்த அந்தப் பெண்மணி சிங்களம் தெரியாததால் 4 விரலைக் காட்டி 40 ரூபா என சைகை காட்டி தெரிவித்தார். அந்த சிங்கள நடத்துநரோ புரிந்து கொண்டு சிங்களத்தில் பரந்தன் என்று நீ சொல்லித் தான் ரிக்கெட் போட்டது இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று கையை விரித்து விட்டார்.

பிறகு என்ன நடத்துநர் சொன்னதை பேருந்தில் சிங்களம் தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்த அந்தப் பெண் பேசாமல் நின்று விட்டுதனது இடம்வர இறங்குவதற்கு ஆயத்தமாக நின்றார். அந்த சிங்கள நடத்துநரோ புன்னகையுடன் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின்பு சாரதி பக்கம் சென்று சிங்களத்தில் ஏதோ காதுக்குள் சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு சாரதியும் சிரிக்க ஆரம்பித்தார். அந்தப் பெண்ணோ இறங்கும் போது 100 ரூபா தான் கொண்டு வந்ததாகவும் திரும்பிப் போவதற்கு தன்னிடம் பணம் இல்லையென்றும் தனக் குள்ளே சொல்லிக் கொண்டு சென்றார். அந்தப் பெண்மணி திரும்பிப் போவதற்கு என்ன பாடுபட்டிருக்கும் என்று தெரியாது. ஆனால், அந்த பெண் ணுக்கு நடந்த நிலமை எமக்கும் வந்தால் என்னவாகும் என்று சிந்திக்கவேண்டும்.




வேறு இடத்து பேருந்து நடத்துநரே இங்கே வந்து பயணிகளிடம் பணம் பறித்துச் செல்லும்போது எமது பகுதி பேருந்து நடத்துநர்கள் சில்லறை இல்லை என்று எவ்வளவு பணத்தை பயணிகளிடம் பறிக்கிறார்கள் தெரியுமோ...?

இதே போலத்தான் இன்னொரு பேருந்தில் பரந்தன் சென்று கொண்டிருந்த ஒரு பெண்மணி ஒரு இலட்சம் ரூபாவை கொண்டு சென்றுள்ளார். அந்தப் பெண்ணும் தனது பணத்தை அடிக்கடி பார்த்து பார்த்து சென்று கொண்டிருந்ததனால் அதனைப் பார்த்த நபர் ஒருவர் பேருந்து தரிப்பிடத்தில் நிற்கும் தருணம் பார்த்து அந்தப் பெண்ணின் பணப் பையை பறித்துக்கொண்டு இறங்கி ஓடிவிட்டார்.

இதனைப் பார்க்காத சாரதி உடனேயே பேருந்தை எடுத்துவிட பேருந்தில் பணத்தைப் பறிகொடுத்த அந்தப் பெண்மணி கூக்குரலிட பேருந்தை அடுத்த பேருந்தின் தரிப்பிடத்தில் நிறுத்தினார். பணத்தைப் பறிகொடுத்த பெண்மணி பேருந்தில் இருந்து இறங்கிப் பார்த்தபோது அந்த நபரைக் காணவில்லை. பேருந்தினுள் நின்றவர்களில் ஒருவர் பேருந்தின் நடத்துநருக்கு தொடர்பு இருக்குமோ என்று பக்கத்தில் நின்றவருடன் கதைத்துக்கொண்டு நின்றார்.

ஏனெனில் அந்தப் பெண்மணி கூக்குரலிட்ட போது பேருந்தை நிறுத்தாமல் ஏன் சாரதி செலுத்திக்கொண்டு இருந்தார் என்று தெரியாமல் சனம் முழுசிக் கொண்டிருந்தது. யாரை யார் கேட்க முடியும் என்று சனம் தங்களுக்குள்ளேயே சொல்லிக் கொண்டிருந்தது. பாவம் அந்தப் பெண்மணி. அன்றுதான் பாங்கில் இருந்து அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு வந்தார். என்ன செலவோ யாருக்குத் தெரியும். பணத்தைப் பறிகொடுத்த அந்தப் பெண்மணி அழுது கொண்டு நின்றதைப் பார்க்கின்ற போது பேருந்தினுள் நின்றவர்கள் எத்தனை பேர் கவலைப்பட்டார்களோ தெரியாது. ஆனால் பேருந்து நடத்துநர்கள் சிறு துளி கூட கவலையில்லாமல் வேலையை ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒரு சில நிமிடத்தில் அந்தப் பெண்மணியை அதே இடத்தில் விட்டு விட்டு பேருந்து புறப்பட்டது. பேருந்தின் நடத்துநர்கள் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்லமுடியும். ஆனால் பேருந்தில் இடம்பெறும் இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு பேருந்தின் நடத்துநர்களே பொறுப்பு என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். பேருந்து நடத்துநர்கள் தாங்களாகவே திருந்தி செயற்பட்டால் அதாவது பொறுப்புடன் செயற்பட்டால் இப்படிப்பட்ட பிரச்சினைகளை இல்லாமல் செய்யமுடியும் என்பது நிச்சயம்.

KPMG



Achieve
Your
True
Potential



## Accounts Trainees

KPMG is a global network of professional firm providing, Tax, and Advisory services. We operate in 146 countries and have 140,000 people working in member firms around the world. The independent member firm of KPMG network is affiliated with KPMG international corporative ("KPMG International"), a Swiss entity.

KPMG Fort, Rhodes, Thornton & Co (One of the oldest firm of Chartered Accountants dating back to 1897). The firm provides the range of services to a clientele of over thousand corporate and organizations.

The ideal Candidate should possess;

- Registered student of Institute of Chartered Accountant of SriLanka.
- Registered student of AAT, CIMA, ACCA and HNDA or Graduates;
- Students with excellent written and spoken English;
- Below 25 years of age as at June 2011.

*Special consideration will be given for high participation in sports and extracurricular activities.*

Those who meet the specified criteria should forward their resume with names and contact details of two non-related referees, quoting the position applied for on both cover letter and envelop before 21th of June 2011

**Manager,**
**KPMG Fort Rhodes Thornton & Co- Yarlpanam**
**.656, Point Pedro Road, Nallur, Jaffna.**
**Email; MMayuran@KPMG.com**
**www.lk.kpmg.com**

## விபத்தில் காயம்

ஏ-9 வீதியில் சிறிய ரக கன்ரர் வாகனமும், பெரிய டிப்பர் வாகனமும் விபத்துக்குள்ளானதில், கன்ரர் வாகன சாரதி படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் பளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வண்ணாங்கேணியில் நேற்று முன்தினம் அதிகாலை 5.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

(எ-121)

## கவிதைப் போட்டிக்கு ஆக்கங்கள்

2011 ஆம் ஆண்டுக்காக நடைபெற்று முடிந்த தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவையொட்டிய போட்டிகளில் இடம் பெறத்தவறிய திறந்த பிரிவுக்கான கவிதைப் போட்டிகளை நடத்துமாறு கலாசார அலுவல் திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்புக்கமைய இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆக்கங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ-7)

## நெஞ்சை விட்டு அகலா 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்
திதி: ஷஷ்டி

மலர்வு 16.02.1977 உதிர்வு 27.05.2001

*அன்புச் செல்வனே!*
*நீ தடம் பதித்த பாதை தோறும் உன் பாதச் சுவடுகளைத் தேடித் தவிக்கின்றோம் நாம். மறுபிறவி ஒன்று உண்டென்றால் மறுபடியும் எம்மிடையே பிறந்துவா நீ!*

*என்றும் உன் நினைவுடன் வாழும்:*

அப்பா, அம்மா, சகோதரிகள், மச்சான்மார், மருமக்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

ஐ.பஞ்சரத்தினம்
*3/3 பத்திரகாளி கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (1705)(28-27-22)

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 233
சீட்டிழுப்புத் திகதி 05.06.2011

வெற்றி இலக்கங்கள்: 02 12 14 32
சுப்பர் இலக்கம்: 07

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 6,768,590/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 110441 | ரூ. 20/= | ரூ. 2,208,820 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 10064 | ரூ. 40/= | ரூ. 402,560 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 8586 | ரூ. 100/= | ரூ. 858,600 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 776 | ரூ. 200/= | ரூ. 155,200 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 185 | ரூ. 1,500/= | ரூ. 277,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 18 | ரூ. 3,000/= | ரூ. 54,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 6,768,590/= | |
| மொத்த எண்ணிக்கை | 130071 | | ரூ. 4,956,680/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 7,104,050/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
Website: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2030 இல் பட்டினிச் சாவுகள் அதிகரிக்கலாம் சர்வதேச நிறுவனமான 'ஒக்ஸ்பாம்' எச்சரிக்கை

லண்டன் ஜூன் 07

'எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள், உலகளவில், முக்கிய உணவுப் பொருள்களின் விலை, இரு மடங்காக உயரும் அபாயமும் அதனால் பட்டினிச் சாவுகள் அதிகரிக்கும் வாய்ப்பும் இருப்பதால் உலக நாடுகளின் தலைவர்கள், விவசாய உற்பத்தியைப் பெருக்க விரைந்து செயல்பட வேண்டும்' என, சர்வதேச நிறுவனம் ஒன்று எச் சரித்துள்ளது.

சர்வதேச நிறுவனமான, 'ஒக்ஸ்பாம்,' வறுமை மற்றும் அநீதிக்கு எதிராகப் போராடி வருகிறது. இந்த நிறுவனம், சமீபத்தில், 'வளரும் வளமான எதிர்காலம்' என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இன்னும் 20 ஆண்டுகளுக்குள், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை, 120 சதவீதம் முதல் 130 சதவீதம் வரை அதிகரிக்கும். பருவநிலை மாற்றத்தால், விளைச்சலில் ஏற்படும் மாற்றங்களே இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கும். இன்றைய நிலையில், உலகளவில் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்கள், தாங்கள் அன் றாடம் பெறும் கூலியில், 80 சதவீதத்தை, உணவுக்காகவே செலவிட வேண்டியுள்ளது.

உற்பத்தி குறைந்து கொண்டே வருவதால், 2050 இல், உணவுப் பற்றாக் குறை, 70 சதவீதமாக அதிகரிக்கும். 1990 இல் இருந்தே, உணவு உற்பத்தி பாதியாகக் குறைந்துவிட்டது. பத்தாண்டுகளுக்கு ஒரு சதவீதமாக, அது குறைந்து கொண்டே வருகிறது. ஒவ்வொருவருக்கும் குறைவில்லாத அளவு உணவு அளிக்கக் கூடிய ஆற்றல் இருந்தும்கூட இன்றைய நிலையில், ஏழு பேரில் ஒருவர் பட்டினியால் அவதிப்படும் அவலம் நிலவுகிறது.

கிழக்கு ஆபிரிக்காவில் மட்டும், 80 லட்சம் மக்கள், உணவுப் பற்றாக்குறையால் அல்லற்படுகின்றனர். உணவுப் பற்றாக்குறையால் ஏற்படும் பிரச்சினைகளால், மிக மோசமான ஒரு கால கட்டம் உருவாகும். அதை நாம் தவிர்க்க வேண்டும் என்றால், பருவ நிலைகளில் பெரும் மாற்றம் ஏற்படுவதைத் தடுக்கவும், விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் உலக நாடுகளின் தலைவர்கள் விரைவான நடவடிக்கைகளை எடுத்தே தீர வேண்டும். இவ்வாறு 'ஆக்ஸ்பாம்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சீனா வந்திருந்த நமீபியா நாட்டின் அதிபர் ஹிபிகிபுனேயா போகொம்போவை (இடது) அந்த நாட்டு அதிபர் ஹுஜின்டாவோ தலைநகர் பீஜிங்கில் உள்ள அதிபர் மாளிகையில் வரவேற்கிறார்.

# நோய் கிருமிகளைப் பரப்ப தீவிரவாதிகள் திட்டம்

இ.கோலி நோய் கிருமிகளை அல்குவைதா போன்ற தீவிரவாதிகள் தாவரங்கள் மூலம் பரப்பி இருக்கலாம் என இங்கிலாந்தின் பாதுகாப்பு ஆலோசகர்கள் சந்தேகப்படுகின்றனர். எனவே விதைகள் உற்பத்தியாளர்கள், காய்கறி மற்றும் உணவுப்பொருள் விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.

இந்த நோய் வெள்ளரிக்காய் போன்ற பச்சைக் காய்கறிகள் மூலம் பரவுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது இது ஐரோப்பிய நாடுகளிலும் பரவும் அபாயம் உள்ளது.

# பாகிஸ்தான் மண்ணில் அமெ.தாக்குதல் மற்றொரு தலிபான் தலைவர் கொலை

பாகிஸ்தானின் தெற்கு வஜீரிஸ்தான் மாகாணத்தில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில் அமீர் அம்சா என்கிற தலிபானின் இன்னொரு தலைவரும் இறந்து விட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் புறப்பட்டுவிடப் போவதால் தீவிரவாதிகளின் முகாம்களை நாசம் செய்யுமாறும் தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டுமாறும் பாகிஸ்தான் அரசிடம் அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அந்த வேளையில் பாகிஸ்தான் முழு மனதுடன் ஈடுபடச் சம்மதம் தெரிவிக்காததால் அமெரிக்காவே பல நேரடித் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அப்படி நடத்திய தாக்குதலில்தான் இலியாஸ் காஷ்மீரியும் வேறு 9 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. அந்த 9 பேரில் ஒருவர் தான் அமீர் அம்சா என்று இப்போது தெரிய வந்திருக்கிறது. தெற்கு வஜீரிஸ்தான் பழங்குடிப் பகுதியில் வானா என்ற சிற்றூருக்கு அருகில் லாமான் என்ற கிராமத் தில்தான் இந்த மோதல் நடந்திருக்கிறது.

வானாவில் குடியிருந்த அமீர் அம்சா, தலிபான் இயக்கத்திலேயே முல்லா நசீர் தலைமையிலான குழுவில் படைத் தளபதியாகச் செயற்பட்டார். இறந்த இலியாஸ் காஷ்மீரி, அமீர் அம்சா ஆகியோரின் சடலங்கள் அந்தப் பகுதியில் இருந்த ஆப்பிள் மரத் தோப்பிலேயே புதைக்கப்பட்டன.

முல்லா நசீருக்கு பாகிஸ்தான் இராணுவத்துடன் நெருங்கிய நட்பு உண்டு. அவரது செல்வாக்கு காரணமாகவே பஞ்சாப்பைச் சேர்ந்த பல தலிபான் தீவிரவாதிகள் அந்தப் பகுதியில் தலைமறைவாக வாழ்ந்து வந்தனர். இப்போது நேட்டோ படைகளின் தாக்குதல் அவர்களுக்கு அச்சுறுத்தலாக வந்திருக்கிறது.

இலியாஸ் காஷ்மீரி, முல்லா ஒமர், அய்மான் அல் ஜவாஹிரி, சிராஜுதீன் ஹக்கானி, அத்தியா அப்துர் ரெஹ்மான் ஆகியோர் அமெரிக்கா தேடும் தலிபான் தீவிரவாதிகள் என்று பட்டியலிடப்பட்டுள்ளது. இந்தத் தீவிரவாதிகள் அனைவரும் சமீபத்தில் தான் கைபர் பகுதியிலிருந்து தெற்கு வஜீரிஸ்தான் பகுதிக்கு வந்துள்ளனர் என்று தெரிகிறது.

## வேலை வாய்ப்பு

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (Technical Officers)-2

கட்டட/ வீதி வேலைகளை மேற்பார்வை செய்யக்கூடிய தராதரமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை. தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் பயிலுனராக விண்ணப்பிக்கலாம்.

2. அலுவலக எழுது வினைஞர் (Office Clerk) - 2
கா.பொ.த உயர்தர சித்தி.
3. வீதி றோலர் இயக்குநர் (Road Roller Operators) - 2
பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.
4. ரிப்பர் றைவர் (Tipper Drivers) -2

உடன் விண்ணப்பிக்கவும்:-

லீடிங் கொன்ஸ்ரக்ஷன்,
# இல.205, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே:-0776751512.

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன், மல்லாகம் வீதியில் ஸ்ரீமுருகன் பாடசாலைக்கு அருகில் 20 பரப்பு தோட்டக்காணி தனிப்பாதையுடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0773867239

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோப்பாய் மத்தியில் 'அழகாவோடை' என்ற பெயருடைய வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
- து.தனபாலசிங்கம்

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் டாக்டர் குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0774030493

## இந்தியாவில் உயர்கல்வி
## STUDY IN INDIA

Anna University (SSM Eng.College)
Bangalore University (Indo Asian Academy)
Periyar University (SSM Arts & Sci.College)

**Available DEGREE / ENGINEERING Courses**

Mechanical Engineering, Electrical, Electronics, Communication Engineering, Computer Science, Information Technology, Textile Technology & Chemistry, Bio Technology, Microbiology, BBA, B.com, Computer Applications, BBM, Bsc

மேற்கூறப்பட்ட பாடநெறிகள் யாவும் Sri Lanka University Grant Commission இனால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இவற்றை பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, UK, USA, ஆகிய நாடுகளில் குடும்ப சகிதம் வதிவுரிமை (PR) பெற வாய்ப்புண்டு.

- IELTS தேவையில்லை
- Bank Sponsor தேவையில்லை
- தகமை : G.C.E A/L - 3 Passes

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் 3 வருட Govt. Diploma (Engineering, Bio, Management) பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

Call : 0777 767818 / 0776 209887

SIC CENTER, 101/35, STANLY ROAD, JAFFNA.

# பிரிட்டன் அமைச்சர் ஹாக் லிபியாவுக்குத் திடீர் பயணம்

பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹாக் போராட்டக்காரர்களின் மையப்பகுதியான பெங்காசிக்கு திடீரென பயணத்தை மேற்கொண்டு அங்கு போராட்டக் குழுத் தலைவர்களை சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார்.

42 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி செய்துவரும் கேணல் கடாபிக்கு எதிராக நடந்துவரும் போராட்டத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதால் நேட்டோப் படைகள் களத்தில் இறங்கி உள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைகள் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக லிபிய இராணுவத்தை எதிர்க்கின்றன. தற்போது நேட்டோப் படைகள் தலைநகர் திரிபோலியில் தாக்குதலைத் தீவிரப்படுத்தி உள்ளன. திரிபோலியில் 6 வெடிகுண்டு தாக்குதல் சத்தம் கேட்டது.

பிரிட்டிஷ் நேரம் மாலை 5 மணி அளவில் திரிபோலியில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன.

லிபியாவில் பிரிட்டனின் அபேச்சே ஹெலிக்கொப்டர்கள் களத்தில் இறங்கிய மறுநாளே இந்தப் பயங்கர வெடிகுண்டுகள் திரிபோலியில் விழுந்தன.

வெள்ளிக்கிழமை இரவு எண்ணெய் நகரமான பரகாவில் நடந்த வான்வழித் தாக்குதலில் 2 குண்டுகள் வெடித்தன. இந்த நிலையிலேயே பிரிட்டன் அமைச்சர் ஹாக் அறிவிக்கப்படாத லிபியப் பயணத்தை மேற்கொண்டு லிபியாவின் கிழக்குப்பகுதியிலுள்ள போராட்டக்காரர்களின் பெங்காசிக்கு வந்தார்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் ஐயன் வேலன்

அன்னை மடியில்
20.01.1927

இறைவன் அடியில்
08.05.2011



கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அமரர் **ஐயன் வேலன்** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை ஐயனார் கோயிலடி தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

7ஆம் வட்டாரம்,
அனலைதீவு தெற்கு.
(49,27)
தகவல்: வே.சந்திரபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்கட்டிகள் மூலம் தண்ணீர்ப் பஞ்சம் தீர்க்க முயற்சி; வரட்சியான பகுதிகளுக்கு மிக விரைவில் விடிவு காலம்

## பிரான்ஸ் நாட்டுப் பொறியியலாளர் திட்டம்

பரிஸ்,ஜூன் 7

ஆர்க்டிக் பிரதேசத்தில் உள்ள மலை போன்ற பனிக் கட்டிகளை, கப்பல் மூலம் கட்டி இழுத்து, தேவையான இடங்களுக்குக் கொண்டு சென்று, தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் திட்டமிட்டுள்ளார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ஜார்ஜஸ் மோகின்(வயது-86). இவர் கடந்த 30 ஆண்டுகளாக, தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு, ஆர்க்டிக் பிரதேசத்தில் உள்ள மலை போன்ற பனிக் கட்டிகளை பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்து வருகிறார். கடந்த 1977இல், சவுதி அரேபியாவின் அப்போதைய இளவரசர் அல்பைசலுடன் இணைந்து, ஐஸ்பெர்க் டிரான்ஸ் போர்ட் இன்டர்நஷனல் என்ற அமைப்பைத் தொடக்கினார். அதன்பின், பனிக்கட்டிகளை இழுத்து வருவது குறித்த ஆய்வில் தீவிரமாக இறங்கினார். எனினும் அக்கால கட்டத்தில், தொழில்நுட்பம் அவ்வளவாக முன்னேறாததால், அவரது குறிக்கோள் நிறைவேறுவதில், பல தடங்கல்கள் எழுந்தன.

தற்போது பிரான்ஸை சேர்ந்த, டசால்ட் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனம், ஜார்ஜசின் குறிக் கோளை முப்பரிமாணப் படங்கள் மூலம் நிறைவேற்றித் தந்துள்ளது. இதில், பனிக்கட்டியின் பயணத்தின் போது ஏற்படக் கூடிய, இயற்கைச் சீற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும், ஆராயப் பட்டுள்ளன.

கனடாவின் நியூ பவுண்ட் லேண்ட் என்ற இடத்தில் உள்ள 70 லட்சம் தொன் எடை கொண்ட பனிக்கட்டியை, ஆபிரிக்காவை ஒட்டியுள்ள ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கேனரி தீவுகளுக்குக் கொண்டு வருவதுதான் ஜார்ஜசின் முதல் திட்டம்.

டசால்ட் சிஸ்டம்ஸ் உருவாக்கியுள்ள முப்பரிமாணப் படங்களின்படி, பனிக் கட்டியைச் சுற்றி, ஒரு 'பெல்ட்' கட்டப்படும். பயண வழியில், பனிக்கட்டி உருகாமல் இருக்க, அதன் மேற்பரப்பு மற்றும் கடலுக்கு அடியில் இருக்கும் பகுதியின் மீது வலை கட்டப்படும்.

இரு இடங்களுக்கிடையிலான 4,726 கி.மீ., தூரத்தை 141 நாள்களில் கப்பல் கடக்கும். வழியில், பனிக்கட்டியில் 38 சதவீதம் மட்டும் உருகியிருக் கும். கடல் காற்றின் போக்கிலேயே, பனிக்கட்டியை கப்பல் இழுத்துச் செல்லும். செல்லும் வழியில், நீர்ச்சுழிகள், கடல் புயல் போன்றவை நேரிட்டால், அவற்றைச் சமாளிக்கக் கூடிய முன்னேற்பாடுகளும் இந்த முப்பரிமாணப் படங்களில் காட்டப்பட்டுள்ளன. அத்தோடு குறைந்த எரிபொருள் செலவில், குறைந்த முயற்சியில் அதிகளவு பலனை அடைவதற்கும் இப்படங்கள் வழி காட்டுகின்றன. விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்கள், பனிக்கட்டியைச் சுற்றி விடப் பட்டுள்ள மிதவைகள், பலூன்கள் இவை மூலம், பனிக்கட்டியின் பயணம் கண்காணிக்கப் படும்.

அத்தோடு, வானிலை, கடலின் உப்புத் தன்மை, காற்று இவையும் கணிக்கப்பட்டு, அதற்கேற்ப பயணம் மாற்றியமைக்கப்படும். அளவில் சிறிய பனிக்கட்டி ஒன்றை இழுத்துக் கொண்டுவர, 13 கோடி ரூபாயில் இருந்து 20 கோடி ரூபாய்வரை தேவைப்படுவதால், அதைத் திரட்டும் பணியில் ஜார்ஜஸ் தற்போது ஈடுபட்டுள்ளார்.

# சிலியில் எரிமலை வெடிப்பு

தெற்கு சிலியில் உள்ள புயேயுயே எரிமலையில் தொடர்ந்து வெடிப்பு ஏற்பட்டது. இந்த வெடிப்பைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டார்கள்.

புயே யுயெ பகுதி எரிமலையில் இருந்து பெருமளவு புகை மண்டலம் ஏற்பட்டது. சிலி தலைநகர் சாண்டியகோவிற்கு 800 கிலோ மீற்றர் தொலைவில் இந்த எரிமலைச் சீற்றம் காணப்பட்டது.

அந்தப்பகுதியில் அதிகபட்ச எச்சரிக்கை விடுக்கப் பட்டது. 3500 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டது. அவர்கள் தற்காலிக புகலிடங்களில் தங்க வைக்கப்பட்டார்கள்.

இந்தப் பயங்கர எரிமலை வெடிப்புத் தொடர்பாக இதுவரை காயம் அடைந்தவர்கள் பற்றிய தகவல் வரவில்லை.

## வெற்றியின் அறிகுறி....




பெருநாட்டின் அதிபர் தேர்தல் நடந்தது. இதில் அதிபர் வேட்பாளராகப் போட்டியிடும் கொய்கா பியூஜீ மோரி லிம்பா நகரில் உள்ள வாக்குச் சாவடியில் வாக்களித்தபடி வெற்றி உறுதி என்பதை செய்தியாளர்களிடம் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தார்.

# ஒபாமாவின் கடவுச்சீட்டை புகைப்படம் எடுத்த அதிகாரி பதவி நீக்கம்

பரிஸ், ஜூன் 07

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கடவுச் சீட்டை புகைப்படம் எடுத்த பிரான்ஸ் பிராந்திய சுங்க திணைக்கள தலைவரை பிரான்ஸ் அரச நிர்வாகம் பதவி நீக்கம் செய்தது.

கடந்த மே மாதம் 26 ஆம் திகதி டெயுவிலே செய்ன்ட் விமான நிலையத்தில் அவரது கடவுச் சீட்டை பார்வையிட்ட போது அதனைப் படம் பிடித்தார்.

பிரான்ஸ் அதிகாரி மேற்கொண்ட இந்த நடவடிக்கை அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை அதிர்ச்சி அடைய வைத்தது. அமெரிக்க உளவுத்துறையினர் கடுமையான அதிருப்தி அடைந்தனர். இது குறித்து பிரான்ஸ் நிர்வாகத்திடமும் புகார் செய்தார்கள்.

பிரான்ஸில் உள்ள வாசஸ்தலமான டெயுவிலே பகுதியில் வளர்ந்த 8 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரிட்டனில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த மாதம் பிரான்ஸ் வந்தார்.

அப்போது அவரது கடவுச் சீட்டு சுங்க திணைக்கள அதிகாரியின் பரிசீலனைக்கு வந்தது. அந்தக் கடவுச்சீட்டை பார்வையிட்ட பிரான்ஸ் பிராந்தியத் தலைவர் ஒபாமாவின் கடவுச் சீட்டுடன் புகைப்படம் எடுத்தார்

பராக் ஒபாமாவின் கடவுச் சீட்டு அனைத்து தரப்பினரும் பார்வையிடும் வகையில் வருவது பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என அமெரிக்க உளவுத் துறையினர் கடுமையாகக் கண்டித்தனர்.

இதனையடுத்து, ஒபாமா கடவுச் சீட்டை வெளியில் தெரியும் படி புகைப்படம் எடுத்த பிராந்திய தலைவர் மீது ஒழுங் காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

# ஜனாதிபதி சலே சவுதி அரேபியா பயணம்; மகிழ்ச்சியில் ஏமன் மக்கள்

ஏமன் அதிபர் அலி அப்துல்லா சலே மருத்துவ சிகிச்சைக்காக சனிக்கிழமை சவுதி அரேபியா சென்றார்.

அவர் நாட்டைவிட்டு வெளியேறி விட்டதாக வந்த தகவல்களை அடுத்து மக்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் மூழ்கினர்.

சலேவுக்குப் பின் யார் அதிபராக வருவது என்ற அதிகாரப் போட்டி தொடங்கும் பட்சத்தில் ஏமன் மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படலாம் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

ஏமனில் அதிபர் அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி கடந்த பெப்ரவரி மாதம் முதல் மக்கள் போராடி வருகின்றனர். பதவி விலகுவதாக அறிவித்து மூன்று முறை அவர் பின்வாங்கியதை அடுத்து அங்கு அவரது ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

தென்பகுதியில் உள்ள ஜின்ஜிபார் நகரை அல்குவைதாவின் ஆதரவாளர்களான ஆயுதம் ஏந்திய 300 படையினர் கைப் பற்றினர். இதைத் தொடர்ந்து அதிபரின் ராணுவம் எதிர்ப்பாளர்கள் மீது பீரங்கி, துப்பாக்கி மற்றும் போர் விமானங்கள் மூலம் தாக்குதலை நடத்தியது.

கடந்த 10ஆம் திகதி அதிபர் மாளிகையின் வளாகத்தில் உள்ள அல் நஹ்டியான் மசூதியில் அதிபர், பிரதமர், துணைப் பிரதமர், நாடாளுமன்ற இரு சபாநாயகர்கள், அதிபரின் மகன்கள் மற்றும் உயரதிகாரிகள் பலரும் கூடி தொழுகையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மசூதியின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப் பட்டது. இதில் அதிபர், பிரதமர், துணைப் பிரதமர், நாடாளுமன்ற சபாநாயகர்கள், அதிபரின் மகன்கள் ஆகியோர் காயமடைந்தனர். அதிபரின் இதயத்துக்குக் கீழே ஏவுகணையின் சிதறல்கள் கடும் வேகத்தில் துளைத்து விட்டன.

அவரது கழுத்து, முகம் மற்றும் தலைகளிலும் காயங்கள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து பிரதமர், துணைப் பிரதமர், சபாநாயகர்கள் இருவர், மேலும் ஒரு நபர் என ஐந்து பேர் உடனடியாக சவுதி அரேபிய தலைநகர் ரியாத்துக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களுடன் அதிபர் சலேயும் அவரது மனைவி உள்ளிட்ட 35 குடும்ப உறுப்பினர்களும் சிகிச்சைக்காக ரியாத்துக்குச் சென்றார். ரியாத்தின் காலித் அரசர் விமான நிலையத்தில் அவர் வந்திறங்கிய தகவலை சவுதி அதிகாரிகள் உறுதிப்படுத்திய பின் ஏமனில் பல்வேறு இடங்களில் அதிபரின் வெளியேற்றத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

# ஓவியக் கண்காட்சியை அலங்கரிக்கும் 4 வயதுச் சிறுமி



நியூயோர்க், ஜூன் 07

நான்கு வயதுச் சிறுமி அலிடா ஆண்ட்ரே வரைந்த கண்ணைக் கவரும் ஓவியங்கள் நியூயோர்க் கண்காட்சியை முதன் முறையாக அலங்கரிக்கத் தொடங்கி உள்ளன.

மன்ஹட்டனில் உள்ள அகோரா கேலரியில் சிறுமி அலிடாவின் 9 ஓவியங்கள் இடம்பெற்று உள்ளன. இந்தக் கண்காட்சியில் இதுவரை இடம்பெற்ற மிக இளவயது ஓவியக் கலைஞராக அலிடா உள்ளார்.

அவரது ஓவியங்கள் அனைத்தும் தலா 6 ஆயிரம் டொலர் மதிப்பில் விற்பனை ஆகியுள்ளன. இந்தக் கண்காட்சி ஓவிய விற்பனை மூலம் அலிடாவுக்கு 9 ஆயிரத்து 900 டொலர் கிடைத்துள்ளன எனத் தெரிய வருகின்றது.

கேலரியின் இயக்குநர் ஏங்கலா டி பெலோ கூறுகையில், ''நான்கு வயது சிறுமி ஓவியரான அலிடா தனக்கேயான பிரத்தியேக பாணியில் ஓவியம் வரைவதில் கை தேர்ந்து விட்டார்'' எனப் புகழாரம் சூட்டினார்.

இந்தச் சிறுமியின் பெற்றோர் நிக்கா கலாஷ்னிகோவா மற்றும் மைக்கேல் ஆண்ட்ரேவும் சிறந்த ஓவியக் கலைஞர்கள் ஆவார்கள். தங்கள் மகளின் ஓவியம் வரையும் திறமையைப் பற்றி குறிப்பிடுகையில் தீங்கு இல்லாத வெகுளித்தனம் ஓவியத்தினூடாக வெளிப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வல்லரசு எனப் பீற்றிக் கொள்கிறது அதில் உண்மையில்லை என்கிறார் அருந்ததி

உலகில் வளர்ந்துவரும் வல்லரசாகவும், வணிகத்தில் உலகத்தில் 4ஆம் இடத்தில் இருப்பதாகவும் இந்தியா பொய்யான தகவலையே கூறிவருவதாக பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய் கடுமையாகச் சாடியுள்ளார். பல நாடுகளுக்கு மன்மோகன் சிங் சென்று இந்தியா வல்லரசு ஆகிவிட்டதாகச் சொல்லிவர, சமூகத்தில் பெரிதும் மதிக்கப்படும் அருந்ததி ராய் அதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த அது இந்திய அரசுக்கு பெரும் சிக்கலைக் கொடுத்துள்ளது. இதனால் இந்திய அரசு அவர்மேல் கடுமையாகக் கோபமடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பி.பி.சி செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நேர்காணலின்போது அவர் மேலும் கூறியதாவது:

தனது நாட்டுக்குள்ளேயே தனது மக்களைக் கொன்று குவிக்கும் ஒரு நாடு இந்தியா தான். இந்திய அரசு தனது கட்டுப்பரட்டில் உள்ள பல கிராமங்களுக்கும், மலையடிவாரங்களுக்கும் தனது சொந்தப் படைகளை அனுப்ப முடியாத நிலை காணப்படுகிறது. வணிகம் மற்றும் தொழில் முதலீடுகளுக்காக காட்டையும், அங்கே குடியிருக்கும் ஆதிவாசிகளையும் அது அழித்துவருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தனது சொந்த நாட்டில் உள்ள பழங்குடி மக்களை அழித்து அவர்களின் நிலங்களைக் கொள்ளையடிக்கிறது இந்திய அரசு. பல மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டுக்குள் வாழ்வதாகவும், கிராமங்களைச் சென்று பார்வையிட்டாலே அது தெரியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா வளர்ச்சியடைந்துள்ளதா எனக் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்:



இந்தியா வளர்ச்சியடைந்ததாகக் கூறுவது ஒரு பொய் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது லண்டனுக்கு இவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இவர் இந்தியா குறித்து தெரி வித்துவரும் கருத்துகள் மேற்குலக நாடுகளால் கருத்தில் கொள்ளப்படுவதோடு, இந்தியாவும் இதனை உற்றுக் கவனித்த வண்ணமே உள்ளது என்பதும் குறிப் பிடத்தக்கது.

இந்தியாவில் உள்ள ஆதிவாசிகளையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் பாதுகாப்பது மட்டுமல்லாது, இயற்கையையும் பாதுகாக்கவேண்டும் என்று அருந்ததி ராய் பாடுபடுவது மேற்குலகை வெகுவாகக் கவர்ந்துள்ளது. (வ)

# மும்பைத் தாக்குதல் பின்னணியில் தொடர்புடைய காஷ்மீரியின் கொலை

## உறுதி செய்யப்படாத தகவல்

மும்பையில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டதன் பின்னணியில் முக்கிய மானவராகக் கருதப்படும் இலியாஸ் காஷ்மீரி பாகிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டாரா என்பது குறித்து உறுதியான தகவல் கிடைக்கவில்லை என இந்தியா தெரிவித் துள்ளது.

மும்பைத் தாக்குதல் சதிகாரரும், இந்திய அரசால் நீண்ட காலம் தேடப்பட்டு வருபவருமான காஷ்மீரி அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக வெளியான செய்திகளை உறுதிப்படுத்திக் கொள்ள மத்திய அரசு பல்வேறு நட்பு நாடுகளைத் தொடர்பு கொண்டு கேட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்வேறு வட்டாரங்களில் இருந்து அந்தச் செய்திகளை உறுதிப்படுத்த இந்திய அமைப்புகள் முயற்சித்து வருகின்றன. ஓரிரு தினங்களில் காஷ்மீரி குறித்து உறுதியான தகவல் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.



முன்னாள் பாகிஸ்தான் ராணுவ அதிகாரியான காஷ்மீரியின் தலைக்கு அமெரிக்க அரசு 5 மில்லியன் டொலர் நிர்ணயம் செய்திருந்தது. அவர் தெற்கு வாஜிரிஸ்தானில் உள்ள ஒரு வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியின.

அவரது ஹர்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி அமைப்பு அவரது மரணத்தை உறுதிசெய்து இஸ்லாமாபாதில் தொலைக்காட்சி அலுவலகங்களுக்கு பேஸ்புக் மூலம் செய்தி அனுப்பியமை குறிப்பிடத்தக்கது. (வ)

# ராம்தேவ் கைதுக்கு அமெரிக்காவில் கற்கும் இந்திய மாணவர்கள் கண்டனம்

ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதம் மேற்கொண்ட யோகா குரு பாபா ராம்தேவுக்கு எதிரான பொலிஸாரின் நடவடிக்கைக்கு அமெரிக்காவில் கல்வி கற்கும் இந்திய மாணவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தார்மீக உரிமையையும், மக்களின் நம்பிக்கையையும் அரசு இழந்துவிட்டது எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக இந்திய தூதரகத்தில் அளித்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாணவர்கள் மற்றும் இந்தியாவின் பொறுப்புள்ள குடிமகன்களான நாம் இந்திய அரசின் இந்தச் செயலை கண்டிக்கிறோம். மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தின் இந்திய மாண வர்கள் குழு, டேஸி கல்லூரி; பார்க் மற்றும் இந்திய மாணவர்கள் சபை ஆகிய 3 வெவ்வேறு அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்த மனுவில் கையெழுத்திட் டுள்ளனர். ஊழலைக் கட்டுப்படுத்த தவறி விட்டதன்மூலம், குடிமக்களுக்கு அரசியல் சாசன உரிமைகளை மறுப்பதன்மூலம் தார்மீக உரிமையையும், மக்களின் நம்பிக்கையையும் அரசு இழந்துவிட்டதாக நாம் நம்புகிறோம். உடனடியாக இந்த அரசு பதவி விலக வேண்டும் என்று அந்த மனுவில் மாணவர் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அமைதியான முறையில் போராட்டம்கூட மக்களால் நடத்த முடியவில்லை எனில் ஜனநாயகத்தில் அவர்கள் வேறு என்ன தான் செய்ய முடியும் என மேரிலேண்ட் பல்கலைக்கழக கலாநிதி மாணவர் ஆசுதோஷ் குப்தா கேள்வி எழுப்பினார். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துபவர்களுக்கு எதிராக இந்திய அரசு நடவடிக்கை எடுக் கும் விதம் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் குறிப்பிட்டார்.


## ஒரு வருட நினைவில்



### அமரர் இராசரெத்தினம் கமலசூரியன்

திதி: பூர்வபட்ஷ ஷஷ்டி

அவனியில்
22.02.1983

அவனடியில்
19.05.2010

ஓடிப் போனதடா ஒரு வருடம்
உன்னை மறந்ததேயில்லை ஒரு நிமிடம்
ஆறாது தவிக்குது எங்கள் உள்ளம்
அழுது வெறுமானது எங்கள் இல்லம்
அன்பு தவழும் உந்தன் முகம்- அதை
நினைக்கையில் துடிக்குது எங்கள் மனம்
எங்கெங்கோ இருந்தாலும் தினம் தினம்
விழிகள் நீர் சொரியுது குளம் குளம்
உன்நினைவைச் சுமையாக்கி விட்டு நீ பறந்து
தங்கிவிட்டாய் விண்ணகத்தில் எம்மைமறந்து
வந்தகடன் முடித்து வானுறையச் சென்ற உன்னை
என்றென்றும் நினைத்திருக்கும்....

உன் இனிய...
அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், அக்கா அத்தான்,
மருமக்கள், பேரமக்கள்.

கெனடிலேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
T.P.No: 0212220927, 0777042679.
(49)


## சமச்சீர் கல்வியை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

சமச்சீர்கல்வியை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் சார்பில் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பொதுமக்கள் உட்பட அதிகமானோர் கலந்து கொண்டனர்.

மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் தலைவர் நல்லகாமன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நீதிபதி கோவிந்தராஜன் குழு நிர்ணயித்த கல்விகட்டணத்தை வசூலிப்புச் செய்யுமாறு கோரிக்கை வைக்கப்பட்டது. நீதிமன்றம் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் 48 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற் பட்டுள்ளது.


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி




### அமரர் ஆறுமுகம் கனகம்மா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி:சஷ்டி

எம்மை அன்போடு பெற்றெடுத்து பாசத்தோடு வளர்த்து
உயர் நிலைக்கு ஆளாக்கி வைத்து உள்ளத்தில்
உயர்வாகி இதயத்தில் இறையாகி வானுறையும் தெய்வத்துள்
தெய்வமாகிய எமது அன்னையே எங்களை விட்டு பிரிந்து
ஆண்டுகள் ஏழு சென்றிடினும் புன்னகை சிந்தும் உங்கள்
திருமுகம் எம்மை விட்டு மறையாதம்மா.

'ஜெயந்தி' தாமோதரம் வீதி,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது நலத் திட்டங்களை நிறுத்துவதன் மூலம் திராவிடர் இயக்கத்தை அழிக்க முடியாது - கருணாநிதி



தி.மு.க அரசு கொண்டு வந்த திட்டங்களை கைவிடுவதன் மூலமும் சூழ்ச்சிகளாலும் திராவிடர் இயக்கத்தை அழித்து விட முடியாது. அதுமட்டுமல்ல வீழ்த்தவும் முடியாது. இவ்வாறு கூறினார் தி.மு.க.தலைவர் கருணாநிதி.

திருவாரூரில் நடந்த தேர்தல் நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பேசிய அவர் தேர்தலில் தோற்றது தி.மு.க.வோ, திராவிட இயக்கமோ அல்லது அதன் கொள்கைகளோ அல்ல. தேர்தல் தோல்வி தி.மு.க. அதன் கொள்கைகளை வலுவூட்ட மக்கள் அளித்த வாய்ப்பாகக் கருத வேண்டும்.

திருவாரூரில் எனக்கு அளித்த வாக்கு வித்தியாசங்கள் இந்த இயக்கத்தில் யாரும் பெறவில்லை. நீங்கள் விரும்பியபடி நான் முதல்வராக ஆகவில்லை என்றாலும் சட்டசபை உறுப்பினராக இருந்து நேரிலோ அல்லது கழகப் பிரதிநிதிகள் மூலமாகவோ தொகுதியின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பேன்.

புதிய ஆட்சியில் ஆளுநரின் உரை கூட அவசரப்பட்டுத் தயாரித்ததில் பல அச்சுப் பிழைகள் உள்ளன. அதில் பெருந்தலைவர் பேரறிஞர் என்பதற்குப் பதிலாக பெருந்தலைவர் பேராரறிஞர் என்று உள்ளது.

மேலும் இந்த புதிய அரசும் ஏழைகளின் நிலையை முன்னிலைப்படுத்தி செயற்படும் என்று கூறி இருப்பது ஏற்கனவே இருந்த அரசும் ஏழைகளின் நலனை முன்னிலைப்படுத்தி செயற்பட்டுள்ளது என்பது எமக்குக் கிடைத்த பாராட்டாகும். ஆளுநர் பர்னாலா எமது நண்பர் என்பதால் அவரது உரையில் உள்ள பிழைகளை மிகைப்படுத்த விரும்பவில்லை.

தி.மு.க.வையும், அதன் கொள்கைகளையும் காப்பதற்கு என்ன காரியம் செய்ய வேண்டுமோ அதை செய்து விட்டு தான் என்னை மாய்த்துக்கொள்வேன். கடந்த தி.மு.க ஆட்சியில் நடைபெற்ற குற்றங்களை பெரிய அளவில் ஏடுகள் எழுதின.

ஆனால் ஜெயலலிதா தலைமையிலான புதிய அரசு அமைந்த பின்பு இதுவரையில் பல குற்றங்கள் நடை பெற்றுள்ளன. அதையும் இதே ஏடுகள் தான் எழுதியுள்ளன. தி.மு.க ஆட்சியில் குற்றங்கள் நடைபெறவில்லை என்று கூறவில்லை.

அதைத் தடுப்பதற்குத் தான் பொலிஸ்துறை உள்ளதே. கடந்த ஆட்சியில் மிரட்டப்பட்டு பொது மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்பதை வரவேற்கிறேன். அதில் சிறுதாவூர் நிலமும் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஈழம்தான் தீர்வு

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தமிழ் ஈழம் அமைப்பது தான் ஒரே தீர்வு என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திருமாவளவன் தலைமையில், அந்தக்கட்சியின் சிறப்பு செயற்குழுக் கூட்டம், சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அப்போது, ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க ஐ.நா. சபை உட்பட அனைத்துலக சமூகம் முன்வர வேண்டும் என்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிறைவேற்றிய தீர்மானங்களில் கூறப்பட்டுள்ளது. இதேவேளை தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள இலவச அரிசி திட்டத்துக்குக்கும் வரவேற்புத் தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றியுள்ளது.

# தி.மு.க.வின் படுதோல்வி தேசிய முக்கியத்துவம்மிக்கது



## அத்வானி கருத்து

தமிழகத்தில் தி.மு.க.வின் தேர்தல் தோல்வி தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றுவிட்டதாக பா.ஜ. க மூத்த தலைவர் எல்.கே.அத்வானி தெரிவித்தார்.

ஊழலை மக்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தேன். ஊழலை மக்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்பது அவரது வெற்றியின் மூலம் தெரியவந்துள்ளது என அத்வானி கூறினார். இந்தத் தேர்தலில் மத்திய அரசு ஊழல் பிரச்சினைகளுக்கு எல்லாம் கூட்டணிக் கட்சியான தி.மு.க. மீது மட்டும் பழி சுமத்தி வந்தது. ஆனால் தேர்தல் தோல்விக்கு பின்னர் நிலைமை மாறி விட்டது.

தி.மு.க. வெற்றி பெற்று இருந் தால் ஊழல் ஒரு பிரச்சினை அல்ல என்ற நிலை ஏற்பட்டு இருக்கும். ஆனால் ஜெயலலிதா வெற்றி பெற்றதன் மூலம் மக்கள் ஊழலுக்கு எதிராக உள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என அத்வானி தெரிவித்தார்.



காயிதே மில்லத்தின், 116 ஆவது பிறந்த தினத்தையொட்டி, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள அவரது நினைவிடத்தில், முதல்வர் ஜெயலலிதா, மலர் போர்வை போர்த்தி மரியாதை செலுத்தினார்.

# விலைவாசி உயர்வைக் கண்டித்து ஒக.9 இல் முற்றுகைப் போராட்டம்

டில்லி,ஜூன் 7

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி ஒகஸ்ட் 9 ஆம் திகதி நாடு தழுவிய முற்றுகைப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக விவசாய தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தேசிய பொதுக் குழுக் கூட்டம் கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் டில்லியில் நடைபெற்றது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் தேசிய வேலை உறுதியளிக்கும் திட்டத்தில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு ஓய்வூதியம், வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஒகஸ்ட் 9 ஆம் திகதி நாடுமுழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும்.

# பதவியில் தொடரும் தார்மீக உரிமையை பிரதமர் இழந்துவிட்டார் - பா.ஜ.க.

டில்லி,ஜூன்7

பாபா ராம்தேவ் நள்ளிரவில் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பாரதிய ஜனதாக் கட்சி, மன்மோகன் சிங் பிரதமர் பதவியில் தொடருவதற்கான தார்மீக உரிமையை அனைத்து வகையிலும் இழந்துவிட்டார் என்று குற்றம் சாட்டியுள்ளது.

2ஜி ஊழல் விவகாரம் தொடங்கி, கொமன் வெல்த் போட்டி ஊழல், ஆதர்ஷ் ஊழல் என எல்லா ஊழல் விவகாரங்களிலும் அமைதியையே பதிலாகத் தந்திருக்கிறார் பிரதமர். நாட்டு மக்களிடம் மிகப்பெரும் கோபத்தையும் எதிர்ப்பு உணர்வையும் இந்த ஊழல் விவகாரங்கள் இடி என முழங்கி வரும்போது, பிரதமர் அமைதி காட்டுவது வேடிக்கை என பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறினார்.

நாம் மன்மோகன் சிங்குக்கும், சோனியாவுக்கும் சொல்லிக் கொள்ள விரும்புவது என்ன என்றால், நெருக்கடிநிலைக் காலத்தில் இந்திரா காந்தியாலும் கூட ஜனநாயக நெறிமுறைகளை அழிக்க நினைத்து வெற்றி காண முடியவில்லை என்பதைத்தான்! என்றார் ரவிசங்கர் பிரசாத்.

# திரை நட்சத்திரங்கள் முதல்வருடன் சந்திப்பு



தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நடிகர்கள் கமல், பிரபு, விஜய் உள்ளிட்டோர் நேரில் சந்தித்துப் பேசியுள்ளதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர்கள் கமல், பிரபு, விஜய், துஷ்யந்த், வி.எஸ்.ராகவன், இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர், நடிகைகள் கௌதமி, சுகுமாரி, சச்சு, ராஜஸ்ரீ, காஞ்சனா, பின்னணி பாடகி எல்.ஆர். ஈஸ்வரி உட்பட திரையுலகைச் சேர்ந்த அதிகமானோர் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்தனர்.

மூன்றாவது முறை முதல்வராகப் பதவி ஏற்றதற்கும், பல நலத் திட்டங்களை அறிவித்து செயற்படுத்தி வரு வதற்கும் அவர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். திரையுலகினர் நேரில் வந்து சந்தித்துப் பாராட்டியதற்கு முதல்வர் நன்றி தெரிவித்தார்.

# புதிய பணக்காரர்கள் பட்டியலில் இந்தியாவுக்கு நான்காவது இடம்

அதிகளவான சொத்துச் சேர்த்து புதிய பணக்காரர்கள் உருவாகும் உலக நாடுகள் வரிசையில் இந்தியா 4 ஆவது இடம் வகிப்பதாக சர்வதேச ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச ஆலோசனை நிறுவன மான பாஸ்டன் கன்சல்டிங் குரூப், கடந்த ஆண்டில் அதிக பணக்காரர்கள் உருவான அடிப்படையில் நடத்திய ஆய்வில் முன்னிலை வகிக்கும் நாடு கள் பட்டியலை 'குளோபல் வெல்த் ரிப் போட்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

அதில் இடம்பெற்ற தகவல்கள் வருமாறு:

உலகின் எல்லா பகுதிகளிலும் கடந்த ஆண்டில் ஏற்பட்ட சீரான பொருளாதார வளர்ச்சியால் சர்வதேச நாடுகளில் வசதி படைத்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது.

உலகம் முழுவதிலும் உள்ள சொத்து வளர்ச்சி கடந்த ஆண்டில் ரூ. 405 லட்சம் கோடியாக உயர்வடைந்து மொத்தமாக ரூ. 5,481 லட்சம் கோடியானது. 2015 ஆம் ஆண்டு வரை இந்த வளர்ச்சி ஆண்டுக்கு 5.9 சதவீதம் சொத்து வளர்ச்சி அதிகரித்துச் செல்லும். வசதி படைத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க பங்குச் சந்தை வர்த்தகம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி உயர்வு ஆகியவை முக்கிய காரணமாக உள்ளன.

குறிப்பாக இந்தியா, சீனா போன்ற விரைவாக வளரும் நாடுகளில் பணக்காரர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் வசதி படைத்தவர்கள் எண்ணிக்கை சராசரியாக ஆண்டுக்கு 18 சதவீதம் அதிகரிக்கக்கூடும். உலகின் வசதி படைத்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் ஆசியாவின் பங்கும் 18 சதவீதமாக உள்ளது.

இந்த சதவீதம் 2015 இல் 25 சதவீதமாக உயரக்கூடும். புதிய பணக்காரர் களை உருவாக்குவதில் உலக அளவில் அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து ஆகியவை முதல் 3 இடங்களில் உள்ளன. அந்த வகையில் இதில் இந்தியாவுக்கு 4ஆம் இடம் கிடைத்துள்ளது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
7 ஜூன் 2011 செவ்வாய்க்கிழமை

# மனித உரிமை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பொலிஸாராலும் அதிகாரிகளாலும் உதாசீனம்

## வகைதொகையின்றி மக்களை முகாம்களில் அடைத்துவைக்கும் சட்டமும் கூட தெளிவில்லை

**★ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காவல்துறையினரால் மட்டுமன்றி வேறு அதிகாரிகளாலும் உதாசீனம் செய்யப்படுகின்றன.**

**★ ஏனைய நாடுகளில் இந்த நிலைமை இல்லை.**

**★ 2007 ஆம் ஆண்டு சர்வதேச ஒருங்கிணைப்பு குழுவினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 'ஏ' நிலையில் இருந்து 'பி' நிலைக்கு தரம் குறைக்கப்பட்டது.**

**★ இலங்கையின் ஆள்கொணர்வு மனு தொடர்பான சட்ட நடைமுறையில் குறைபாடுகள் உள்ளன.**

**★ விசாரணை இன்றி பெரும் எண்ணிக்கையான இடம்பெயர்ந்தோரை புறத்தொடர்பு இல்லாமல் முகாம்களில் அடைத்து வைப்பதற்கான சட்ட அடிப்படை தெளிவற்றதாகவே உள்ளது.**

**ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் இந்த விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.**

*(நேற்றைய தொடர்ச்சி)*

குழுவும் அப்படியான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் காணவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிரான பொதுமக்கள் இழப்பீடுகள் தொடர்பாக, 'குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களினால் பாதிக்கப்பட்ட எவரும் குற்றஞ்சாட்டப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மீறல்களுக்கான இழப்பீட்டைக் கோரவில்லை' என அரசின் எழுத்து மூலமான பதில்கள் கூறுகின்றன.

### (இ) ஆள்கொணர்வு மனு மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பரிகாரத்தைப் பெறல்

377. தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் தடுத்து வைப்பதற்கான சட்ட அனுமதியையும் மற்றும் விடுதலைக்கான நிலைமைகளைப் பெற்றுக்கொள்ளவும், நீதியின் போதிய அடிப்படை இல்லை என்பதை உறுதிப்படுத்தவும் கொள்கையளவில் வழக்கமான வழியாக ஆள்கொணர்வு மனுவின் ஆதிக்கம் உள்ள போதிலும், தடுத்து வைத்தல் தொடர்பாக அதன் மூலம் நடவடிக்கை எடுப்பது மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இலங்கையில், 'சட்டத்துக்கு விரோதமாக அல்லாது ஒழுங்கற்ற முறையில் பகிரங்கமாகவோ இரகசியமாகவோ தடுத்து வைக்கப்பட்டுள்ள' எந்தவொரு நபரையும் பௌதீக உடலுடன் நீதிமன்றத்தின்முன் ஆஜர்படுத்தவும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஆள்கொணர்வுமனு மீதான ஆதிக்கத்தை அரசியலமைப்பும் வழங்கியுள்ளது.

378. அண்மைய ஆண்டுகளில், மனுதாரர்களுக்கு நிதி மற்றும் போக்குவரத்துச் சிரமங்களை ஏற்படுத்துவதான பிரதிவாதிகள் நீதிமன்றத்தை மாற்று மாறு அடிக்கடி வேண்டுகோள் விடுப்பது கடத்தியவர்களின் பெயர்களின் எழுத்தில் வித்தியாசம், அல்லது காவல்துறை தலைவர் அல்லது இராணுவத்தினர் குற்றச்சாட்டுக்களை வெறுமனே நிராகரிப்பதன் அடிப்படையில் மனுக்களை நிராகரித்தல் ஆகியவை உள்ளிட்ட நீண்ட கால தாமதம் மற்றும் வேறு பல காரணிகள் தொடக்காரணமாக அரசியலமைப்பினூடான ஆள்கொணர்வு மனு வழங்கும் பரிகாரம் செயல்முறைப் பெறுமதியை இழந்துள்ளது. சாட்சிகளை அச்சுறுத்தல், நீதித்துறைமீது "பொதுமக்களுக்கு உண்டானதான நம்பிக்கைக் குறைவு, ஒரு செயலில் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பது பற்றிய அச்சம் ஆகியவை உள்ளிட்ட சூழல் சார்ந்த காரணிகளும் வெற்றிகரமான வழக்காடலுக்குப் பாதகமாக உள்ளன. 1994 முதல் 2002 வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய 844 தீர்ப்புக்களின் ஆய்வொன்றின்படி, 79 சதவீதமான ஆள்கொணர்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்பது தெரியவருகிறது. சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட இலங்கையின் சகல சமூகங்களையும் சேர்ந்த குறிப்பாக 1980 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டின் ஆரம்ப காலம் வரை வலுக்கட்டாயமாகக் காணாமற் போனவர்கள் தொடர்பாக இந்த வழக்குகள் இருந்தன.

379. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களிலும் அதன் பின்னரும் தடுத்துவைக்கப்பட்ட பல்வேறு வகையினர் எந்த நீதியின் அடிப்படையில் அப்படித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றிய பெரிய நிச்சயமற்ற நிலைமை நிலவுகிறது. விசாரணையின்றிப் பெரிய எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்தோரைப் புறத்தொடர்பு அற்ற முகாம்களில் அடைத்து வைப்பதற்கான உரிய சட்ட அடிப்படை தெளிவற்றதாகவே உள்ள அதேவேளையில், சந்தேகிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர் தொடர்பாக அவசரகால ஒழுங்குவிதிகள், 'பிரிஏ' சட்டம் மற்றும் சாதாரண குற்றவியல் சட்டங்களை அரசு எடுத்துக்காட்டு கிறது. இந்த இருவகையைச் சேர்ந்த தடுப்புக் காவலில்வைக்கப்பட்டுள்ளவர்கள் செயல்முறையில் மற்றும் தேவையான சட்டப் பிரதிநிதித்துவத்தையும் ஆள்கொணர்வு மனுவின் அதிகாரத்தைப் பிரயோகித்துப் பெறலாம் என்பதுவும் மிகக் கஷ்டமாகவே உள்ளது. தடுப்புக் காவல் பற்றிய நீதிமன்ற மீளாய்வு 'முறைசார்ந்த மனுவாக இருக்கவேண்டியதில்லை, ஆனால் தடுப்புக் காவலில் உள்ளவர் வழங்கும் கடிதம் ஒன்றின் மூலமும் அந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படலாம்' என அரசின் எழுத்து மூலமான பதில்கள் உறுதியாகக் கூறி னாலும், அவ்வாறு நடைபெற்ற சந்தர்ப்பங்களை அது குறிப்பிடவில்லை. அத்தகைய உரிமை பற்றி ச்கல தடுத்து வைக்கப்பட்டவர்களும் அறியச் செய்வதற்கான அரசின் முயற்சிகள் பற்றிக் குழு அறிந்திருக்கவில்லை.

380. 'தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்காக சட்டப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சுலபமான வாய்ப்புண்டு மற்றும் சட்டத்தரணிகளை அமர்த்த முடியாதவர்களுக்கு அரசினால் நிதியளிக்கப்படும் சட்ட உதவியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகிறது' என அரசின் பதில்கள் மேலும் கூறுகின்றன. அத்தகைய சட்ட உதவி தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்லோருக்கும் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மாத்திரம் கிடைக்கக் கூடியதா என்பது தெளிவற்றதாக உள்ளதோடு, 'சுலபமாகக் கிடைக்கிறது' என்பது பல்வேறு தடுப்பு முகாம்களில் புறத்தொடர்பு இன்றித் தடுத்துவைத்திருப்பதுடன் ஒத்துப்போகாமல் உள்ளது. 'இராணுவத்தினர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராகப் பல அடிப்படை உரிமைகள் மனுக்கள், ஆள்கொணர்வு மனுக்கள் மற்றும் அழைப்பாணைப் பத்திர மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன' என அரசு உறுதியாகக் கூறிய போதிலும், மோதலுடன் தொடர்புபட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் சார்பிலேனும் வெற்றிகரமாக ஆள்கொணர்வு மனுவொன்று செய்யப்பட்டது பற்றி அது அறிவிக்கவில்லை என்பதோடு அத்தகைய சம்பவமொன்றை குழுவினால் அறிந்து கொள்ளவும் முடியவில்லை.

ஐ.நா. செயலாளரிடம்
நிபுணர் குழு வழங்கிய
அறிக்கை
பகுதி - 34

381. தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் நீதிமன்ற வழக்காடலுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்ட போதும், அவசரகால ஒழுங்குவிதிகள் அல்லது 'பிரிஏ' சட்டத்தின் கீழ் அகற்றப்பட்டுள்ள நீதிமன்ற மீளாய்வு மற்றும் அச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டாயமாகத் தடுத்து வைத்தல் காரணமாக ஆள்கொணர்வு மனுவொன்றை விசாரிக்கும் நீதிமன்றம் தடுத்து வைத்திருப்பதைப் பயனுறு விதத்தில் மீளாய்வு செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கும் என்பதையும் குழு குறிப்பிட வேண்டியுள்ளது.

382. இவ்வாறாக, அதற்குக் கிடைக்கக் கூடிய தகவலின் அடிப்படையில், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அது சட்டபூர்வமானதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் அவர்களைத் தடுத்து வைத்திருப்பதற்கான உண்மையான நியாயத்தை மதிப்பீடு செய்வதற்கான வினைத்திறன் கொண்டதொரு பரிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பில்லை எனக் குழு தீர்மானித்துள்ளது.

### (உ) இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு

383. 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தானாகவோ அல்லது புகார் ஒன்றை வைத்தோ அடிப்படை உரிமைகள் மீறல்கள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதற்கு விரிவான முறைசார்ந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது. உண்மையைக்கண்டறிதல் தொடர்ந்து பொருத்தமான அதிகார பீடங்களுக்குப் பரிந்துரைகளை வழங்குவது மற்றும் சமாதானப்படுத்தல் அத்துடன் மத்தியஸ்தம் செய்தல் ஆகியவை அதனால் வழங்கப்படக் கூடிய நிவாரணங்களாகும். நடைமுறை பற்றிய பொருத்தமான சட்டங்கள் வகுக்கப்படும் வரை, பெரிய உரிமைகள் மீறல்கள் தொடர்பாக நேரடியாக நீதிமன்றங்களை அணுகவோ அத்தகைய விடயங்களை பொருத்தமான நீதிமன்றங்களுக்குச் சாட்டவோ அதற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

384. இதன் விளைவாக, கடந்த காலங்களில், காவல்துறையினால் மாத்திரமன்றி அரச திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளினாலும் அதன் பரிந்துரைகள் அநேகமாக அப்பட்டமான முறையில் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு முற்றிலும் வேறுபட்ட விதத்தில், ஏனைய நாடுகளில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் இடைக்கால நீதி பற்றிய கேள்விகளை மேம்படுத்தும் விதத்தில் முக்கியமானதொரு பங்களிப்பை வழங்கியுள்ளன.

385. 2006-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அரசியலமைப்புச் சபையின் அனுமதியின்றி அரசியலமைப்பின் தேவைப்படுத்தலை புறக்கணித்து ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி நியமித்த காரணத்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சட்டத்துடன் உடன்பாடான தன்மை இல்லாதிருந்தது. 2007 ஆம் ஆண்டில், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான தரங்களின் (பாரிஸ் கோட்பாடு) விசேட மீளாய்வினைத் தொடர்ந்து, தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் சர்வதேச ஒருங்கிணைப்புக் குழுவினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 'ஏ' நிலையில் இருந்து 'பி' நிலைக்குத் தரம் தாழ்த்தப்பட்டது. 2006 ஜூலை மாதம் சுமார் 2000 பேர் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கைவிட்டது, அது எடுத்துக்கொண்ட விடயங்களில் ஒன்றாகும் என ஐ.சி.சி.-என்.எச்.ஆர்.ஐ. குறிப்பிட்டது. இலங்கையில் அவசரகால நிலைமை ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், தேசிய மனித உரிமைகள் நிறுவனம் ஒன்று 'அதன் ஆணையை நிறைவேற்றும் போது மிகக் கூடிய விழிப்புடனும் சுயாதீனத்துடனும் செயற்படும்' என எதிர் பார்ப்பதாக அது தெரிவித்தது.

386. முன்னைய ஆணைக்குழு உறுப்பினர்களின் உத்தியோகக்காலம் முடிவடைந்ததும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 2009 ஏப்ரலில் புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிக்கவில்லை. அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தம், குறுகிய கலந்துரையாடலுக்குப் பின் ஆணையாளர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியதைத் தொடர்ந்து, 2011 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கான புதிய தலைவர் ஒருவரையும் மேலும் நான்கு ஆணையாளர்களையும் நியமித்தார்.

387. 2009 ஏப்ரலில் அது காலாவதியாவதற்கு முன்னர் யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பான மீறல்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எதனையும் முன்னைய ஆணைக்குழு புலனாய்வு செய்ததா என்பதை குழு அறியவில்லை. உதாரண்மாக, குழு அறிந்தவரை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஓமந்தை அல்லது வேறு ஏதும் முகாம்களில் அல்லது ஏனைய தடுப்புக்காவல் நிலையங்களில் பிரசன்னமாகயிருக்கவில்லை. ஆயினும், கொள்கையளவில் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போதான மீறல்கள் தொடர்பில் தானாகவோ அல்லது புகார் ஒன்றினைத் தொடர்ந்தோ ஆராய்வதற்கான ஆணையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கொண்டிருக்கும். புதிதாக அமைக்கப்பட்ட ஆணைக்குழு அவ்வாறு செய்யுமா என்பதோடு, அது அப்படிச் செய்தால், அதன் முன்னைய வரலாறு மற்றும் அனுபவத்தை வைத்து அது சுயாதீனம் மற்றும் வினைத்திறன் தொடர்பில் சர்வதேச தரங்களை திருப்திப்படுத்துகிறது என்பதாகுமா என்பதைக் காத்திருந்தே பார்க்கவேண்டும்.

388. குழுவுக்கு வழங்கப்பட்ட 'எல்.எல்.ஆர்.சியின் இடைக்கால பரிந்துரைகளின் அமுலாக்கம் பற்றிய முன்னேற்ற அறிக்கை'யில் அரசு பின்வருமாறு வாதிடுகிறது: காணாமற்போனவர்கள் தொடர்பாக எல்.எல். ஆர்.சி. சேகரித்த சாட்சியங்கள் தொடர்பாக, காணாமற் போனதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அநேகமானவர்கள் கடைசியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் என யுத்த களத்தில் கொல்லப்பட்டிருப்பார்கள் அல்லது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைய முயற்சி எடுக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுடப்பட்டிருப்பார்கள்.

389. இந்த அறிக்கை எந்தவித்திலும் மேலும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதோடு காணாமற்போனவர்களில் சிலருக்குத் தான் பொறுப்பாக இருக்கக் கூடும் என்ற சாத்தியக்கூற்றினை மறுப்பதாகவும் அது தென்படுகிறது. 'காணாமற் போனவர்கள் தொடர்பான விடயங்களைத் தீர்ப்பதை நோக்காகக் கொண்ட கருத்திட்டமொன்றின் ஒன்றிணைந்த பகுதியாக' ஆள்களின், சொத்துக்களின் மற்றும் கைத்தொழில்களின் புனருத்தாபன அதிகார சபையின் தரவுத் திரட்டொன்றை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் பேணுவதாக அரசு ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திலுள்ள கிராமப்புற பாடசாலையில் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் சி.டி.பி.

சிட்டிசன் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீ.எல்.சி. (CDB) நிறுவனமானது, தென்மராட்சி நாவற்குழி மகா வித்தியாலத்திற்கு தகவல் தொழில்நுட்பக் கூடம் ஒன்றினை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தென்மராட்சி பிரதேசத்தின் சனத்தொகையாக 50,000 பேர் உள்ள நிலையில், அவர்களுள் 650 மாணவர்கள் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர்.

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் நிறுவனத்தின் நாடளாவிய ரீதியிலான கூட்டாண்மை சமூக பொறுப்பு CSR முன்னெடுப்புக்களின் ஓர் அங்கமாகவே புதிய தளபாடங்கள் HP வர்த்தகக் குறியீட்டுடனான நவீன கணினிகள், LCD கணினித் திரைகள், அச்சியந்திரங்கள், காகிதாதிகள் ஸ்கேன் இயந்திரங்கள் மற்றும் இணைய வசதிகள் என்பவற்றைக் கொண்ட மிகவும் முன்னேற்றகரமான இந்தத் தகவல் தொழில்நுட்பக் கூடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. CDB நிறுவனத்தின் சந்தைப்படுத்துதல் பிரதிப் பொதுமுகாமையாளர் இளங்கோவன் கார்த்திக் இந்தக் கூடத்தைத் திறந்து வைத்தர். இந்நிகழ்வில் CDB நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பாடசாலை அதிபர் திருமதி மேகலிங்கம், பாடசாலை மாணவர்கள் மற்றும் நாவற்குழிப் பிரதேச நலன்விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

நன்றியுணர்வை வெளிப்படுத்தி உரையாற்றிய பாடசாலையின் அதிபர் திருமதி மகாலிங்கம் கூறுகையில், ''இன்று கல்வியானது தொழில்நுட்பத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதுடன் எமது வாழ்க்கையின் ஓர் அங்கமாகவும் மாறியுள்ளது. எமது மாணவர்கள் நீண்டகாலமாக தகவல் தொழில்நுட்பக் கல்வியை இழந்தவர்களாகவும் இணையதள வசதியை பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் இருந்தனர். முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாத சூழ்நிலையிலும், நாம் மின்னஞ்சல் ஒன்றினைப் அனுப்ப வேண்டுமென்பதற்காக அல்லது இணையத் தளத்தைப் பயன்படுத்துவதற்காக நீண்டதூரம் பயணம் செய்திருக்கின்றோம். CDB நிறுவனத்தால் வழங்கப்பட்ட இந்த அன்பளிப்பானது எமது சமூகம் தகவல் தொழில்நுட்ப அறிவின் உச்சத்தை அடைவதற்கான வழியைத்திறந்து விட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் CDB நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் இளங்கோவன் கார்த்திக் உரையாற்றுகையில் ''கிராமப்புற இளைஞர்களிடையே தகவல் தொழில்நுட்ப கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறான செயற்றிட்டங்களை நாம் கடந்த மூன்று வருடங்களாக முன்னெடுத்து வருகின்றோம். தகவல்தொழில்நுட்ப அறிவு என்பது கல்வியைத் தொடர்வதற்கும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கும் இன்றியமையாத தேவையாக காணப்படுகின்ற நிலையில், நாவற்குழி மகா வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித் திட்டமானது, இங்குள்ள மாணவர்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு வழி வகுக்கும்'' - என்றார்.

(த)



மானிப்பாய் இலங்கை வங்கி கிளையினால் குத்தகைக்கு கடனாக 32 லட்சம் ரூபா பெறுமதியான பஸ் ஒன்றை, கந்தையா சின்னத்துரை என்பவருக்கு மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மா கையளிக்கிறார்.

(த-100)

## எல்.பி. பினான்ஸ் மரக்கன்றுகள் நடுகை

எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தின் 40ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வை முன்னிட்டு நிறுவனத்தினால் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் நெல்லியடி மகாவித்தியாலயத்திலும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்த நிகழ்வில் சுன்னாகம் கிளை முகாமையாளர் க.கஜன், மானிப்பாய் கிளை முகாமையாளர் பெ.அமலஸ், நெல்லியடி கிளை முகாமையாளர் பி. மோகன்ராஜ் மற்றும் ஊழியர்கள் பங்கேற்றனர். (த)



யாழ்ப்பாணத்தின் முதலாவது நீரிழிவு சிகிச்சை மையத்தை லாவா வைத்தியசாலையில் யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் வெ.சுதர்சன் ஆரம்பித்து வைத்தார். அவர் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் தெரிவான அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு நீரிழிவு சோதனை இயந்திரம் ஒன்றை வழங்குகிறார். அருகில் டாக்டர் வை.யதுநந்தனும் உள்ளார். (த)

## 2011 ஆம் ஆண்டுக்கான திருமண ஆடைகள் ஹமீடியாவால் அறிமுகம்

இலங்கையில் ஆண்கள் ஆடைத் துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனமாக திகழும் ஹமீடியா, அண்மையில் இடம்பெற்ற பிரிட்டிஷ் அரச குடும்ப திருமணத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட 2011 திருமண ஆடைத் தெரிவுகள் (2011 Wedding Colle ction) இனை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஹமீடியா முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் கூறுகையில், ''ஒருவரது வாழ்வில் அவரது திருமண நாள் மிக மிக முக்கியமான தினம் என்பதுடன் தனியான அந்தஸ்தைப் பெறும் ஒரு விடயமாகும். ஹமீடியா நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் முழுமையான திருமணத் தீர்வுகள், மண மகன் ஒருவர் தனது வருங் காலத் துணைவிக்கு அளிக்கும் வெகுமதியாக அமைவதை உறுதிப்படுத்தும் வகையில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளன.

ஹமீட் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் 80 வீதமான மணமகன்கள் தமது திருமண ஆடையை தெரிவு செய்து கொள்வதற்கு கடைசி நேரம் வரை காத்திருக்கின்றமை அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தனக்கு தெரிய வந்துள்ளதாகக் கூறினார்.''

''மணமகனுக்கு முன்கூட்டியே திருமணத்திற்கு தயாராக வேண்டும் என்பதனை வலியுறுத்துவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

ஹமீட் மேலும் கூறுகையில், இல. 34, காலி வீதி, வெள்ளவத்தை என்ற முகவரியிலுள்ள ஹமீடியாவின் பிரபல காட்சியறையில் அமைக்கப்பட்டுள்ள (The Groom's Studio) ஆனது, இப்பிராந்தியத்திலேயே இவ்வாறான ஒரு வசதியாகக் காணப்படுவதுடன் மணமகனின் தலை முதல் கால் வரையான அனைத்து ஆடைத் தேவைகளையும் நிவர்த்தி செய்கின்றது.

(த)



# ஆர்பிகோ சுப்பர் சென்டர் பரிசு பெற்றவர்களுக்கு விருது

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு ஆர்பிகோ சுப்பர் சென்டர் மூலம் நடத்தப் பட்ட 'முழு வருடத்துக்கும் புது வருடம்' திட்டத்தில் பரிசு வென்றவர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் வத்தளை ஆர்பிகோ சுப்பர் சென்டரில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக றிச்சர்ட் பீரிஸ் டிஸ்ரிபியுட்டர்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்ட்ரூ டால்பி கலந்துகொண்டிருந்தார்.

வருடம் முழுவதும் நமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான புதுமையான சொப்பிங் அனுபவத்தை வழங்கும் ஆர்பிகோ சுப்பர் சென்டர் இம்முறை தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி வரை நாடு பூராகவும் காணப்படும் தனது அனைத்து ஆர்பிகோ சுப்பர் சென்டர் கிளைகளிலும் 'முழு வருடத்துக்கும் புதுவருடம்' அன்பளிப்பு திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இந்த அன்பளிப்பு திட்டத்தின் முதல் பரிசாக வருடம் முழுவதும் ஆர்பிகோ சுப்பர் சென்டரில் இலவசமாக சொப்பிங் செய்யும் வாய்ப்பு வழங்க ஏற்பாடாகியிருந்தது.

இந்த அன்பளிப்புத் திட்டத்துக்காக சுமார் 3,00,000க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், குலுக்கல் முறை மூலம் 37 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, மாதமொன்றுக்கு 15,000 ரூபா வீதம் வருடமொன்றுக்கு இலவ சமாக பொருட்கொள்வனவில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அத்துடன், இந்த அன்பளிப்புத் திட்டம் நடைமுறையில் இருந்த காலப் பகுதியில் சுமார் 2,000இற்கும் அதிகமான உடனடிப் பரிசில்களும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இந்த அன்பளிப்பு திட்டத்துக்குத் தகுதி பெற வாடிக்கையாளர்கள் செய்ய வேண்டியிருந்தது குறிப்பிடப்பட்ட மூன்று பொருள்கள் உள்ளடங்கலாக ஒரே தடவையில் 3,000 ரூபாவுக்குக் குறையாமல் பொருள்களைக் கொள்வனவு செய்வதாகும்.

இந்த அன்பளிப்பு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு றிச்சர்ட் பீரிஸ் டிஸ்ரிபியுட்டர்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்ட்ரூ டால்பி



கருத்துத் தெரிவிக்கையில்-

''சுமார் ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் இலங்கையில் ஆர்பிகோ சுப்பர் சென்டர் நிறுவப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக எமது வாடிக்கையாளர்களுக்கு புதுமையானதும், களிப்பானதுமான அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இலங்கையின் அனைத்து பகுதிகளுக்கும் இந்த சேவைகளும் அனுபவமும் சென்றடையக்கூடிய நடவடிக்கைகளை தற்போது நாம் மேற்கொண்டு வருகிறோம்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
07 ஜூன் 2011 செவ்வாய்க்கிழமை

# இளைஞர்களிடையேயான வலைபந்தாட்டம்; சண்டிலிப்பாய் அணி தேசிய மட்டத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 7

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக அணி மாவட்டச் சம்பியனாகித் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கரவெட்டிப் பிரதேச அணியும் சண்டிலிப்பாய் பிரதேச அணியும் மோதின.

இரு செற் ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் இரு அணிகளும் ஆக்ரோசமாக விளையாடின.

முதல் பாதி நிறைவில் சண்டிலிப்பாய் அணி 10:5 என்ற புள்ளிகளுடன் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் மேலும் உற்சாகமாக விளையாடிய சண்டிலிப்பாய் அணி 11:3 என்ற புள்ளிகள் பெற்று ஆட்ட நிறைவில் 21:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியை தோற்கடித்தது.

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளன அணி மாவட்ட சம்பியனானது.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள தேசிய இளைஞர் வலைபந்தாட்ட போட்டியில் இந்த அணி கலந்துகொள்கிறது. (ஐ)

# உதைபந்தாட்ட லீக் சுற்றுப்போட்டி; உரும்பிராய் சென்.மைக்கல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற ஆட்டங்களில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. ஓர் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

வளர்மதி விளையாட்டுக் கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி வெற்றி கொண்டது.

மற்றைய ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ஐ-23)

# இன்றைய ஆட்டங்கள்

கைதடி, ஜூன் 7

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பிரதேச ரீதியாக நடத்திவரும் ''செற் அப்'' முறையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சாவகச்சேரி சிறிமுருகன்வி.கவும் ஐங்கரன்விகவும் மோதுகின்றன. (ஐ-23-288)

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஊரெழு றோயல் வி.க.வும் பாசையூர் சென்.அன்ரனீஸ் வி. கவும் மோதுகின்றன. (ஐ-23)

# பெண்களுக்கான எல்லேப் போட்டியில் மாகாண சம்பியனானது யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணம், ஜூன் 7

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான எல்லேப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட் டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணியினர் 7 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தனர்.

சுபாங்கி, அஷாங்கி ஆகியோர் தலா 2 ஓட்டங்களையும் கஜந்தினி, பிறின்சினி, முகுந்தினி ஆகியோர் தலா ஒரு ஓட்டங்களையும் பெற்றனர்.

முதலாவது இன்னிங்ஸுக்காகப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணியினர் 4 ஒட்ங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தனர்.

செல்வகெலன், பேபி சாளினி, பத்மசைலா, யாழினி ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தைப் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் யாழ்.மாவட்ட அணியினர் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தனர்.

ரேவதி, நித்தியநிலானி, சிந்துஷா, நதீபனா ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தைப் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் முல்லைத்தீவு மாவட்ட அணியினர் 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தனர்.

பேபிசாளினி, பரமேஸ்வரி ஆகியோர் தலா ஒரு ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆட்ட முடிவில் யாழ்.மாவட்ட அணி 11:6 என்ற ஓட்ட எண்ணிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட அணியை வெற்றி கொண்டு வடமாகாண சம்பியன் ஆனது.

முதன்முறையாக முல்லைத்தீவு மாவட்ட அணி வடமாகாணப் போட்டியில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(ஐ-23)

# முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி

வரணி, ஜூன் 7

கரம்பைக் குறிச்சி முன்பள்ளி விளையாட்டுப் போட்டி கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி பெற்றோர், ஆசிரிய சங்கத் தலைவர் ஆர். சுதாகர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர். இரகுநாதன் பிரதம விருந்தினராகவும் கெயர் சர்வதேச வெளிக்கள இணைப்பாளர் என்.நந்தகோபன் மற்றும் கரம்பைக் குறிச்சி கிராம அலுவலர் வ.வேல்முருகு கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

மேலும் கரம்பைச் குறிச்சி அ.த.க.பாடசாலை அதிபர் எஸ்.தயாபரன், சமாதான நீதிவான் எஸ்.நவரட்ணசாமி, சாவகச்சேரி பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் ஆர். கந்தசாமி உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-122)

# ஒலிம்பிக் தின ஏற்பாட்டுக் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 7

தேசிய ஒலிம்பிக் தின நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா அரச அதிபர் திருமதி சாள்ஸ் தலைமையில் மாநாடு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (ஐ-23)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன் 7

யாழ். மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வெளியாகியுள்ளன.

விவரம் வருமாறு:

**19 வயதுப் பிரிவு**

எல்லே- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

கபடி- வடமராட்சி மணற்காடு கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி, வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயம்.

ரெனிஸ்- யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**உதைபந்தாட்டம்**

17 வயதுப் பிரிவு- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு- மானிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**கரபந்தாட்டம்**

15 வயதுப் பிரிவு- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

17 வயதுப் பிரிவு- புத்தூர், ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், புத்தூர், ஆவரங்கால் நட ராஜ இராமலிங்கம் வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு- புத்தூர், சோமஸ்கந்தக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், மாதகல் சென். ஜோசேப் வித்தியாலயம்.

**கூடைப்பந்தாட்டம்**

19 வயதுப் பிரிவு- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**மென்பந்துள கிரிக்கெட்**

19 வயதுப் பிரிவு- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**மேசைப்பந்தாட்டம்**

19 வயதுப் பிரிவு- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**சதுரங்கம்**

15 வயதுப் பிரிவு- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

19 வயதுப் பிரிவு- மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

**கரம்**

15 வயதுப் பிரிவு- யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு- கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

**உடற்பயிற்சிப் போட்டி**

19 வயதுப் பிரிவு- இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**ஹொக்கி**

19 வயதுப் பிரிவு- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான நிலையில் இரண்டாவது டெஸ்ட்

இலங்கை- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

தனது முதலாவது இன்னிங்சில் 486 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றது. பதிலளித்து ஆடிய இலங்கை மூன்றாம் நாள் நிறைவில் 3விக்கெட் இழப்புக்கு 372 ஓட்டங்களை பெற்றிருந்தது. எனினும் நான்காம் நாள் ஆட்டத்தில் இலங்கையின் விக்கெட்கள் மளமளவெனச் சரிந்ததால் 479 ஓட்டங்களுக்குள் சுருண்டது. மஹேல ஜெயவர்த்தன 49 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

தனது இரண்டவது இன்னிங்சுக்காக களம்மிறங்கிய இங்கிலாந்து அணியின் தலைவர் ஸ்ட்ரோசை ஓட்டங்கள் எதுவும் எடுக்க விடாமல் எல். பி.டபிள்யு. முறையில் வெளியேற்றினார் வெலகெதர. அடுத்து வந்த ஜொனதன் ரொட்டும், குக்கும் 116 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். ரொட் 58 ஓட்டங்களுடன் ரங்கன ஹேரத்தின் பந்தில் போல்டானார். நான்காம் நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் இழப் புக்கு 149 ஓட்டங்களை பெற்றிருந்து. குக் 61 ஓட்டங்களு டனும், பீற்றர்சன் 18 ஓட்டங் களுடனும் களத்தில் இருந்தனர். வெற்றி தோல்வி இன்றைய ஐந் தாம் நாள் ஆட்டமே தீர்மானிக்கவுள்ளது.

# வெற்றி பெறுமா இந்தியா?




போர்ட்ஒவ் ஸ்பெய்னி, ஜூன் 7

இந்திய- மேந்திய தீவுகள் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று போர்ட்ஒப் ஸ்பெய்னில் ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வென்ற மே.இ. தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. எனினும் அதன் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. மத்திய வரிசை வீரர்களான சர்வான்(56), சாமூவேல்ஸ் (55) ஆகியோரின் அரைச்சத்தின் உதவியால் அந்த அணி50 ஓவர்கள் நிறைவில் 9விக்கெட் இழப்புக்கு 214 என்ற இலக்கை அடை முடிந்தது. இந்திய அணிசார்பில் ஹர்பஜன்சிங் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இலகுவான இலக்கை துரத்தத்தொடங்கிய இந்திய அணி 29 ஓட்டத்தை பெற்றிருந்த போது தனது முதலாவது விக்கெட்டாக பார்த்தீவ் பட்டேலை (13) இழந்தது. அதன் பின்னர் வந்த விராட்ஹோக்லி (2), பத்ரிநாத் (17) ஆகியோரும் நிலைக்கவில்லை. மறுபுறத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய தவானும் , ரோகித்சர்மாவும் அணியைப் பலப்படுத்தத் தொடங்கினர்.தவான் 51 ஓட்டங்களோடு வெளியேற அணித் தலைவர் ரெய்னா களம்புகுந்தார். 36 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங் களை பெற்றிருந்தது. வெற்றிபெற இன்னும் 61 ஓட்டங்கள் தேவை.இது நள்ளிரவு வரையான ஆட்டத் தின் நிலை.

# ரபேல் நடால் மீண்டும் சம்பியன்




பிரெஞ் பகிரங்க ரெனிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர்பிரிவில்ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால் மீண்டும் சம்பியனாகியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவர் சுவிட்ஸர்லாந்து வீரர் ரோஜர் பெடரரை 7-5, 7-6 (7-3), 5-7, 6-1 விகிதத்தில் தோற்கடித்தார். 25 வயதான நடால் பிரெஞ் பகிரங்கத் தொடரில் 6 ஆவது தடவையாக சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் சுவீடனின் வீரர் ஜோன் போர்க் 1974 முதல் 1981 வரையான காலத்தில் 6 தடவை சம்பியனாகி படைத்திருந்த சாதனையை நடால் சமன்செய்துள்ளார். (15)

# டொனால்ட் பதவி விலகல்



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் பதவியில் இருந்து தென்னாபிரிக்க முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அலன்டொனால்ட் விலகினார்.

தென்னாபிரிக்க அணியின் உதவி பயிற்சியாளராக அவர் நியமிக்கப்படவுள்ளார். இதையடுத்து அவர் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இதுதொடர்பாக டொனால்ட் நியூசிலாந்து கிரிக்கெட் சபையைத் தொடர்பு கொண்டு பேசியதாகவும், அப்போது பந்துவீச்சுப் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகுவதாகக் கூறியதாகவும் அதன் தலைமைச் செயலக அதிகாரி ஜஸ்டின் வாஹன் தெரிவித்தார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக கடந்த ஜனவரியில் பொறுப்பேற்றார் டொனால்ட். உலகக் கிண்ணம் வரை அவர் அந்த அணிக்கு பயிற்சியளித்தார். (15)

# வஹாப் றியாசிற்கு அனுமதி



இங்கிலாந்தின் உள்ளூர் 'ரி-20' போட்டியில் பங்கேற்க வஹாப் றியாசிற்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) அனுமதி அளித்துள்ளது.

இது குறித்து வஹாப் றியாஸ் கூறியதாவது;

இலங்கையில் நடக்கவுள்ள 'ரி-20' போட்டியில் பங்கேற்க ஏற்கனவே அனுமதி பெற்றிருந்தேன். தற்போது இங்கிலாந்தில் நடக்கும் உள்ளூர் போட்டியில் பங்கேற்க பி.சி.பி அனுமதி கொடுத்துள்ளது.

இந்த இரண்டு வாய்ப்பையும் பயன்படுத்தி என்னுடைய பந்து வீசும் திறமையை வளர்த்துக் கொள்வேன். இந்தப் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் முகமது யூசுப், ரசாக் உள்ளிட்ட பலர் பங்கேற்க உள்ளனர், இவ்வாறு வஹாப் றியாஸ் கூறினார். (15)

# தென்னாபிரிக்க பயிற்சியாளர் கௌரவம்



தென்னாபிரிக்க அணியின் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட இருப்பதை மிகப் பெரிய கௌரவமாக கருதுகின்றேன் என்று ஹரி கிறிஸ்டன் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து கோரி வான் ஜில் விலகினார். இவருக்குப் பதிலாக புதிய பயிற்சியாளரை நியமிக்க தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்தது.

இந்த நிலையில், தனது பதவிக்காலம் முடிந்ததால் இந்திய அணியின் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து ஹரி கிறிஸ்டன் விடை பெற்றார். இதனை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை, கிறிஸ்டனை பயிற்சியாளராக நியமிக்க திட்டமிட்டது. ஏனெனில் இவர் பயிற்சியாளராக செயற்பட்ட காலகட்டத்தில், இந்திய அணி டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்தது. தவிர, உலகக் கிண்ணத்தை வென்று சாதித்தது.

இவர் 101 டெஸ்ட் மற்றும் 185 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய அனுபவம் பெற்றவர். பயிற்சியாளர் பதவிக்கான நேர்முகத் தெரிவு சமீபத்தில் நடந்தது. இதில் கிறிஸ்டன் பயிற்சியாளராகவும், முன்னாள் தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் அலன் டொனால்ட் பந்துவீச்சு பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட இருப்பதாக செய்திகள் வெளியாகின்றன. இதே போல டெஸ்ட், ஒருநாள் மற்றும் 'ரி-20' போட்டிகளுக்கு டி வில்லியர்ஸ் அணித்தலைவராகவும் நியமிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகவும் செய்திகள் வெளியாகின்றன. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்று வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது குறித்து கிறிஸ்டன் கூறுகையில், தென்னாபிரிக்க அணியின் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட இருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. எனது நாட்டு அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட இருப்பதை மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகின்றேன் என்றார். (15)

# விளையாட அடம்பிடிக்கும் சனத்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரிய, மீண்டும் சர்வதேச போட்டிகளுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளார். இந்த மாதம் 30 ஆம் திகதி தனது 42 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள சனத் ஜெயசூரிய, இறுதியாக 2009 ஆம் ஆண்டு இந்திய அணியுடனான போட்டிகளில் பங்குபற்றினார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் அவர், இங்கிலாந்துடனான ஒருநாள் சுற்றுப்போட்டிகளில் விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார். 444 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய ஜெயசூரிய, உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவு செய்யப்படாதமை குறித்து ஏமாற்றம் தெரிவித்துள்ளார்.



இந்த நிலையில் 'இங்கிலாந்துடனான போட்டிகளில் விளையாட வாய்ப்பளித்தால் நாட்டிற்காக என்னால் முடிந்தளவு சிறப்பாக விளையாடுவேன்' என்று அவர் கூறியுள்ளார். தான் 18 வயதில் இருந்ததைப் போல் சிறந்த உடல்திட நிலையில் உள்ளதாகவும் தொடர்ந்தும் தீவிரமாக பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இறுதியாக இலங்கை அணி இங்கிலாந்தில் ஒருநாள் தொடரில் பங்குபற்றியபோது இலங்கை அணி 5-0 விகிதத்தில் இங்கிலாந்தை வென்றது. சனத் ஜெயசூரிய அந்தத் தொடரில் 2 சதங்கள் உட்பட 322 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

42 வயதாகும் சனத் ஜெயசூரிய, தற்போது சர்வதேச போட்டிகளில் நீடித்திருக்கும் அதிக வயதான வீரராக உள்ளார். ஆனால், இலங்கையின் சார்பில் அதிக வயதில் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடிய வீரர் சனத் ஜெயசூரிய அல்லர்.

சோமசந்திர டி சில்வா 1985 ஆம் ஆண்டு மெல்பேர்னில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் பங்குபற்றிய போது அவருக்கு வயது 42 வருடங்கள், 261 நாட்களாகும். இவர் தற்போது இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுத் தலைவராக பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மற்றொரு இலங்கையரான பிளேவியன் [illegible], 1996 ஆம் ஆண்டு நெதர்லாந்து அணி [illegible] வயதில் (43 வருடங்கள், 129 நாட்கள்) விளையாடினார்.(15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி இராசரத்தினம்



புன்னாலைக்கட்டுவன் பிரபல வர்த்தகரும் இராஜன் மில்ஸ் உரிமையாளருமான காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராசரத்தினத்தின் (S.R) அன்புத் துணைவியார் பரமேஸ்வரி இராசரத்தினம் 05.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுந்தரம்-நன்னிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அருமை மரு மகளும், வரதராஜன், வனஜா, வாசுகி, வத்சலா, வசந்தி, வளர்மதி, வாமசக்தி ஆகியோரின் அருமைத் தாயும், சாந்தகுமாரி, இராமலிங்கம், காலஞ்சென்ற பாலச்சந்திரன், கருணாகரன், பெரிய தம்பி, தனஞ்செயன், கலாநிதி கமலராசா ஆகியோரின் அன்பு மாமியும், காயத்திரி, லாவண்யா, வைத்தியகலாநிதி சிவதர்ஷினி, சாந்தகுமார், சயந்தன், வைத்தியகலாநிதி சியாமா, வைத்திய கலாநிதி சிவந்தன், வித்தியா, ஷர்மிளா, கிருபரன், சிந்துஜா, ரஜீவ்தர்மேந்திரா, சுபாஷினி, கஜானி, சபேஷன், வாகீசன், தனுஜா, தாரணி, ஐங்கரன், அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவானி, சஜான், மீனாட்சி, அம்ரித்தா, அபிராமி, பூஜித்தா, துவாரகேஷ், சந்தோஷ், ஆனந்தி ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2011 வியாழக்கிழமை காலை கொழும்பு - 05, ஜாவத்தை, 15B, டொன் கரோலிஸ் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 9.00 மணிக்கு பூதவுடல் கனத்தை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி வாசுகி - பாலச்சந்திரன், 011 258 6806
15B டொன் கரோலிஸ் வீதி,
ஜாவத்தை, கொழும்பு - 05.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/623)

## யாழ். பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கத்தினால் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றவர்களின் பாராட்டுவிழாவும் 25 வருட சேவை நிறைவு செய்த வர்களுக்கு பதக்கம் அணிந்து கௌரவிக்கும் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் தொழிற்சங்கத் தலைவர் க.தங்கராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கடந்தாண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு கௌரவிப்பு இடம் பெறுவதுடன் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் 05 பேருக்கு ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஒ-86)

**STUDY & WORK IN**
**New zeland / Australia / Italy**
**UK / Canada / Switzer land**
(Study + Work + PR(Permanant Residency)

✔ அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் WORK PERMIT VISA/ TOURIST VISA / MIGRATION VISA செய்துதரப்படும்.

✔ 100% Visa Gurantee for Genune Students
✔ 100% Accomodation and Part Time Work Gurantee

Courses :-
Business Management
- Computing
- Information Technology
- Hotel Management
- Beauty Culture

- Intake in Progress
Admissions From Reputed Colleges

No Need IELTS

Minimum Qualification :- O/L நிபந்தனைகளுக்குட்பட்டது

**Study MBBS/MD in UKRINE - East Europe**
Lugansk State Medical University
SLMC Appoved
➡ Admission in Progress
UKRAINE
Entry Qualification : A/L 3 Passes (Biology,Chemistry,Physics)

**Study in INDIA (Bangalore,Tamilnadu)**
Admissions From Reputed Colleges
- Engineering
- Medicine (MBBS)
- Business Management
- Computing Etc......

Note:-
Free Laptop
Free International Tour
✱ Condition Apply

- Minimum Qualification A/L or Equivalent

SIEG College
169 , George R De Silva Mawatha,
Kotahena , Colombo-13. Tel :- 011-2434767
Mobile :- 077 3 502 612

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையில் கடமையாற்றும்
எமது சக உத்தியோகத்தர் திருமதி ம. சரஸ்வதி
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி எஸ். கண்மணி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.

செயலாளர்,
உத்தியோகத்தர்,
ஊழியர்கள்,

(சி/710)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

06.06.2011 அன்று உதயனின்
20ஆம் பக்கத்தில் பிரசுரமான
மேற்படி விளம்பரத்தில்

### திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்

கல்விப்பணிப்பாளர், யாழ். கல்வி
வலயம் என வாசிக்கவும்.

யாழ்/ யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02★03★1974

மறைவு
19★07★2010

### தர்மலிங்கம் விக்னேஸ்வரி

(ஜெயந்தி)

ஓராண்டு சென்றதம்மா நீர் பிரிந்து
எம் கண்ணீர் ஆறாக ஓடுதம்மா
மீண்டும் வந்து ஆறுதல் தருவீரோ
உம் நினைவால் நாம் இருப்போம்.

சேர்ச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.


என்றும் உங்கள் நினைவுடன்,
குடும்பத்தினர்.

(1722)

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் பொலிஸ் திணைக்களம், வவுனியா. )



பருத்தித்துறை, புலோலி கிழக்கு சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் 70, கற்குழி, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மு.சிவசுப்பிரமணியம் 04.06.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுகன்யாவின் அன்புக் கணவரும் சுசீந்திரன், சுஜீவன், தேனுகா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - செல்லப்பாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர்- லட்சுமிதேவி தம்பதியரின் மருமகனும் சிவானந்தன், சிவநேசன், சிவயோகம், தங்கராணி, சிவகெங்கா ஆகியோரின் சகோதர னும் தேவகன்யா, வரராஜசிங்கம், தில்லையம்பலம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணியளவில் கல்லடி ஒழுங்கை, தும்பளை வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோடியடி இந்து மயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.இல:
0775788609

தகவல்:
மனைவி
திருமதி சுகன்யா சிவசுப்பிரமணியம்

(49)

## விசா சேவை

UK Student Visiting வீசாவில் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். (தகைமை O/L) மற்றும் India, Singapore, Malaysia போன்ற நாடுகளுக்கான சுற்றலா ஏற்பாடுகள்.
தொடர்புகளுக்கு:- 0214910959, 0779218444.

## கடை வாடகைக்கு

ஸ்ரான்லி வீதி, இல. 206, (Stanly Road, No.206) CDB BANK இற்கு அருகில் உள்ள கடை வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0774322873.

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராஜ வீதியில், கல்வியியல் கல்லூரிக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0771936594, 0771710787

## விற்பனைக்கு

ஜெயிலிங் 90 CC மோட்டார் சைக்கிள், குழந்தைகளுக்கான கொட் (மரம்), சில கணினி உதிரிப்பாகங்கள் ஆகியவை விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:- 0750392868.

## வீடு வாடகைக்கு

892, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியும் கண்டி வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள இந்த வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 82, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:- 0750740718.

## தவறிவிட்டது

நேற்று (06.06.2011) யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடியில் மாலை 5-6 மணிக்கிடைப்பட்ட நேரத்தில் கனகசபை சதீஸ்குமார் ஆகிய எனது இல.912272524V அடையாள அட்டையும் பணப்பையும் தவறுதலாக [illegible] (or) Science Hall, Kannathitty இல் சமர்ப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

## மரண அறிவித்தல்

### கனகராசா வரதராஜன்

(பிரபல மில் உரிமையாளரும் , புகழ்பெற்ற மெக்கானிக்கும்



சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா வரதராஜன் 04.06.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகராசா மற்றும் விசாலாட்சி தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற நாகேந்திரம் தம்பதியரின் அன்பான மருமகனும் செல்வரட்ணேஸ்வரியின் (இந்திரா) பிரியமான துணைவரும் குணேஸ்வரராசா, காலஞ்சென்ற கோணேஸ்வரராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசந்தாவின் மைத்துனரும் அனோச்சின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
வ. செல்வரட்ணேஸ்வரி
(இந்திரா துணைவி ).

(சி/709)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும், கூட்ட மைப்பில் இடம்பெறும் கட்சிகளின் விருப்பைப் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமக அந்த முயற்சி தடைப்பட்டு வந்தது.நாளை மறுதினம் இடம்பெறும் கூட்டத்தில் அரசியல் கட்சியாக கூட்டமைப்பை பதிவு செய்வது குறித்து முக்கியமாக ஆராயப்படும். (ஒ-ஐ)

## தொழிலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்த பேச்சுக்களின் பின்னர் நேற்று இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது. இதுவரை நாளொன்றுக்கு 415 ரூபாவாக இருந்து வந்த சம்ளத்தை 500 ரூபாவாக அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (உ)

## உதயனை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்திருந்தது. ஆனால், அவர்களில் 337 பேரே நேற்றுமுன்தினம் வவுனியாவில் விடுவிக்கப்பட்டனர். ஏனையவர்கள் விடுவிக்கப்படவில்லை.

விடுவிக்கப்படாத போராளிகளின் உறவினர்கள் விசனம் அடைந்து எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர்'' என்று உதயன் நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தியே பொய்யானது என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனினும், லண்டன் பிபிஸி நேற்றைய தினம் வவுனியாவில் நடைபெற்றது தொடர்பாகச் செய்தி வெளியிட்டிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''அதிகாரிகள் உறுதியளித்தபடி முன்னாள் போராளிகளில் பலரை விடுவிக்காததன் காரணமாக, அவர்களது உறவினர்களில் பலர் வவுனியா கலாசார நிலையத்தின் முன்பாக அழுதுகொண்டிருந்தனர்.

முன்னாள் போராளிகள் 900 பேர் விடுவிக்கப்படுவர் என்று இளைஞர் விவகாரம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்திருந்தது. ஆனால், 337 பேர் மட்டுமே ஞாயிறன்று விடுவிக்கப்பட்டனர்.

முன்னாள் போராளிகள் சிலரின் ஆவணங்கள் தயார்ப்படுத்தப்பட வேண்டியுள்ளதால் அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்று புனர்வாழ்வு திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுகந்த ரணசிங்க தெரிவித்தார்.

''எஞ்சிய முன்னாள் போராளிகள் இன்னும் ஓரிரு நாள்களில் விடுவிக்கப்படுவர்'' என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, விடுவிக்கப் படாதவர்களின் குடும்பத்தினர் தமது விசனத்தை அதிகாரிகளிடம் வெளிப்படுத்தினர். ''எமது பிள்ளைகள் விடுவிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததால் நாம் நேற்றிலிருந்து காவல் காத்துக் கிடக்கிறோம்'' என்று அவர்கள் கூறினர்.

உறவினர்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைச் சுற்றிக் கடுமையான பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது'' - என்றுள்ளது. (உ)

## எதிர்ப்போரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு முன்னர் லிப்டன் சுற்று வட்டத்தில் நடை பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்துவ தற்காக கம்பு, தடிகளுடன் குண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததை ஊடகங்கள் புகைப் படங்களுடன் வெளியிட்டிருந்தமை இதற்கு சிறந்த உதாரணமாகும். இந்தக் கூலிப் படையினர் அரச சார்பு அரசியல்வாதியின் பாதுகாப்பைப் பெறுபவர்கள் எனவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேபோல், சுதந்திர தினத்தன்று நாட்டின் யுத்தத்தை வெற்றிகொண்ட வீரரான சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும்படி ஐக்கிய தேசியக் கட்சி வெலிகடைச் சிறைச்சாலைக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீதும் அரச சார்பு அரசியல்வாதி ஒருவரின் பாதுகாப்பு பெற்ற குண்டர்கள், பாதாள உலக கோஷ்டியினர் ஆகியோர் தாக்குதல் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மீதான தாக்குதலின்போது சிவில் உடை யுடன் குண்டர்கள் பொலிஸாருடன் இணைந்து நிராயுதபாணிகளான ஊழி யர்கள் மீது மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது.

மேற்படி சம்பவங்கள் நாட்டின் சட்டம், ஒழுங்கு ஆகியவை சீர்குலைந்துள்ளன என்பதைத்தெளிவாக விளக்குகின்றன.

## வெளிநாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு பிரதேசங்கள் பின்தங்கிய பிரதேசங்கள் அல்ல. அனைவரும் இந்நாட்டு மக்களே. எங்கு வாழ்ந்தாலும் அனைவரும் இந்நாட்டுக் குடிமக்களே. ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே சட்டம் உட்பட சமமான வசதிகளும் செய்து கொடுப்பது அரசின் பொறுப்பாகும். அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் ஒன்று உருவாக்கிக் கொடுக்கப்படும் - இப்படி அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஹகலிய ரம்புப்வெல, டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரட்ன திவுல்கனே, இலங்கை தொலைத்தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர், ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர், கூட்டுப்படைகளின் தளபதி எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

### பஸ்சேவை சீர்குலைவு

இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பலர் யாழ். போக்குவரத்துச் சபை பஸ்களில் ஏற்றிச்செல்லப்பட்டமையால் யாழ்ப்பாணத்தில் வழக்கமான பஸ் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டது.

அரச அதிபர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் மற்றும் சுதந்திரக்கட்சியின் வடமாகாண அமைப்பாளர் எனப் பலரும் தமது ஆதரவாளர்களை கொக்காவிலுக்கு அழைத்துச்செல்லவென சபை பஸ்களை பெற்றமையால் அனைத்து வழிச்சேவைகளும் பாதிக்கப்பட்டதாக சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருவகாலச்சீட்டு பெற்ற பாடசாலை மாணவர்கள் பலரும் பஸ் சேவை சீரின்மையால் பாடசாலைக்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். நீண்ட நேரம் காத்திருந்தும் பஸ் கிடைக்காததால் பொது மக்களும் ஊழியர்களும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையைத் திட்டித் தீர்த்தனர்.

### திருப்பி அனுப்பப்பட்ட அரச அதிகாரிகள்

இதேவேளை, திறப்பு விழாவுக்குச் சென்ற யாழ். மாவட்ட அரச அதிகாரிகள் பலர் நிகழ்வில் கலந்துகொள்ளாது திருப்பினர். குறிப்பிட்ட நேரத்திற்கு விழா நடக்கும் இடத்துக்குச் செல்லாமையால் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இவர்களை நிகழ்வில் கலந்துகொள்ள படையினர் அனுமதிக்கவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி வருவதுக்கு முன்னர் குறிப்பிட்ட நேரத்துக்கு உரிய இடத்துக்கு வந்து தமது இருக்கைகளில் அமரும்படி அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும் சில அதிகாரிகள் காலம் தாழ்த்தி வந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டது.

### அதியுயர கோபுரம்

கொக்காவில் தொலைத் தொடர்புக் கோபுரம் தெற்காசியாவிலேயே அதி உயரமானது என்று கூறப்படுகிறது. முற்பகல் 11.30 மணிக்கு ஜனாதிபதி அதனைத் திறந்து வைத்தார். 1982 ஆம் ஆண்டு இதே இடத்தில் அமைக்கப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரம் போரினால் அழிக்கப்பட்டது. 1990 இல் இந்தப் பகுதியைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததை அடுத்து அது தற்போது 400 மில்லியன் ரூபா செலவில் மீளமைக்கப்பட்டுள்ளது.

174 மீற்றர் உயரமான இந்தக் கோபுரத்தின் மூலம் ஒலி, ஒளிப்பரப்பு மற்றும் தொலைத் தொடர்பாடல் வசதிகளை வழங்க முடியும். இதன் மூலம் தேசிய ஒலி, ஒளி அலைவரிசைகளை இனி வடக்கிலும் தெளிவாகக் காண முடியும்.

(உ-ஐ-86-500)

## சரவணபவன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போது அரசினதும், தமிழ் அமைச்சர் ஒருவரினதும் தமிழர் விரோத நடவடிக்கை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கடுமையாக விமர்சித்திருந்தார். இதனாலேயே தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கலாம் என்று அவர் சந்தேகம் தெரிவித்தார். (உ)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2009**

இசைமாணி (2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்)
நடனமாணி (1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்)

06.06.2011 (திங்கட்கிழமை) தொடக்கம் 14.06.2011 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன. பரீட்சைகள் தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
06.06.2011

---

**இரண்டாம் ஆண்டு நினைவில்**



உதயம் 30 ★ 06 ★ 1950
அஸ்தமனம் 14 ★ 06 ★ 2009

**அமரர் கணபதிப்பிள்ளை முருகேசு**
(ஆசிரியர், மு/வவுனிக்குளம் படிவம் 4. அ.த.க. பாடசாலை)

நீங்கள் எமை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள்
எமை விட்டுப் பிரியாது.....
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.

தாய், சகோதரர்கள்
மற்றும் குடும்பத்தினர்.

---

**எமது கண்ணீர் அஞ்சலி**



பிரபல ஆங்கில ஆசிரியர்
நிசாந்தன்
அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா கனகரெட்ணம்**
(ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி, இலங்கை இராணுவம்)

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொருளியற்கல்லூரி
யாழ்ப்பாணம் - இணுவில்
BARATHY-சித்தங்கேணி.

இயக்குநர்:
ஆசிரியர்களும்,
பணியாளர்களும்.

---

**பண்பாளனுக்குப் பவள விழா!**





திரு.ஐயம்பிள்ளை தனபாலசிங்கம்
(சமாதான நீதவான்)
07.06.2011



வாழ்த்துவோர்...
கஜருபன், ஜெனா,
திஷா, தேனுஷா
வவுனியா.

---

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் பிரதி அதிபர்
திருமதி சத்தியகலா அருணகிரிநாதன்
அவர்களின் தாய்
அமரர் மகேஸ்வரி திருநாவுக்கரசு

அவர்கள் 03.06.2011 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/ ஆனைப்பந்தி மெ.மி.வி.

---

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி**

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதிற்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக் கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப் பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது-

தவறான வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, எழுத்துப் பயிற்சியையோ நாம் வழங்குவதில்லை மாறாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய்மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் 11.06.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 a.m.
பிரிவு II 10 - 12 a.m.
பிரிவு III 01 - 03 p.m.
பிரிவு IV 03 - 05 p.m.

03 மாத பயிற்சிநெறிக் கட்டணம்
ரூபா 3500.00

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு, மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியும் ... உத்தரவாதம்.

SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி பின்புறம்)
Tel: 0776214567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கீடு
A/L 2011 / DAY
Paper பங்குடமை
திங்கள், புதன், வெள்ளி 6am
ஆரம்பம்:- நாளை
Model Paper செவ், வியாழன் 6am
ஆரம்பம்:- வியாழன்.
Universal கந்தர்மடம். யாழ்ப்பாணம்.
S.திவா

**படிவம் விற்பனையாகிறது**
சுற்றாடல் அமைச்சு
1. சாரதி - வகுப்பு III
2. உதவியாளர் - வகுப்பு III(தகைமை O/L)
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

# பவுஸர் மோதி குடும்பஸ்தர் பலி

கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பவுஸர் வாகனம், கைதடிப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபரை மோதியதில் பிரஸ்தாப நபர் ஸ்தலத்திலேயே பலியானார்.

இந்த விபத்து ஏ-9 வீதியில், கைதடிப் பிள்ளையார் கோயிலை அண்மித்த பகுதியில் மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

கணபதிப்பிள்ளை கனகராசா (வயது-42) என்பவரே பலியாணார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். இதேவேளை, பவுசர் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதியை கைது செய்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4-288)

# மரண அறிவித்தல்



**சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (பாலா)**

பண்டாரிக்குளம், வவுனியாவை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் வவுனியா, கரப்பன் காட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருநாவுக்கரசு கடந்த (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கரப்பன்காடு வவுனியா. (1735) மனைவி (வவா)

**பொருளியல் கருத்தரங்கு A/L 2011**
யாழ். நகர் DMI | S.S.சிறி | வடமராட்சியில் CRYSTAL(நெல்லியடி)
* விரும்பிய மாணவர்கள் அனைவரும் இரண்டு நிறுவனங்களிலும் பதிவுகளை மேற்கொள்ளவும்.
* (10.06.2011) இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
* 12 தேர்ச்சிகளுக்கும் 12 வெளியீடுகள் வழங்கப்படும்.
* பல்தேர்வு, கட்டுரை, கட்டமைப்பு ரீதியான எதிர்பார்க்கை குறிப்புகள் வழங்கப்படும்.

**A/L 2012 புதிய பிரிவு**
கணக்கீடு
A.P. பகீரதன் B.B.A. (Fm. Spl)
கிரயக் கணக்கீடு
Tue, Thu, - 4.00-6.00pm
ஆரம்பம்:- 07.06.2011 (Tue 4.00pm)
NEC / பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

# கூறுவிலை கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் மாமுனை மாதிரிப் பனம் பண்ணை மற்றும் கிளிநொச்சி பிராந்திய அலுவலகம் ஆகியவற்றின் காணிகளுக்கு வேலி, கேற் அமைப்பதற்கான கூறுவிலை கோரப்படுகிறது. மேற்படி வேலைகளுக்கான மேலதிக விவரங்களை எமது தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பெற்று 16.06.2011 திகதிக்கு முன்னர் தங்கள் கூறுவிலைகளை பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை. பசுபதி சீவரத்தினம்.

# 31ஆம் நாள் நினைவும்
## நன்றி நவிலலும்

தோற்றம் 1966.02:11
மறைவு 2011.05.08

**சிவஸ்ரீ யோகீஸ்வரக்குருக்கள் பிரபாகரேஸ்வரக்குருக்கள்**

(யாழ்.அத்தியடி ஆலய பிரதமகுரு, மண்டை தீவு முகப்புவயல் முருகன் ஆலய பிரதமகுரு)



கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் எய்திய எமது குடும்பத்தலைவர் சிவஸ்ரீ யோகீஸ்வரக்குருக்கள் பிரபாகரேஸ்வரக்குருக்கள் அவர்களின் மறைவுகேட்டு மரணச்சடங்கு மற்றும் ஏனைய அபரக்கிரியைகளிலும் பங்கு கொண்ட அனைவருக்கும், மருத்துவசிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், ஊழியர் அனைவருக்கும் மரணச்செய்தி கேட்டு தொலைபேசிமூலம் தமது அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் மற்றும் அன்னாரது கிருஹயக்ஞ்யம் நிகழ்விலும், (21.05.2011) சனிக்கிழமை நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டம் மற்றும் மதிய போசனத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமக்கு வெகுவிரைவில் அன்னாரது நினைவுபுத் தகத்தினை அச்சிட உதவிய கோப்பாய் சிவானந்தசர்மா (இணுவில்) மற்றும் மதிகலர் பிறிண்டேர்ஸ், சிவரஞ்சன் ஒவ்செற் பிரிண்டஸ் மற்றும் சகலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது உள்ளம் கலந்த நன்றிகளை மனமார தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி- பி.நாகேஸ்வரி மற்றும்
யோகீஸ்வரக்குருக்கள் அத்தியடி.
தொலைபேசி: 021 222 9450
(49,20,52)

**காணி விற்பனைக்கு**
கந்தர்மடம், பலாலி வீதி, இந்து மகளிர் வீதியில் அமைந்துள்ள 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0773906158

**புதிய முதலீடு**
50,000/- க்கு மேல் மாத வருமானம்
ஐஸ் கிரீம் இயந்திரம்
கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.
* ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
* சுயமாகவே தயாரிக்கும் திறன்.
* இலவச பயிற்சி
225, 000/=

தொடர்புகளுக்கு:-
0775833045, 0776007775.

**கோலாகலக் கொண்டாட்டம் அதிரடி விலைக் கழிவுகளில்**
இச்சலுகை 03.06.2011 முதல் 12.06.2011 வரை மட்டுமே!!
SAMSUNG PRINTERS

TOSHIBA LAPTOPS

யாழ். மாவட்டத்திலே SAMSUNG Printers &Toners ,Toshiba LabTop ஆகியவற்றை குறைந்த விலையில் நிறைந்த உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்
PC PARADISE
61,மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகில்)
Tel : 021 222 9579

**உடனடி வேலைவாய்ப்பு (ஆங்கிலப் போதனாசிரியர்)**

Gateway நிறுவனத்தின் சாவகச்சேரி கிளைக்கு ஆங்கிலப் போதனாசிரியர் பணிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
தகுதி,அனுபவத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
முழுமையாகவோ பகுதிநேரமாக பணியாற்றலாம்.
கல்விப் சான்றிதழ்களுடன் இன்றும் நாளையும் நேரில்வரவும்.
'GATEWAY CENTRE'
UTHAYAN IT ISLAND
New Market Building, Chavakachcheri.
T.P: 227 0323
(48)

# மரண அறிவித்தல்

**திருமதி நட்சத்திரம் சுவாம்பிள்ளை**
(வட்டப்புலம், இளவாலை)



வட்டப்புலம், இளவாலையை பிறப்பிடமாகவும் Colombo, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நட்சத்திரம் சுவாம்பிள்ளை 01.06.2011 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும் திரு.திருமதி செந்தூரி பிலிப்பாச்சி அவர்களின் மகளும் காலஞ்சென்ற மனோகரி மற்றும் சிசடொமினிக்கா (றஞ்சி), பற்றீசியா (பேபி), செல்வதி (ராணி), சறோறினி (மலர்), ஜெனிற்றா (வபா), அன்ரன் தேவராஜ் (றஞ்சன்), அன்ரன் ஞானராஜ் (றஞ்சித்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற றோசம்மா (சிஸ்ரர் லெனோர்), சுவாம்பிள்ளை, சேனாதிராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2011 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து, பூதவுடல் புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜேஸ்வரன் (மருமகன்-றஞ்சன்)
(வன்னிமாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், வவுனியா மாவட்டம்)

வட்டப்புலம்,
இளவாலை. (4712)

**வேலை வாய்ப்பு**
கணினி ரைப்செற்றிங் செய்வதில் அனுபவம் உள்ளவர் தேவை.
(Photoshop, Pagemaker தெரிந் திருத்தல் அவசியம்)
தொடர்பு: 0770366123

A/L ? Pass / Fail
SMS your name & course to 772395895 & Get Schol.
CIMA-UK | Engineering-USA | BIT University of Colombo | Multimedia Adobe
Government Scholarship.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 11.06.2011

MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free : BCS-UK , IELTS / TOEFL, CISCO-CCNA , Hardware, ICDL

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org